Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 01, இதழ் : 208 சார்வரி வருடம், பங்குனி மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை (07.04.2021) ஹிஜ்ரி - 1442, ஷாபான் பிறை - 24, 0115886187 - பக்கங்கள் 16 விலை ரூ.30

ஜனாதிபதி செயலாளர் பதவியில் மாற்றங்கள் வரலாமென அரசல் புரசலாக பேசப்படுகிறது.

அந்த இடத்திற்கு முன்னை நாள் அதிகாரியொருவர் நியமிக்கப்படவுள் ளாராம். இப்போதுள்ள வருக்கு வேறொரு உயர்பதவி வழங்கப்பட வுள்ளதாகவும் பேச்சு.




## நக்கல் நமசிவாயம்

‘தேங்காயெண்ணையில இரசாயனம் கலந்திருக்குதெண்டா ஏனுங்கோ பாம் ஒயிலை தடை செய்தவ...’



# நௌபர் மௌலவியே பிரதான சூத்திரதாரி



## ஈஸ்டர் தின தாக்குதல்கள் குறித்து அமைச்சர் சரத் வீரசேகர விசேட அறிவிப்பு

02ஆம் பக்கம்

## வீதி விபத்து: 24 மணித்தியாலங்களில் 09 பேர் பலி

02ஆம் பக்கம்



## புர்காவை தடைசெய்ய பேச்சு தொடர்கிறது

02ஆம் பக்கம்

## தமிழக தேர்தலில் 71.79 வீத வாக்களிப்பு




14ஆம் பக்கம்

## ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இன்றுமுதல் போசணை பிஸ்கட்



•சபை நிருபர்கள்

ஆரம்பப் பிரிவிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் போசணையுள்ள பிஸ்கட்களை இன்றுமுதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி மற்றும் ஆரம்பக் கல்வி இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக் காலை 10 மணிக்குக் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி... 02ஆம் பக்கம்

## அதிபர் – ஆசிரியர்கள் பதுளையில் ஆர்ப்பாட்டம்

## 538 பாடசாலைகள் முடக்கம்

06ஆம் பக்கம்



## உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்: பொறுப்பை நிறைவேற்றத் தவறியோருக்கு உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை

### அமைச்சர் சமல் அறிவிப்பு

•யோ.தர்மராஜ்

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலைத் தடுப்பதற்கு போதுமான காலப்பகுதி காணப்பட்டுள்ளது. எனினும், தங்களுடைய பொறுப்புகளை நிறை வேற்றத் தவறியவர்களுக்கு எதிராக சட்டரீதியாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கப்பால் உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உப குழு பரிந்து ரைத்துள்ளதாக அக்குழுவின் தலைவர், அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை... 02ஆம் பக்கம்



## இனவாத சிந்தனைகொண்ட கோட்டாவுக்கு மூன்று முகங்கள்

### சபையில் சிறிதரன் எம்.பி. காரசாரப் பேச்சு

•சபை நிருபர்கள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சர்வதேசத்துக்கு ஒரு முகத்தையும், சிங்களவர்களுக்கு ஒரு முகத்தையும், தமிழர்களுக்கு ஒரு முகத்தையும் காட்டுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பான சட்டமூல விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். 02ஆம் பக்கம்

## கலப்புமுறைத் தேர்தலுக்கு அரசாங்கம் தயாராகிறது

•யோ.தர்மராஜ்

கலப்புமுறையில் மாகாண சபைத் தேர்தலை வெகு விரைவில் நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுப்பதற்கு அமைச்சரவையில் தெளிவான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை... 02ஆம் பக்கம்

## அரசாங்க பெருந்தோட்டங்களிலும் ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும்



### அமைச்சர் ரமேஷ் உறுதி

•சபை நிருபர்கள்

அரசாங்கத்துக்குச் சொந்தமான தோட்டங்களில் ஏப்ரல் மாதத்திலிருந்து பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுமென பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார். 02ஆம் பக்கம்

## ஏனைய பொருட்களில் விஷமா? மறுக்கிறார் அமைச்சர் கெஹேலிய



•யோ.தர்மராஜ்

இலங்கையில் தேங்காயெண்ணெயில் மாத்திரமல்லாது ஏனைய சில பொருட்களிலும் விஷத்தன்மை இருப்பதாக இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் கூறப்பட்ட கூற்றை தாங்கள் முழுமையாக நிராகரிப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அத்தோடு, இலங்கை கட்டளை நிறுவனம் தொடர்பாகவும் அந்த நிறுவனத்தினால்... 02ஆம் பக்கம்

## இலங்கையர்கள் நாடு திரும்ப முன்அனுமதி அவசியமில்லை

### வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிவிப்பு

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் முன்அனுமதி அவசியமில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவின்பேரில், நாடு திரும்பும் இலங்கையர்களுக்கு உதவும் பொருட்டு, நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கான நடைமுறையை வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மீளாய்வுசெய்தது. 02ஆம் பக்கம்

Dialog புதுவருடம்

அதிக நன்மைகளை பெற்றிடவும் வருடம் முழுதும் சுபீட்சம் அதிகரிக்கவும்



அன்புக்குரியவர்களுக்கு பரிசளிக்க தெரிவு செய்யப்பட்ட Smartphones களுக்கு

ரூ.36,000/- வரையில் விசேட விலைக்கழிவுகள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

அருகில் உள்ள Dialog வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் அல்லது dialog.lk க்கு சென்று online இல் Order செய்து பெற்றுக்கொள்ள முடியும்

Dialog எதிர்காலம் இன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி விபத்து...

***நா. தினுஷா***

நாட்டில் நேற்றுக்காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 9 பேர் வீதி விபத்துகள் காரணமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

''நாளாந்தம் வீதி விபத்துகளில் 8 அல்லது 9 பேர்வரை உயிரிழப்பது வழமையாக இடம்பெறுகிறது. வாகனங்களை செலுத்தும்போது மது அல்லது போதைப்பொருள் பாவனையை தவிர்த்துக்கொள்ளவேண்டும்'' - என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எதிர்வரும் 10ஆம் திகதி முதல் மது அல்லது போதைப்பொருள் பயன்படுத்திவிட்டு வாகனம் செலுத்துபவர்களைக் கைதுசெய்ய விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப் படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதிவிபத்துகளில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பில் அஜித் ரோஹண ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

விபத்துகளை தவிர்த்துக்கொள்ள சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். விசேடமாக சகல சந்தர்ப்பங்களிலும் அவதானத்துடனும் பாதுகாப்பாகவும் வாகனங்களை செலுத்த வேண்டும். அதிக வேகத்தில் வாகனம் செலுத்துதல், மதுபோதையில் வாகனம் செலுத்துதல் ஆகியவற்றை தவிர்த்துக்கொள்ளவேண்டும். அதேபோன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மதுபோதையில் வாகனம் செலுத்துபவர் ஒருவரின் வாகனத்தில் பயணிப்பதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் - எனத் தெரிவித்தார்.

## அரசாங்க பெருந்தோட்டங்களிலும்...

நாடாளுமன்றம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக் காலை 10 மணிக்கு கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் வருண லியனகே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா நாளாந்த கொடுப்பனவு குறித்து கேள்வி எழுப்பினார். “பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா நாளாந்த கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுப்பதாக அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் மூலமாக தெரியப்படுத்தியுள்ளது. ஆனாலும் அரசு நிர்வகிக்கும் தோட்டங்களிலும் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா கிடைக்கவில்லை என்றே கூறப்படுகின்றது. எனவே, இது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்” எனவும் அவர் சபையில் வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரமேஷ் பத்திரண,

அரசாங்கத்துக்குச் சொந்தமான தோட்டங்களில் ஏப்ரல் மாதத்திலிருந்து பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும். ஆயிரம் ரூபா சம்பளத்தை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்காத கம்பனிகளை அரசாங்கத்துக்கு சுவீகரிப்பதற்கான எந்தவிதமான யோசனைகளும் இல்லை. அனைத்து பெருந்தோட்ட நிறுவனங்களும் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்குமென நம்புகிறோம். இதுவொரு பாரிய வெற்றியாகும்.

இரத்தினபுரியில் காணிகளற்ற தோட்டக் குடும்பங்களுக்கு காணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். இரத்தினபுரி மாவட்டத்தில் தோட்டங்களில் 21 ஆயிரத்து 63 குடும்பங்கள் வசிக்கின்றன. இவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி, 2 ஆயிரத்து 414 குடும்பங்களுக்கு 177.9 ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டுள்ளன - என்றார்.

## இலங்கையர்கள்...

புதிய நடைமுறையின் கீழ் இலங்கையர்கள், இலங்கையின் கடவுச்சீட்டுகளில் பயணம் செய்யும் இரட்டைப் பிரஜாவுரிமையுடையவர்கள், வெளிநாட்டவர்களாக இருக்கும் இலங்கையர்களின் வாழ்க்கைத்துணை மற்றும் திருமணமாகாத பிள்ளைகள் மற்றும் விமானம் மூலம் வருகை தரும் இலங்கை மாலுமிகள் ஆகியோர் வெளிநாட்டு அமைச்சு மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை ஆகியவற்றின் முன்அனுமதியின்றி இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

எனினும், பயணிகளின் வருகையை நிர்வகிக்கும் பொறுப்பு சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், உள்ளூர் தனிமைப்படுத்தல் மற்றும் தேவையான வசதிகளை வழங்கும் வகையில் குறித்த அதிகாரசபை உரிய விமான நிறுவனங்களினூடாக வருகை தருபவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும்.

வருகைதரும் அனைத்துப் பயணிகளும் சுகாதார நெறிமுறைகள் மற்றும் விஜயத்தின்போது நடைமுறையிலிருக்கும் அனைத்து வழிகாட்டுதல்களையும் கட்டாயமாகப் பின்பற்றுதல் வேண்டும்.

## ஏனைய பொருட்களில்...

வெளியிடப்பட்டுள்ள கருத்து குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தேங்காயெண்ணெயில் மாத்திரமல்லாது பல உணவுப்பொருட்களிலும் விஷத்தன்மை அடங்கியுள்ளதாக இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் பணிப்பாளர் நாயகத்தினால் கூறப்பட்ட கூற்றை நாங்கள் முழுமையாக நிராகரிக்கின்றோம். இந்த விடயம் குறித்து தற்போது பல பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருகின்றன.

அடுத்தகட்ட நடவடிக் கைகள் குறித்து நாங்கள் வெகுவிரைவில் அறியத்தருவோம். எனினும், இலங்கை கட்டளை நிறுவனம் தொடர்பாகவும் அந்த நிறுவனத் தினால் வெளியிடப்பட்டுள்ள கருத்து குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன – என்றார்.

# 1000 ரூபா சம்பள அதிகரிப்பு தொழிலாளருக்கு பயனளிக்காது

## முதலாளிமார் சம்மேளனம் அறிவிப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளொன்றுக்கான ஆயிரம் ரூபா சம்பளமானது அவர்களுக்குப் பயனளிக்காது - என முதலாளிமார் சம்மேளனம் நேற்று அறிவித்துள்ளது.

இது தொடர்பில் முதலாளிமார் சம்மேளனத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது அனைவராலும் அதிகமாக பேசப்பட்டுவரும் விடயமான தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பாக இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தமது நிலைப்பாடு தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தோட்டத் தொழிலாளர்களுக்காக வழங்கப்படும் நாட்சம்பள முறைக்கு மாற்றுத் திட்டம் ஒன்றே முற்போக்கானது என்பதுடன், நாளொன்றுக்கு வெறும் 1000 ரூபாவை விட அதிகமாக சம்பாதிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை அளிக்குமெனவும் இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் வலியுறுத்துகிறது.

பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள், தங்கள் நடவடிக்கைகளை சட்டரீதியாக வெற்றிகரமாக மேற்கொண்டுவருவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 1000 ரூபா என்ற நிலையான ஊதியம் தொழிலாளிக்கு பயனளிக்காது என்றும், நீண்டகாலமாக முன்வைக்கப்படும் மற்றும் நிராகரிக்கப்படும் வருவாயைப் பெற்றுக்கொள்ளும் மாதிரியானது, தோட்டத் தொழிலாளியின் சம்பாதிக்கும் திறனில் பாரிய நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும் என சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“தற்போது நடைமுறையிலுள்ள காலாவதியான பாரம்பரிய ஊதிய முறைமையிலிருந்து விலகிச்செல்வதற்கு இதுவொரு சிறந்த வாய்ப்பாக இருப்பதுடன், அதனூடாக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாரியளவில் மேம்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிட்டும்” - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலப்புமுறை தேர்தலுக்கு...

அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது மாகாண சபைத் தேர்தல் குறித்து ஊடகவியலாளரினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக தெளிவான தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளது. எங்களுடைய தேர்தல் வாக்குறுதிகளுக்கமைய விருப்பு வாக்கு முறைமை நீக்கப்பட்டு, 15 வருடங்களுக்கு முன்பிருந்து பேசப்பட்டுவரும் 70 க்கு 30 என்ற கலப்பு தேர்தல் முறையிலும் தொகுதியை நிர்ணயம் செய்வது எந்த முறையில் என்பதையும் வெகுவிரையில் முன்னெடுத்து தேர்தலை நடத்துவதற்கே அமைச்சரவையில் நேற்றும் (நேற்று முன்தினம்) பேசப்பட்டது – என்றார்.

## ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு...

நேரத்தில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண, கர்ப்பிணிப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் வழங்கப்படும் திரிபோஷவை அந்தத் குடும்பத்தில் உள்ளவர்கள் மாலைவேளையில் உட்கொள்வதாகவும் திரிபோஷ முறையாக குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் கிடைக்கிறதா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு விசாரணைக்குழுவை நியமிக்கவேண்டுமெனவும் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் மேலும் பதிலளிக்கையில்,

குறைந்த வருமானங்களைப்பெறும் குடும்பங்களை கருத்திற்கொண்டு திரிபோஷ வழங்கப்படுவதில்லை எனவும், குழந்தை பெற்றெடுக்கும் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், குறைந்த நிறையுடன் பிறக்கும் குழந்தைகளுக்கும் 6 மாதங்களிலிருந்து 5 வயது வரையில் வழங்கப்படும் என்றார்.

அத்துடன் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் திரிபோஷ நிறுவனத்தினூடாக போசணையுள்ள பிஸ்கட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், இதற்காக ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியிருப்பதாகவும், இன்று முதல் போசணையுள்ள பிஸ்கட்கள் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

## புர்காவை தடைசெய்ய...

***யோ.தர்மராஜ்***

புர்கா தடை விவகாரம் குறித்து அரசாங்க மட்டத்தில் முழுமையான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையில் கூறியது ஏன் நடக்கவில்லை மற்றும் ஏன் தாமதப்படுத்தப்படுகின்றது போன்ற கேள்விகள் எழுப்புவது பொருத்தமற்றது என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது, புர்கா தடை விவகாரம் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் ஒருவர் அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஏதேனும் ஒரு முடிவை எடுக்க முடியும். அந்த முடிவுகள் அமைச்சரவைக்கு வரும் போது, இந்த விடயம் தற்போதைய சமயத்தில் பேச்சுவார்த்தைக்கு எடுப்பது பொருத்தமற்றதென தீர்மானித்து அதனை ஒத்திவைக்கலாம். இது ஒரு சாதாரண விடயமாகும். ஆனால், ஏன் கூறிய விடயம் நடக்கவில்லை என்றும், ஏன் காலதாமதம் ஏற்படுகின்றது என்றும் கேட்பது பொருத்தமற்றது.

இதேவேளை, அமைச்சர் என்ற ரீதியில் யாரும் தங்களுடைய நிலைப்பாட்டை அறிவிக்கமுடியும். எனினும், அமைச்சர்கள் தங்களுடைய நிலைப்பாட்டை அறிவித்தவுடனேயே அது நாட்டின் சட்டமாக அமையாது. முதலில் அமைச்சரவைக்கு வந்து அங்கு அனுமதி வழங்கப்படும். நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நிறைவேற்றப்படும். இந்தக் காலப்பகுதிக்குள் அந்த முடிவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம். இவையனைத்தும் முழுமையான பேச்சுவார்த்தைகளின் மூலம் முன்னெடுக்கப்படும் விடயம். ஊடக அமைச்சர் என்ற ரீதியில் நான் சில விடயங்களை முன்னெடுக்கவேண்டுமென கூற முடியும். எனினும், அது அமைச்சரவையில் முன்வைக்கப்படும்போதும், முழுமையான கலந்துரையாடலின்போதும், சில சில விடயங்களை முன்னெடுப்பதற்கும், சில சில விடயங்களை கைவிடுவதற்கும் முடிவெடுக்கப்படும். இவ்வாறான பேச்சுவார்த்தைகள் நாட்டுக்கே நல்லது – என்றார்.

## இனவாத சிந்தனை கொண்ட...

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அண்மைக்கால பேச்சுகள் ஜனாதிபதியின் இனவாத சிந்தனையை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. மாத்தறையில் அண்மையில் உரையாற்றியிருந்த ஜனாதிபதி அதிகாரப் பகிர்வுக்கு இடமில்லை என்று கூறியிருந்தார்.

ஜனாதிபதி, சிங்கள மக்களிடத்தில் ஒரு முகத்தையும், தமிழ் மக்களிடம் இன்னொரு முகத்தையும், சர்வதேசத்திடம் மற்றொரு முகத்தையும் காண்பிக்கிறார். இதுவொரு சிங்கள நாடு, தமிழர்கள் எனக்குத் தேவையில்லை. நானே தமிழர்களை பிரித்துவிடுகின்றேன் என்றே செயற்படுகின்றார்.

ஜனாதிபதி அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை, தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கான சிந்தனை ஜனாதிபதியின் அடிமனதில்கூட இல்லை. இராணுவ துப்பாக்கிமுனையில் சிந்திக்கும் தலைவராக ஜனாதிபதி தன்னை அடையாளப்படுத்துபவராக உள்ளார். அப்படி அவர் இருந்தால் நாடு விரைவில் அதலபாதாளத்தை நோக்கிச்செல்லும்.

ஜனாதிபதி ஊடகங்கள் மீது அதிகளவில் கோபப்படுகிறார். ஊடகவியலாளர்களை தாக்கவும், கட்டுப்படுத்தவும் ஜனாதிபதி முயற்சிக்கின்றார். ஊடகவியலாளர்கள் பலர் இந்நாட்டில் காணாமலாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டும் உள்ளனர்.

இந்தக் கொலைகளை செய்தவர்கள் தற்போது நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் நிமலராஜனை கொலைசெய்தவர், தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சராக உள்ளார் - என்றார்.

## நௌபர் மௌலவியே...

***யோ.தர்மராஜ்***

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு சிறையிலுள்ள நௌபர் மௌலவி மற்றும் ஹஜ்ஜுல் அக்பர் ஆகியோரே தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அத்தோடு, சாரா ஜெஸ்மின் உயிரோடு இருக்கின்றாரா இல்லையா என்பது குறித்து இதுவரை உறுதியான எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் இறுதி நடவடிக்கைகள் என்ற தொனிப்பொருளில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற 8 தாக்குதல்கள் தொடர்பான சாட்சியங்கள் அடங்கிய 8 தொகுப்புகள் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இதில் மனிதக் கொலை மற்றும் அமைதிக்கான முயற்சிகளை சீர்குலைக்க சூழ்ச்சிசெய்த குற்றச்சாட்டுகளில் 32 பேருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கான சாட்சியங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனினும், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை கிடைக்கும்வரை இந்த 32 பேருக்கு எதிராக சட்ட மா அதிபர் வழக்கு தொடராதிருந்தார். இந்நிலையில், தற்போது கிடைக்கப்பெற்றுள்ள ஆணைக்குழு அறிக்கைக்குப் பின்னர் சாட்சியங்களில் முரண்பாடுகள் இருக்கின்றனவா என்பதை 12 பேர் அடங்கிய குழுவினர் ஆராய்ந்து வருகின்றனர். அதனடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிர்காலத்தில் வழக்கு தொடர்வதற்கான நடவடிக்கைகளை சட்ட மா அதிபர் முன்னெடுப்பார்.

எட்டு தாக்குதல் தொடர்பாக பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளைக்கொண்டே 32 பேருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கான சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டன. எனினும், தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமையவே, இதுவரை 75 பேர் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்படுவதுடன், 211 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த 211 பேரிலேயே வழக்கு தொடரவேண்டிய 32 பேரும் இருக்கின்றனர்.

இது குறித்த விசாரணைகள் 75 பேரிடம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதால் விசாரணை நிறைவுசெய்யப்பட்டதன் பின்னர் வழக்கு தொடர்வதற்குத் தேவையான சாட்சியங்கள் சட்ட மா அதிபருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் சாட்சியங்கள் மற்றும் நாங்கள் முன்வைத்துள்ள குறித்த 8 தொகுப்புகளைக்கொண்டு சட்ட மா அதிபரே வழக்கு தொடரவேண்டும். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக நாங்கள் நம்புகின்றோம் - என்றார்.

இதனையடுத்து, தாக்குதலின் பிரதான சூத்திரதாரி மற்றும் சாரா ஜெஸ்மின் தொடர்பாக ஊடகவியலாளரினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளித்தார்.

நௌபர் மௌலவி மற்றும் ஹஜ்ஜுல் அக்பர் ஆகியோரே உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

2014ஆம் ஆண்டு ஈரானில் ஐ.எஸ். மதவாதத்தை கொண்டுவந்த பக்தாதி என்பவருடன் இணைந்து நௌபர் மௌலவி ஐ.எஸ். கொள்கைகளை இலங்கைக்குள் கொண்டுவந்துள்ளார். இவராலேயே சஹ்ரான் மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளார். சஹ்ரான் 2016ஆம் ஆண்டே இதற்குள் இணைந்துள்ளார்.

எனினும், நௌபர் மௌலவி தற்போது சிறையில் இருப்பதோடு, வழக்குத் தொடர வேண்டிய 32 பேரில் இவரும் ஒருவராக இருக்கின்றார்.

அதன்படி, நௌபர் மௌலவியும் ஜமாத்தே இஸ்லாமி அமைப்பின் உறுப்பினரான ஹஜ்ஜுல் அக்பர் என்பவருமே பிரதான சூத்திரதாரிகளாக பொலிஸாரினால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சஹ்ரான் போன்றோர் தற்கொலை குண்டுத்தாக்குதலில் இறந்தனர். எனினும், தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதனால் மேலும் பலர் அடையாளம் காணப்படலாம்.

இதேவேளை, சாரா உயிரிழந்துள்ளாரா இல்லையா என்பது குறித்து எங்களால் தற்போது கூற முடியாது. முதல் டி.என்.ஏ. பரிசோதனையிலும் அது உறுதிப்படுத்தப்படவில்லை. குண்டு வெடிப்பில் சிதைந்து காணப்பட்ட உடற்பாகங்களைக்கொண்டு எடுக்கப்பட்ட டி.என்.ஏ. மற்றும் சாராவின் தாயாரின் டி.என்.ஏ.வையும் ஒப்பிட்டு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையிலும் அடையாளம் காணப்படவில்லை.

அத்தோடு, தாக்குதலில் சிதைந்த உடற்பாகங்கள் அதிகமாக இருப்பதால் அதிக பரிசோதனைகளை முன்னெடுக்கவேண்டியுள்ளது. எனினும், இதுவரை பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவில்லை.

அதனால், சாரா இறந்துள்ளாரா இல்லையா என்பது குறித்து எங்களுக்கு உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

ஒருவேளை, சாரா உயிரோடு இருந்தால் சர்வதேச பொலிஸ் ஊடாக சிவப்பு எச்சரிக்கை விடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். மேலும், சாரா இந்தியாவிற்குச் சென்றுள்ளதாக கூறப்பட்டாலும் அது தொடர்பாக முன்னெடுக்கப்பட்டதில் எவ்வித உறுதியான தகவல்களும் கிடைக்கவில்லை.

தாக்குதலுடன் தொடர்புடையதாக வெளிநாட்டில் கைதுசெய்யப்பட்ட 54 பேரில் 50 பேர் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். அவ்வாறாயின் சாரா உயிரோடு இருந்தால் அவரை இலங்கைக்கு கொண்டுவருவதில் எவ்வித சிக்கலும் இருக்காது – என்றார்.

## உயிர்த்த ஞாயிறு தின...

ஆணைக்குழு அறிக்கையின் இறுதி நடவடிக்கைகள் என்ற தொனிப்பொருளில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் குறித்து பரிசீலனைசெய்ய நியமிக்கப்பட்ட என்னுடைய தலைமையிலான குழுவினால் 70 விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. அதன்படி, அறிக்கையிலுள்ள சட்டரீதியான பரிந்துரைகளை ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு வழக்கு தொடர்வது சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

தாக்குதலை தடுப்பதற்கு இடமிருந்ததா என்பது குறித்து நாங்கள் ஆராய்ந்தோம். அதற்கமைய, தாக்குதலை தடுப்பதற்கு போதுமான காலப்பகுதி இருந்துள்ளது. எனினும், தாக்குதல் தடுக்கப்படாதது ஏன்? அழுத்தம் கொடுத்தது யார்? தேவையிருந்தும் தடுக்காதிருந்தனரா? என்பது குறித்தும் நாங்கள் கலந்துரையாடினோம். பொலிஸார் முறையாக செயற்பட்டிருந்தால் உரிய நேரத்தில் தாக்குதலை தடுத்திருக்க முடியும். இதேவேளை, இதனுடன் தொடர்புடையவர்களை தாக்குதலுக்கு முன்னரே கைதுசெய்திருக்க முடியும். எனினும், அந்த செயற்பாடு முன்னெடுக்கப்படவில்லை.

ஆகவே, பொறுப்புக்கூற வேண்டிய அனைவருக்கு எதிராகவும் சட்டரீதியாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அப்பால் உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கையே எடுக்க முடியும். தங்களுடைய பொறுப்பை தட்டிக்கழித்தல், பொறுப்பை உணராதிருந்தமையினால் இவ்வாறான பாரிய தாக்குதல் சம்பவம் ஏற்பட்டிருக்காது.

இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு உரிய அமைச்சரின் ஊடாக பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அவர்களுக்கு கட்டாய விடுமுறை வழங்கப்படலாம், இடைநிறுத் தப்படலாம் அதன் பின்னர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம். இது விரைவாக முன்னெடுக்கப்படலாம். இதற்கு தேவையான பரிந்துரைகளை நாங்கள் வழங்கியுள்ளோம்.

இதேவேளை, விஜேதாச ராஜபக்ஷவின் அறிவிப்பு கருத்திற்கொள்ளப்படாதது குறித்தும் அப்போதைய அரசாங்கம் பொறுப்புக் கூறவேண்டும். இவருடைய கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து - கருத்து தெரிவித்து பலரைப் பாதுகாப்பதற்கும் அவர்களை விடுதலைசெய்ய பேசப்பட்டது குறித்தும் ஆராயவேண்டியுள்ளது.

அதன்பின்னர், மாவனெல்ல சம்பவம் தொடர்பாக ஆராய்ந்தபோது, சில சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கெதிராக பி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் அந்த விசாரணைகள் ஏன் நிறுத்தப்பட்டன? இந்தச் சம்பவம் குறித்து குற்றப்புலனாய்வுத்துறை விசாரணை செய்ததா என்பது குறித்து ஆராயப் பட்டுள்ளது. இச்சம்பவங்கள் குறித்து விசேட பொலிஸ் குழு கொண்டு மீண்டும் விசாரணை நடத்தவேண்டும்.

வில்பத்துவ பகுதியில் வெடிபொருட்களுடன் கைதுசெய்யப்பட்டவர்கள் விடுதலைசெய்யப் பட்டனர். இவர்களை விடுதலைசெய்ய முன்னாள் ஜனாதிபதி கைச்சாத்திட்டுள்ளார். எனினும், கைச்சாத்திடுவதற்கு கொண்டுவரப்பட்ட அதிகாரி இது குறித்தும் தகவல்களை மறைத்து ஜனாதிபதியிடம் கொடுக்கப்பட்டதா என்பது குறித்தும் மீண்டும் ஆராயவேண்டியுள்ளது.

2015ஆம் ஆண்டு புலனாய்வுத்துறையின் பிரதானியாக இருந்தவர் சஹ்ரான் தொடர்பாக பாதுகாப்புச் சபையில் தெரிவித்தபோது, முன்னாள் பிரதமர் இந்த விடயத்தை முற்றாக நிராகரித்துள்ளார். அதன்பின்னர் என்ன நடந்தது என்பது குறித்து ஆராயவேண்டியுள்ளது.

2015ஆம் ஆண்டு தேர்தலின்போது சஹ்ரான் மற்றும் அவருடைய குழுவினர் முன்னாள் கிழக்கு மாகாண உறுப்பினர் சிப்லி பாரூக்குடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆதரவு வழங்கியுள்ளார். பின்னர் முஸ்லிம் காங்கிரஸுக்கு அப்போதைய அரசாங்கத்தில் முக்கிய அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இவர்கள் சஹ்ரானுக்கு உதவிகளை வழங்கியுள்ளார்களா என்பதையும் ஆராயவேண்டும்.

இரு பொலிஸார் கொலைசெய்யப்பட்ட பின்னர் அந்தச் சம்பவத்தை மூடிமறைப்பதற்கு விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய இருவர் கைதுசெய்யப்பட்டமை குறித்து ஆராயவேண்டும்.

சஹ்ரானை கைதுசெய்யுமாறு சூபி அமைப்பு ஜனாதிபதி செயலகம், நீதியமைச்சு, பொலிஸ் உள்ளிட்ட பலருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர். அதன்பின்னர் காத்தான்குடியில் சஹ்ரானை கைது செய்யுமாறு போராட்டமும் நடத்தப்பட்டுள்ளது. எனினும், எவ்வித செயற்பாடுகளும் முன்னெடுக்கவில்லை. இது குறித்தும் மீண்டும் பொலிஸார் விசாரணைசெய்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதேவேளை, சில முஸ்லிம் தலைவர்கள், கட்சிகள் மற்றும் பயங்கரவாதிகளுக்கு நிதியுதவிகளை வழங்கிய ஹிப்ராயின் என்பவருக்கு நிதியுதவிகளை வழங்க ஆதரவு வழங்கியது யார், அந்த நிதி எங்கு பகிரப்பட்டுள்ளது, அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதை ஆராயவேண்டும் என்பதோடு, இவ்வாறானவர்களை தேசிய பட்டியலினூடாக நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்த கட்சிக்கு இவர் தொடர்பான தகவல்கள் தெரிந்திருந்தால் அதனை உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தாது அவரை பாதுகாத்து வைத்திருப்பது பாரிய குற்றமாகும். இது குறித்து விசேடமாக ஆராயவேண்டும் என எங்களால் பரிந்துரைக்கவேண்டியுள்ளது.

தாக்குதல் நடத்தப்படும் இடங்கள் குறித்து தகவல்கள் கிடைத்தும், உரிய முறையில் செயற்பட்டு தாக்குதலை தடுக்காதிருந்தமையினால் பொலிஸ்துறையும் பொறுப்புக் கூறவேண்டியுள்ளது. எனினும், இவ்வாறான சம்பவம் மீண்டும் நடக்காதிருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே எங்களுடைய முக்கிய தேவையாகவும் எங்களுடைய குழுவின் பரிந்துரையாகவும் இருக்கின்றது – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுபலசேனா மீதான தடையை எங்களால் தீர்மானிக்க முடியாது

## அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



யோ.தர்மராஜ்

ஆணைக்குழு அறிக்கையில் பொதுபல சேனா அமைப்பு தடைசெய்யப்படவேண்டும் என்பது தொடர்பாக பரிந்துரைக்கப்பட்டுள்ளமை குறித்து சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்குப் பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவை உப குழுவின் தலைவரும் அமைச்சருமான சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் இறுதி நடவடிக்கைகள் என்ற தொனிப்பொருளில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆணைக்குழு அறிக்கையில் பொதுபல சேனா அமைப்பு தடைசெய்யப்படவேண்டும் என்பது தொடர்பாக பரிந்துரைக்கப்பட்டுள்ளமை குறித்து சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்குப் பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தாக்குதல் தொடர்பான ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிங்கள் முன்வைக்கப்பட்டிருந்தாலும் அது தொடர்பாக பொலிஸார் விசாரணை செய்யவேண்டும். அதன்பின்னர் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்குப் பின்னரே அடுத்தகட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

பொதுபல சேனா தடைசெய்யப்படுவது குறித்து ஆணைக்குழுவில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையில் நாங்கள் எவ்வித மாற்றத்தையும் செய்யவில்லை – என்றார்

# புத்தாண்டு சுபநேர பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிப்பு





சிங்கள - தமிழ்ப் புத்தாண்டு சுபநேர பத்திரம் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

பாரம்பரியங்களுக்கேற்ப சுபநேரங்களை அடையாளப்படுத்திய பத்திரம் தேசிய மரபுரிமைகள், அரங்கு கலை மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

புதுவருடப் பிறப்பு, புண்ணியகாலம், உணவு சமைத்தல், அடுப்பு மூட்டுதல், உணவு பரிமாறுதல், தலைக்கு எண்ணெய் வைத்தல் மற்றும் தொழிலுக்காக புறப்படுதல் ஆகிய விடயங்கள் சுபநேர பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, தேசிய மரபுரிமைகள், அரங்கு கலை மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் நிஷாந்தி ஜயசிங்க, கலாசார அலுவல்கள் பணிப்பாளர் தரணி அனோஜா கமகே ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஸஹ்ரானுக்கு மஹிந்த அரசு சம்பளம் வழங்கவே இல்லை

## அடித்துக் கூறுகிறார் அமைச்சர் சரத் வீரசேகர



யோ.தர்மராஜ்

ஸஹ்ரானுக்கு அப்போதிருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் சம்பளம் வழங்கவில்லை என்பதை பொறுப்புடன் கூறுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் இறுதி நடவடிக்கைகள் என்ற தொனிப்பொருளில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஸஹ்ரானுக்கு சம்பளம் வழங்கி அவரை வளர்த்து அப்போது ஆட்சியிலிருந்து எங்களுடைய அரசாங்கம் என்று கூறுவது முற்றிலும் பொய்யானது. அவ்வாறு சம்பளம் வழங்கியதற்கு சாட்சியங்கள் இருக்குமாக இருந்தால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். எனினும், அப்போதிருந்த அரசாங்கம் ஸஹ்ரானுக்கு சம்பளம் வழங்கவில்லை என்பதை தெளிவாக கூற முடியும்.

அவருடைய அறை மற்றும் இடங்களில் 300 இலட்சம் ரூபா கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்வாறான பாரியளவாக பணம் வைத்திருந்த ஸஹ்ரான், அரசாங்கத்தில் வழங்கப்படும் சம்பளத்திற்காக வேலை செய்வார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆகவே, ஸஹ்ரானுக்கு யாரும் பணம் வழங்கியிருந்தால் அதனை பொது வெளியில் பேசிக்கொண்டிருக்காது, சாட்சியங்களை உரிய தரப்பிடம் வழங்குங்கள். விசாரணைசெய்யப்படும். ஆனால், ஸஹ்ரானுக்கு அரசாங்கத்தினால் சம்பளம் வழங்கப்படவில்லை என்பதை பொறுப்புடன் கூறிக்கொள்கின்றோம் - என்றார்.

# தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்தியப் பிரஜை உயிரிழப்பு

**குளியாப்பிட்டியில் புத்தர் சிலைக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்தியப் பிரஜை உயிரிழந்துள்ளார்.**

**வாரியபொல சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 45 வயதுடைய குறித்த நபருக்கு நேற்று முன்தினம் மூச்சுத்திணறல் ஏற்பட்டதைத் தொடர்ந்து வாரியபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.**

**இந்நிலையில், குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.**

# பொலிஸாரென தெரிவித்து 5 பவுண் நகை கொள்ளை

(வவுனியா நிருபர்)

வவுனியாவின் பல்வேறு பகுதிகளில் பொலிஸார் என தெரிவித்து 5 பவுண் நகை கொள்ளையிடப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காரொன்றில் சென்ற குறித்த நபர்கள் வவுனியா தம்பனைபுளியங்குளம் மற்றும் பத்தினியார் மகிழங்குளம் பகுதிகளிலுள்ள வீடுகளுக்குச் சென்று, தங்களை பொலிஸார் என அடையாளப்படுத்திக்கொண்டு, வீட்டை சோதனை செய்யவேண்டும் என்று கூறியுள்ளனர்.

அதனை நம்பி வீட்டின் உரிமையாளர்கள் அவர்களை அனுமதித்த நிலையில், வீட்டில் சோதனைசெய்வதுபோல் பாசாங்கு செய்துவிட்டு அங்கிருந்த தங்க ஆபரணங்களை களவாடிக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களின் குடியுரிமையை பறிப்பதற்கு சதி

## - லக்ஷ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 10 அரசியல் தலைவர்களின் குடியுரிமையைப் பறிப்பதற்கு அரசாங்கம் சதி செய்வதாக எதிர்க்கட்சி பிரதம கொறடாவும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல குற்றஞ்சுமத்தினார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 10 மணிக்கு சபாநயாகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. கேள்விநேரத்தின்பின் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை மீதான விவாதம் நாளை (08ஆம் திகதி), நாளை மறுதினமும் (09ஆம் திகதி) நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிலையில் அதனைக் காலந்தாழ்த்துவதற்கு இடமளிக்க முடியாது.



எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 10 அரசியல் தலைவர்களின் குடியுரிமையைப் பறிப்பதற்கு அரசாங்கம் சதி செய்கிறது. இதற்காகவே அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல ஆளுங்கட்சி மீது குற்றஞ்சுமத்தினார்.

# பிரித்தானிய தூதுவர்- கூட்டமைப்பு கொழும்பில் இரு மணிநேரம் சந்திப்பு



(யாழ். நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், பிரித்தானியாவின் இலங்கைக்கான தூதுவர் சாரா ஹமில்டனை உத்தியோகபூர்வமாக சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் ஊடகப்பேச்சாளர் கு.சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பின்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள், அரசியல் தீர்வு, மாகாணசபைத் தேர்தல்கள், நில அபகரிப்பு, அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பேசப்பட்டதாகவும், குறித்த சந்திப்பு சுமார் இரண்டு மணிநேரம் இடம்பெற்றிருந்ததாகவும் கு.சுரேந்திரன் மேலும் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் மற்றும் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழன் THAMILAN நாளிதழ்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com/thamilaneditor@gmail.com
2021, ஏப்ரல் 07ஆம் திகதி, புதன்கிழமை

# கானல்நீராகும் அரசின் உறுதிமொழிகள்!

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க சர்ச்சையான விடயங்களைக் கூறி பரபரப்பை ஏற்படுத்துவது கடந்த காலங்களில் இடம்பெற்றிருந்தது. அதேபோல் இம்முறையும் அவர் வெளியிட்டுள்ள கருத்துகள் அரசியல் அரங்கில் அதிகமாக பேசப்படுகின்றன.

அரசாங்கத்தின் மீது மக்கள் மத்தியிலுள்ள அதிருப்தியை அவர் தெரிவித்திருக்கிறார் என்றே கூறவேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகக் கூறினாலும் அவை எவையும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளால் நிறைவேற்றப்படுவதில்லை என எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கெட்டம்பே ராஜோப வனாகாரய விகாராதிபதியைச் சந்திக்கச் சென்று, அவருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இதனைத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி குறித்தும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றியும் அவர் சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

“நாங்கள் பல்வேறு விடயங்களைச் செய்கிறோம். ஆனாலும் மக்கள் எங்களைத் தூற்றுவதாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி கூறியிருந்தார். ஒருமுறை நான் ஜனாதிபதியை சந்தித்தபோது, நான் நன்றாகவே வீழ்ந்துள்ளேன் என்றேன். செயலாளர்கள் சிலரும் அருகில் இருந்தனர். இதன்போது, நீங்கள் கூறிய எதுவும் இதுவரை நடக்கவே இல்லை என நான் ஜனாதிபதியிடம் கூறினேன்.

நீங்கள் ஆயிரம் தேசிய பாடசாலைகளை உருவாக்குவதாகக் கூறினீர்கள். அதில் எத்தனை பாடசாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன? என முன்னால் இருக்கும் கல்வி அமைச்சின் செயலாளரிடம் வினவுமாறு கூறினேன். ஒன்றுகூட உருவாக்கப்படவில்லை. அதன்பின்னர் காணி செயலாளர் அங்கிருந்தார். 15 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம்வரையான மக்களுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்குமாறு நீங்கள் கூறினீர்கள். அதில் எத்தனை வழங்கப்பட்டுள்ளன என்று காணி அமைச்சின் செயலாளரிடம் கேட்டேன். உண்மையில் ஒன்றுகூட வழங்கவில்லை.

கல்வித்துறையில் ஜீ.எல்.பீரிஸ் எதனையும் செய்வதில்லை. நாங்கள் உருவாக்கிய அரசாங்கமே இது. நாங்கள் வேலை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் எங்களுக்கு எதுவும் செய்யமுடியாது.

அதேபோன்று, உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான சகல தகவல்களும் அராங்கத்துக்குக் கிடைத்தன. பிரதமரிடமும் இருந்தது. பாதுகாப்பு அமைச்சராக இருந்த சாகல ரத்நாயக்கவிடமும் இருந்தது. அதே தகவல்கள் ஜனாதிபதிக்கும் பாதுகாப்புச் செயலாளருக்கும் கிடைக்கப்பெற்றன. ஆனால், அனைவர் மனதிலும் ஜனாதிபதித் தேர்தல் மட்டுமே ஞாபகமிருந்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தேரர்கள் இருந்தார்கள். தமிழ் - முஸ்லிம்களின் ஒரு வாக்கு கூட கிடைக்கவில்லை. நாங்கள் தனிச் சிங்கள வாக்குகளாலேயே வெற் பெற்றோம். ஐக்கிய தேசிய கட்சி சற்றுப் பலமாக இருந்தால் மக்கள் மாறுவார்கள். ஆனால், அதுவும் இல்லையே” என்று தனது அதிருப்தியையும் ஆதங்கத்தையும் வெளியிட்டுள்ளார் எஸ்.பி.திஸாநாயக்க.

உண்மையில் அரசாங்கத்தின் அண்மைக்கால செயற்பாடுகள் குறித்து மக்கள் மத்தியில் பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் அவை பெரும்பாலும் வெளிப்படுத்தப்படவில்லை. அந்த விடயத்தை அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே தெரிவித்துள்ளமை இங்கே முக்கியமாக கருதவேண்டியுள்ளது.

நாட்டில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவருவோம், அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்வோம் என்றவாறு தற்போதைய அரசாங்கத்தினால் தேர்தல் காலங்களில் பல்வேறு உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.

பொருட்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாமை குறித்து பொதுமக்களிடையே அரசாங்கத்தின் மீது அதிருப்தி காணப்படுகிறது. பண்டிகைக்காலத்தை முன்னிட்டு நிவாரணப் பொதியொன்றை ஆயிரம் ரூபாவுக்கு சதொச ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. அவ்வாறான நிவாரணப் பொதிகள் ஹட்டனில் தனியார் விற்பனை நிலையங்களில் 950 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அவ்வாறாயின் இங்கே அரசாங்கத்தின் நோக்கம் பிழைக்கிறது என்றுதானே அர்த்தம்?

சுற்றாடல் மாசு, தேங்காயெண்ணெய் இறக்குமதி, குற்றச் செயல்களின் அதிகரிப்பு போன்ற விடயங்களிலும் அரசாங்கத்தின் உறுதிமொழிகள் எவையும் காப்பாற்றப்படாத சூழ்நிலையே காணப்படுகிறது.

ஆகையால், அரசாங்கத்துக்குள்ளேயே இவை குறித்த அதிருப்தி இருப்பது நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்கவின் கருத்துகளின் ஊடாக தெளிவாகின்றது. எஸ்.பி.திஸாநாயக்க குறித்த சர்ச்சையை அரசாங்கம் மூடி மறைக்க முற்படுவதற்கு முன்னர் அதன் உண்மைத்தன்மைக்கு பதில் சொல்ல முற்பட வேண்டும் என்பதே சாமானியனின் குரலாகும்.

“தமிழன்” பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.




“ஒரு காலத்தில் மிகவும் செலவு கூடியதும், சிக்கல் நிறைந்ததும், சிரமம் மிகுந்ததுமாக இருந்த சர்வதேச வர்த்தகத்தை ஒரு சிறிய பெட்டிக்குள் அடைத்த கதை நம்மை ஆச்சரியத்தின் உச்சிக்கே அழைத்துச் செல்லும்”

# கப்பலுக்குள் பொருளாதாரம்!

சுயஸ் கால்வாயில் சிக்கிக்கொண்ட எவர்கிவன் கப்பல் மீட்கப்பட்டு மீண்டும் மிதக்க ஆரம்பித்துவிட்டது. இதனால் கடல்வழிப் பாதையில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல் கொஞ்சம் கொஞ்சமாக பழைய நிலைக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறது. ஆனால், எவர்கிவன் உண்டாக்கிய சிக்கலால் நிறுவனங்கள் எதிர்கொள்ளப்போகும் நஷ்டம் சர்வதேச சந்தையில் அடுத்த சில மாதங்களுக்கு பல அதிர்வுகளை உண்டாக்கலாம் என்கிறார்கள்.



அன்றாட அடிப்படை நுகர்வுப் பொருட்களுக்குக்கூட நாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருக்கிற சூழலில் இது ஒரு சங்கிலித் தொடர்போல் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. Domino effect தியரியில் சொல்லப்படுவதுபோல் இந்தச் சரக்குக் கப்பல்களில் ஏற்படும் ஒரு சிறு பிசகுகூட ஒட்டுமொத்த உலகையும் ஸ்தம்பிக்க வைத்துவிடுகிறது.

இன்று நினைத்த மறுகணமே உலகின் எந்த மூலையிலிருந்தும் விரும்பிய பொருட்களை நுகரக்கூடிய மாற்றத்தை மக்கள் வாழ்வில் உண்டாக்கியதற்கு முக்கிய காரணி சர்வதேச வணிகத்தில் சரக்குக் கப்பல்களின் வருகை. சரக்குக் கப்பலும் கன்டெய்னர் கொள்கலன்களின் கண்டுபிடிப்பும் உலக வர்த்தகத்தின் ஒரு மிகப்பெரிய திருப்புமுனை.

இலங்கையின் தேயிலை லண்டன் ஹோட்டல் அறைகளில் அருந்தப்படுகின்றது. டென்மார்க்கின் பால் மா சவூதி அரேபியாவில் பயன்படுத்தப்படுகிறது. சீனாவில் தயாரிக்கப்படும் மூலப்பொருட்களைக் கொண்டு ஜேர்மனியில் விமானம் தயாராகிறது. பங்களாதேஷில் தைக்கப்படும் ஆடைகள் கனடா ஹை ஸ்ட்ரீட்களில் விற்கப்படுகின்றன. இன்றைய உலகமயமாக்கப்பட்ட வாழ்க்கையில் நம் மனம் ஆசைப்படும் எதுவுமே கைக்கு எட்டும் தூரமே.

ஒருகாலத்தில் மிகவும் செலவு கூடியதும், சிக்கல் நிறைந்ததும், சிரமம் மிகுந்ததுமாக இருந்த சர்வதேச வர்த்தகத்தை ஒரு சிறிய பெட்டிக்குள் அடைத்த கதை நம்மை ஆச்சரியத்தின் உச்சிக்கே அழைத்துச்செல்லும்.

உலக உற்பத்தியில் 80 சதவிகித பொருட்களின் பரிமாற்றம் சரக்குக் கப்பல்கள் மூலமாகவே நடைபெறுகின்றன. கிட்டத்தட்ட 4 டிரில்லியன் டொலர்களுக்கும் மேலான மதிப்புள்ள பொருட்கள் உலக சந்தைக்குக் கடல்வழியாகவே அனுப்பப்படுகின்றன. உலக பொருளாதாரத்தைத் தாங்கி, தூக்கி நிறுத்தும் ஒரு முக்கியத்துறை இந்தச் சரக்குக் கப்பல் வணிகம். வணிகர்கள் பொருட்களை வேறு இடங்களுக்கு அனுப்புவதற்கு தரைவழியைவிட மலிவானதும் இலகுவானதுமானதும் கடல் வழியே என்று உணர்ந்ததால் கி.பி. 3ஆம் நூற்றாண்டிலேயே சரக்குக் கப்பல் போக்குவரத்து தொடங்கிவிட்டது.

### கடல்வழி வணிகம் எப்படி ஆரம்பித்தது?

நாடுகளுக்கிடையேயான கடல் வணிகம் பண்டைக்காலம் தொட்டே நடந்துவருகிறது. சிலப்பதிகரத்தில் வரும் பூம்புகார் நகரில் மிகப்பெரிய துறைமுகம் இருந்ததாகவும் தமிழர்கள் அக்காலத்திலேயே அண்டைநாடுகளுடன் கடல் வணிகத்தில் ஈடுபட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது. நாகரீகங்கள் பெரும்பாலும் ஆற்றுப்படுக்கையை மையம்கொண்டே தோன்றியதன் முக்கிய காரணமும் இதுவே. ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு பொருட்களை இடமாற்ற மனிதனுக்கு நீர்வழிப் போக்குவரத்து மிகவும் இலகுவாக அமைந்தது. காலம் காலமாக இருந்துவரும் இந்தக் கடல்வழி வணிகப் போக்குவரத்து இப்போது இருப்பதுபோல் பெரியளவிலோ, தொழில்நுட்பத்தில் முன்னேற்றமடைந்தோ ஆரம்பத்தில் இருக்கவில்லை.




கிரேக்கர்கள் எண்ணெய் அல்லது மதுவை கொண்டுசெல்ல சில செப்புப்பட்ட குவளைகளை அல்லது ஆம்போராக்களை அந்தக் காலத்தில் பயன்படுத்தினர். பிற்காலத்தில் மதிப்புமிக்க பொருட்களை தங்கள் படகில் ஏற்றிச்செல்ல பெரிய டிரங்க்களைப் பயன்படுத்தினர்.

### எவர்கிரீன் சரக்குக் கப்பல்

1956 வரை, சர்வதேச சரக்குகள் துறைமுகத் தொழிலாளர்களால் (stevedores) கைமுறையாக தொகுக்கப்பட்டு கப்பல்களில் ஏற்றப்பட்டன. அதேபோல், கப்பல் இலக்கு துறைமுகத்தை அடைந்ததும் இந்தச் செயல்முறை மீண்டும் கையாளப்பட்டது. ஒவ்வொரு தனிப்பட்ட பொருளும் சாக்குப் பைகளிலும், பெரல்களிலும், மூட்டைகளிலும் திணிக்கப்பட்டு, ஒவ்வொன்றாக எடுத்து கப்பலில் ஏற்றி இறக்க அதிகளவான மனித வளம் தேவைப்பட்ட இந்தச் செயல்முறை அதிகளவு நேரத்தையும் எடுத்துக்கொண்டது. இது கடினமானது மட்டுமல்ல, மிகவும் ஆபத்தானதாகவும் இருந்தது. கப்பல்கள் கடலில் மிதப்பதைவிட துறைமுகங்களில் தங்கியிருந்த காலப்பகுதியே அதிகமாக இருந்தது. இதனாலேயே சாதாரண குண்டூசிக்குக்கூட யானை விலை, குதிரை விலை நிர்ணயிக்கப்பட்டது.

இவ்வளவு சிக்கல் மிகுந்ததாக இருந்த கடல்வழி வணிகத்திற்கு தீர்வாக இரண்டு வரப்பிரசாதங்கள் கிடைத்தன. ஒன்று சரக்குக் கப்பல்கள், இரண்டு கன்டெய்னர்கள். இந்த இரண்டு தீர்வுகளையும் இரு கையில் ஏந்தி தமிழ் சினிமாவில் மக்களின் தலைவிதியை மாற்ற எங்கிருந்தோ புறப்பட்டுவரும் ஹீரோபோல் வந்தார் மெல்கம் மெக்லீன் (Malcolm Purcell McLean).

### 'யார் இந்த மெல்கம் மெக்லீன்?



1913ஆம் ஆண்டு அமெரிக்காவின் வட கெரோலினாவில் பிறந்த மெல்கம் மெக்லீன், ட்ரக் டிரைவராக தன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கி பின்னர் ட்ரக் கம்பெனிக்கே உரிமையாளரானார்.

ஒருமுறை இவர் கப்பலில் ஏற்ற சரக்குகளை ட்ரக்கில் கொண்டுசென்ற வேளையில், இந்த ஏற்றுதல் இறக்குதல் செயல்முறை எவ்வளவு நேர விரயத்தை ஏற்படுத்துகிறது என்பதை உணர்ந்தார். நெடுஞ்சாலைகளில் ஏற்படும் நெரிசலையும், வழக்கமான சரக்குக் கப்பல்களின் திறனற்ற ஏற்றுதல் மற்றும் வெளியேற்றல் நடைமுறைகளையும் சமாளிக்க முடிந்தால் பெரிய நன்மைகள் கிடைக்கும் என்று சிந்தித்தார். ஒரு ட்ரெய்லரின் சரக்குக் கட்டுப்பாட்டு பகுதியை அப்படியே வெளியே தூக்கி நேரடியாக கப்பலுக்குள் கொண்டுசெல்ல முடிந்தால், நேரம், உழைப்பு மற்றும் செலவுகளில் பெரும் சேமிப்பை காணலாம் என அவர் நினைத்தார்.

ஒரேநேரத்தில் நூற்றுக்கணக்கான அளவில் கப்பல்களில் ஏற்றக்கூடிய நிலையான அளவிலான ட்ரெய்லரை ஏன் உருவாக்கக்கூடாது என்ற எண்ணம் உதித்தது. உதித்த ஐடியாவை உடனடியாக மெல்கம் மெக்லீன் செயலாற்றினார். அவரே தனது நிறுவனத்தில் கன்டெய்னர்களை உருவாக்கினார். ஜனவரி 1956இல் இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட டி-2 டேங்கர்களை வாங்கி கொள்கலன்களை கொண்டுசெல்லும் விதமாக கப்பல்களை மீள் உருமாற்றினார்.

ஐடியல் எக்ஸ் (SS Ideal-X) என அழைக்கப்படும் ஒரு டேங்கரிலிருந்து முதல் கொள்கலன் கப்பலை அவரே உருவாக்கினார். அடுத்த ஆண்டு, ஒரு பெரிய கொள்கலன் கப்பலான கேட்வே சிட்டியைக் (Gateway City) கட்டினார். 1968இல் முதலாவது நவீன சரக்குக் கப்பல் களத்தில் குதித்தது. அதைத் தொடர்ந்து அவரது நிறுவனம் சீ-லேண்ட் சர்வீஸ் (Sea-Land Service) என்று மறு பெயரிடப்பட்டது.

முதல் கன்டெய்னர் 1956இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் 58 கன்டெய்னர்கள் அமெரிக்காவின் நியூயோர்க் துறைமுகத்திலிருந்து ஹட்சன் துறைமுகத்திற்கு அனுப்பப்பட்டன. 1956களில் ஒரு கார்கோ ஏற்றுவதற்கு ஒரு தொன்னுக்கு 5.8 அமெரிக்க டொலர் செலவானது. இதுவே மெல்கம் மெக்லீன் உருவாக்கிய கன்டெய்னர் கார்கோவை மொத்தமாக ஏற்றுவதற்கு ஒரு தொன்னுக்கு 0.15 சென்ட்ஸ் மட்டுமே செலவானது. அது மட்டுமல்ல, கன்டெய்னர்களின் வருகை கப்பலில் பொருட்களை ஏற்றி இறக்குவதை மிகவும் இலகுவாக்கியது. அதுவரை கப்பலில் ஏற்றி இறக்குவதற்காக மட்டுமே சுமார் ஒரு வாரம்வரை துறைமுகத்தில் தேங்கி நின்ற கப்பல்களில் ஒரு கன்டெய்னர் 7 நிமிடங்களில் ஏற்றப்பட்டது. மொத்த சரக்கையும் வெறும் 8 மணி நேரத்திலேயே கையாண்டு முடித்தனர். மெல்கம் மெக்லீனின் புதிய கண்டுபிடிப்புகளின் வீரியம் சூடுபிடிக்கத் தொடங்கியது.




இதனைப் பார்த்த வேறுசில நிறுவனங்களும் கன்டெய்னர் மூலம் சரக்கு கையாள்வதை அறிமுகப்படுத்தினர். எப்போதுமே வழமைக்கு மாறாக ஒருவர் புதுமையை புகுத்தும்போது அதற்கு ஒரு கும்பல் எதிர்ப்புத் தெரிவிக்கும். அதே கதையாக மெல்கம் மெக்லீனின் இந்த நடவடிக்கைக்கு துறைமுக சரக்கு கையாளும் தொழிலாளர்கள் தொடங்கி பல தரப்பிலும் எதிர்ப்புகள் வந்தன.

ஆனால், இந்தச் சிக்கல்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து சரக்குக் கப்பலையும் அதில் கன்டெய்னர் பயன்பாட்டையும் அடுத்தகட்டத்திற்கு நகர்த்தியது வியட்நாம் யுத்தம்.

### வியட்நாம் யுத்தமும் சரக்குக் கப்பல்களின் எழுச்சியும்!

ஆரம்பத்தில் பிரான்ஸுக்கும் வியட்நாமுக்கும் இடையில் நடந்த யுத்தம் பிரெஞ்சு படைகளின் பின்வாங்கலுக்குப் பின் அது வடக்கு, கிழக்கு வியட்நாமுக்கு இடையிலான யுத்தமாக மாறியது. இதனால் நாட்டில் சோஷியலிசத்தைப் பரப்ப வடக்கு வியட்நாமைச் சேர்ந்த ஹோ சின் மின் என்பவர் முயற்சிசெய்தார். உடனே அமெரிக்காவுக்குக் கோபம் கொப்பளிக்க வியட்நாமுக்கு தம் படையை அனுப்பிவைத்தது. கிட்டத்தட்ட 60,000 படை வீரர்களை அமெரிக்கா அனுப்பிய பிறகுதான் அப்போதைய கடல்வழிப் போக்குவரத்து முறையை வைத்து இது சாத்தியம் இல்லை என்பதை அமெரிக்கா உணர்ந்தது.

தேவையான ஆயுதம் மற்றும் பொருள் விநியோகம் செய்ய வசதி இல்லாததால் அமெரிக்க இராணுவம் தடுமாறத் தொடங்கியது. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள நினைத்த மெல்கம் மெக்லீன் இந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக்கொண்டார். 1960களின் நடுப்பகுதியில் அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிகளை சந்தித்த மெல்கம் மெக்லீன் தனது கன்டெய்னர்களை ப்ரமோட் செய்தார். இந்த ஐடியாவை ஏற்றுக்கொண்ட அமெரிக்க அரசால் வியட்நாமில் இருந்த தம் இராணுவத்துக்கு உணவு, மருந்து, ஆயுதம் என அனைத்தையும் முறையாகவும் விரைந்தும் வழங்க முடிந்தது.



வியட்நாம் யுத்தம் முடிவுற்ற பின்னர் கன்டெய்னர்களுக்கு எதிராக அதுவரை போராட்டம் நடத்திவந்த துறைமுகத் தொழிலாளர்களின் குரல் வலுவிழந்தது. அதனால் மீண்டும் உலகெங்கிலும் கன்டெய்னருக்கான மவுசு கூடியது. தொடர்ச்சியாக கடல்வழி வணிகத்தில் பல புதுமைகளையும் புரட்சிகளையும் புகுத்திவந்த மெல்கம் மெக்லீன் அடுத்தகட்ட நடவடிக்கையாக வணிகக் கப்பல்களை மேலும் கணினிமயப்படுத்தினார். இதனால் பரிமாறப்படும் அனைத்து சரக்குகளையும் ட்ராக் செய்யும்வசதி உருவானது.

15ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை தீர்மானங்கள்!

## 2021.04.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

**01. தேசிய சுவடிகள் கூடத்தில் டிஜிட்டல் காப்பகத்தை உருவாக்கல்**

1640 தொடக்கம் ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மற்றும் சுதந்திரத்தின் பின்னர் மிகவும் பெறுமதியான ஆவணங்கள் மற்றும் 19ஆம் நூற்றாண்டு தொடக்கம் இலங்கையில் வெளியிடப்பட்ட பத்திரிகைகள் உள்ளிட்ட அனைத்து வெளியீடுகளதும் சட்ட ரீதியான காப்புகள் தேசிய சுவடிகள் கூடத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இங்கு நாளாந்தம் அதிகளவான ஆவணங்கள் சேர்ந்தவண்ணம் இருப்பதுடன், அதற்காக டிஜிட்டல் வெளியீடுகள் மற்றும் ஆவணங்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலி, ஒளிபரப்புகள், இணையத்தளங்கள் மற்றும் மின்னஞ்சல் போன்றன உள்ளடங்கும். அதற்கமைய குறித்த டிஜிட்டல் ஆவணங்களின் நம்பகத்தன்மை மற்றும் போலியற்றத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் டிஜிட்டல் காப்பு தொடர்பான சர்வதேச தர நியமங்களை பின்பற்றி டிஜிட்டல் காப்பகத்தை அமைப்பதற்காக புத்தசாசன, மதங்கள் மற்றும் கலாசார விவகார அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. மட்டக்களப்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் விசேட பொருளாதார மத்திய நிலையங்களை திறந்து வைத்தல்**

விவசாயிகளின் உற்பத்திகளை நேரடியாக சந்தைப்படுத்துவதற்கும், போட்டித்தன்மை மூலம் மிகவும் வினைத்திறனான விலைப் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கும் இயலுமான வகையில் விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறான 15 பொருளாதார மத்திய நிலையங்கள் நாடளாவிய ரீதியில் இயங்கி வருகின்றன. அதற்கமைய மட்டக்களப்பு மற்றும் வவுனியா விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதுடன், யாழ்ப்பாண விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் முதலாம் கட்ட கட்டுமானப் பணிகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன. குறித்த விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவ நிதியத்தை நிறுவுவதற்கும் முறையான பொறிமுறையை பின்பற்றி குறித்த விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் வியாபார அலகுகளை ஒதுக்கி வழங்குவதற்கும் கமத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. தேயிலைச் செய்கையை ஊக்குவிப்பதற்காக தற்போது வழங்கப்பட்டு வரும் மானியத் தொகையை திருத்தம் செய்தல்**

2019ஆம் ஆண்டில் மொத்த தேயிலை உற்பத்தி 300 மில்லியன் கிலோகிராம் களாவதுடன், அவற்றில் 75 வீதமான 225 மில்லியன் கிலோகிராம்கள் சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களால் உற்பத்திசெய்யப்படுகின்றன. தேயிலை உற்பத்தியை உயர் மட்டத்தில் பேணுவதற்காக சிறிய தேயிலை தோட்டக் காணிகளில் உற்பத்திப்பெருக்கை அதிகரிக்கவேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. தேயிலையை மீள் பயிரிடல் மூலம் வருமானம் ஈட்டுவதற்காக 04 வருடங்கள் எடுப்பதாலும், அதற்கான செலவு அதிகமானதாலும் மீள் பயிரிடல் மற்றும் புதிய பயிரிடல் போன்றவற்றுக்கு போதுமானளவு ஆர்வம் காட்டாமையால் 2025ஆம் ஆண்டளவில் 360 மில்லியன் கிலோகிராம்கள் உற்பத்தி இலக்கை அடைவதற்காக போதுமானளவு ஊக்குவிப்புகள் வழங்கவேண்டியுள்ளது. அதற்கமைய தேயிலை மீள்பயிரிடல் மானியத் தொகை ஹெக்ரயர் ஒன்றுக்கு புதிய பயிரிடல் மானியத் தொகையாக ஹெக்ரயர் ஒன்றுக்கு 4,00,000 ரூபாவிலிருந்து 5,00,000 ரூபா வரைக்கும் அதிகரிப்பதற்காக பெருந்தோட்டத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




**04. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் 2021-2025 ஒருங்கிணைந்த திட்டத்தின் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக துரித பெறுகைச் செயன்முறையை நடைமுறைப்படுத்தல்**

2021-2025 ஒருங்கிணைந்த திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2021 ஜனவரி மாதம் 11ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் 2025இல் நாடளாவிய ரீதியில் 78.8 வீதமான வீட்டு அலகுகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த இலக்கை அடைவதற்காக நீர் விநியோகக் குழாய்கள் 40,000 கிலோமீற்றர்கள்வரை இடுவதற்கும் சமகால உற்பத்தி இயன்றளவு நாளொன்றுக்கு 2.35 மில்லியன் கனமீற்றர்களாக அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. நீர் விநியோகத் திட்டங்களில் காணப்படும் சிக்கலான தன்மையால் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பெறுகைச் செயன்முறை ஏனைய நிறுவனங்களைவிட அதிக காலம் எடுப்பதாக தெரியவந்துள்ளது. அதனால் நீர்க்குழாய்கள் மற்றும் உபகரணங்களின் பெறுகைச் செயன்முறையை ஒருங்கிணைந்த பொறிமுறையின் கீழ் வழங்குவதற்கும் மற்றும் அதற்கான அலகுக் கட்டண முறையை அறிமுகப்படுத்துவதற்கும் நீர்க் குழாய்கள் இடப்படும் ஒப்பந்தத்தை வழங்கும்போது அலகுக்கட்டண முறையை அறிமுகப்படுத்துவதற்கும் நீர்வழங்கல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. 2021/2022ஆம் ஆண்டுக்கான சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு உணவுப்பொருள் விநியோகத்துக்கான ஒப்பந்தத்தை வழங்கல்**

2021/2022 ஆண்டுக்கான சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு உணவுப்பொருள் விநியோகத்துக்காக ஒப்பந்தக்காரரை தெரிவுசெய்வதற்காக தேசிய போட்டித்தன்மை விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய 2021 ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி தொடக்கம் 2022 ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிவரை சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு உணவுப்பொருட்கள் விநியோகத்துக்காக தெரிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. 2005ஆம் ஆண்டு 38ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கை சட்டத்தை முடிவுறுத்தி புதிய சுற்றுலா நடவடிக்கை சட்டத்தை கொண்டுவரல்**

2005ஆம் ஆண்டு 38ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஒட்டுமொத்த சுற்றுலாத்துறையை 04 முக்கிய நிறுவனங்களாக பிரித்து இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம், இலங்கை சம்மேளனப் பணியகம் மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் போன்றன நிறுவப்பட்டுள்ளன. ஆனாலும் ஒட்டுமொத்த சுற்றுலாத்துறையும் 04 நிறுவனங்களுக்கு பிரிந்துள்ளமையால் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் பிரச்சினை மேலெழுதல் மற்றும் வளங்கள் வீண்விரயம் போன்றன இடம்பெறுவதாக தெரியவந்துள்ளது. அதற்கமைய சுற்றுலாத்துறையின் நிலைபேறான அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காக 2005ஆம் ஆண்டு 38ஆம் இலக்க சுற்றுலா நடவடிக்கை சட்டத்தை முடிவுறுத்தி புதிய சுற்றுலா நடவடிக்கை சட்டத்தின் சட்டமூலத்தை தயாரிப்பதற்கும் அதன்மூலம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம், இலங்கை சம்மேளனப் பணியகம் போன்றவற்றை இணைத்து இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபை எனும் பெயரில் புதிய அதிகாரசபையை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. 2017ஆம் ஆண்டு 12ஆம் இலக்க அந்நிய செலாவணி சட்டத்தின் கீழ் விசேட வைப்புக் கணக்கு திறப்பதற்காக வழங்கப்பட்டுள்ள கால எல்லையை நீடித்தல்**

அந்நிய செலாவணியை எமது நாட்டுக்கு அனுப்புவதை ஊக்குவிப்பதற்காக 2020 ஏப்ரல் மாதம் தொடக்கம் நடைமுறையிலுள்ள விசேட வைப்புக் கணக்குக்கான ஏற்பாடுகள் 2017ஆம் ஆண்டு 12ஆம் இலக்க அந்நிய செலாவணி சட்டத்தின் கீழ் குறித்த கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வாறே குறித்த கணக்குகளில் காணப்படும் வைப்புகளை தொடர்ந்து பேணும் நோக்கில் மேலதிக வட்டியை வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2021 மார்ச் மாதம் வரையில் குறித்த வைப்புக் கணக்குகளில் 360.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வைப்பிலிடப்பட்டுள்ளன. குறித்த விசேட வைப்புக் கணக்குகளை திறப்பதற்கான கால எல்லை 2021 ஏப்ரல் மாதம் 07ஆம் திகதியுடன் முடிவடைய இருப்பதால் தொடர்ந்து பணத்தை வைப்பிலிடுவதற்கு விருப்பம் தெரிவிக்கும் தரப்பினர்களை ஊக்குவிக்கும் வகையில் குறித்த காலவரையறையை தொடர்ந்து நீடிப்பதற்காகவும், அதற்காக அந்நிய செலாவணி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கட்டளைகளை பிறப்பிப்பதற்கும் நிதி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. கொவிட் 19 பரவலைத் தடுப்பதற்காக 06 மில்லியன் ஸ்புட்னிக் V தடுப்பூசிகளை கொள்வனவு செய்தல்**

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை மற்றும் உடன்படிக்கை குழுவின் பரிந்துரைக்கமைய 07 மில்லியன் ஸ்புட்னிக் V தடுப்பூசிகளை ஒரு தடுப்பூசி 9.95 அமெரிக்க டொலர்கள் வீதம் 69.65 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு கொள்வனவுசெய்வதற்காக 2021 மார்ச் மாதம் 23ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த தடுப்பூசியின் அளவுக்கு மேலதிகமாக 06 மில்லியன் ஸ்புட்னிக் V தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்காகவும் சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# அரச - தனியார் வைத்தியர்களின பங்குபற்றலுடன் இடம்பெற்ற இருநாள் பற்சிகிச்சை செயலமர்வு





(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையில் பல பாகங்களில் பல் வைத்தியத்துறையில் ஈடுபடும் அரச தனியார் 30 பல் வைத்தியசாலைகளின் பங்குப்பற்றலுடன் பற்சிகிச்சை என்ற தலைப்பிலான இரண்டு நாள் செயலமர்வொன்று நடைபெற்றது.

துறைசார் விசேட நிபுணத்துவம் பெற்ற வைத்திய விரிவுரையாளர்களினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த செயலமர்வு கடந்த 3ஆம் 4ஆம் திகதிகளில் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது.

இச்செயலமர்வுக்கு தெஹிவளையில் அமைந்துள்ள 'ஓரம்' மருத்துவ தனியார் நிறுவனம் அனுசரணையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஓரம் கம்பனியின் தலைவர் வைத்தியர் ஜாபீர் சாலி தலைமையிலும் முகாமைத்துவ பணிப்பாளர் முஸ்தாக் ஜாபீர் தலைமையிலும் நடைபெற்றது.

டென்டல் அகடமியின் திருமதி மரினா மரியா, வைத்தியர் சிறிமாவ சமரக்கோன் ஆகியோர் கலந்துகொண்டு விரிவுரைகளையும் பயிற்சிகளையும் வழங்கினார்கள். இலங்கையில் நவீன முறையிலான மருத்துவ உபகரணங்கள் அறிமுகப் படுத்தப்பட்டு வைத்தியர்களுக்கு கணினி முறையில் அதிநவீன இயந்திரங்கள் பற்பசைகள், பற் சீராக்குதல், பற்களின் முரசு வேர்களை போன்ற பல்வேறு துறைகளில் பற்சிகிச்சையளிக்கும் இளம் வைத்தியர்களுக்கு பயிற்சிகளும் செயல்முறைகளும் பயிற்சியளிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. அத்துடன், குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 வைத்தியர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன், ஒரு வைத்தியருக்கு செய்கைமுறை பயிற்சிக்காக இந்தியா செல்வதற்கும் ஓரம் கம்பனி அனுசரணை வழங்கியதுடன், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# கதலி வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்ய தீர்மானம்

## - அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு

கதலி வாழைப்பழங்களை பழ வகைகளில் ஒன்றாக ஏற்றுமதிசெய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்மூலம் கதலி வாழைப்பழங் களுக்கான சந்தையில் கேள்வி அதிகரிப்பதுடன், விவசாயிகளுக்கு ஆகக்கூடிய விலையும் கிடைக்கும் - என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இராஜாங்கனை பிரதேசத்தில் பத்து ஏக்கரில் வாழை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த பயிர்ச்செய்கையை கண்காணிக்கும் நோக்குடன் விவசாய அமைச்சர் மற்றும் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன ஆகியோர் சமீபத்தில் அப்பிரதேசத்திற்கு சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு, பாரியளவில் கதலி வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்யும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அத்துடன், வாழைப்பழ ஏற்றுமதித் திட்டத்தின் முதலாவது படிமுறை இராஜாங்கனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# அதிபர்கள் - ஆசிரியர்கள் பதுளையில் போராட்டம் மாணவர்கள் மீண்டும் வீடுகளுக்கு அனுப்பிவைப்பு

## 538 பாடசாலைகள் முடக்கம்

## 11,500 அதிபர் - ஆசிரியர்கள் சுகயீன விடுமுறையில்

(பதுளை நிருபர்கள்)

அதிபர் - ஆசிரியர்களுக்கு கடந்த 24 வருட காலமாக ஏற்பட்டிருந்த சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளைத் தீர்க்குமாறு வலியுறுத்தி ஊவா மாகாண சபைக்கு முன்பாக பாரிய கவனயீர்ப்புப் போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் மாகாண சபையிலிருந்து பிரதான வழியாக ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம்வரை சென்று மீளவும் ஊவா மாகாண சபையை நோக்கி திரும்பியது.

போராட்டத்திற்கு பலத்த பொலிஸ் பாதுகாப்புகள் வழங்கப்பட்டிருந்தன. சுமார் 2 மணித்தியாலங்களுக்கு மேலாக அனைத்து வாகனப் போக்குவரத்துகளுக்கும் தடை ஏற்பட்டிருந்தது.

1997 மற்றும் 2006 ஆகிய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திட்டத்தை அமுல்படுத்தாமையை கண்டித்தும் அதிபர், ஆசிரியர் சட்டத்திட்டங்களுக்கு புறம்பாக புதிய ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டமை, உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படாமை, கொவிட்-19 குறித்து முழுமையான வசதிகள் பாடசாலைகளுக்கு செய்துகொடுக்கப்படாமை ஆகியன உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்னிலைப் படுத்தியும் இப்போராட்டம் இடம்பெற்றது. ஊவா மாகாண அதிபர், ஆசிரியர்கள் சுகயீன விடுமுறைபெற்று இப்போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

பாடசாலைக்கு வருகைதந்த மாணவர்கள் மீண்டும் வீடுகளுக்குத் திருப்பியனுப்பப்பட்டனர்.

இதனால் பாடசாலைகள் அனைத்தும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

போராட்ட நிறைவில் அதிபர், ஆசிரியர்கள் தாம் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பாக நீண்ட மகஜரொன்றை ஆளுநர் அலுவலகத்தில் சமர்ப்பித்தனர்.

# கலாபூஷணம் நீலாபாலன் காலமானார்: இறுதிக்கிரியைகள் வெலிமடையில் இன்று!

(பதுளை நிருபர்)

ஊவாவின் மூத்த கவிஞர்களில் ஒருவராகிய கலாபூஷணம் கவிமணி நீலாபாலன் நேற்று முன்தினம் தனது 73ஆவது வயதில் பதுளை மாகாண வைத்தியசாலையில் இயற்கையெய்தினார்.

பூபாலரத்னம் என்ற இயற்பெயரைக்கொண்ட இவர், கல்முனையை பிறப்பிடமாகக்கொண்டவர். நான்கு தசாப்த காலத்திற்கும் அதிகமாக இலக்கியத் துறையில் தனது ஆளுமையை செலுத்திவந்த இவர்தான் இலக்கிய உலகில் காலடி எடுத்துவைத்த ஆரம்ப நாட்களில் கல்முனை பூபால் என்ற புனைப்பெயரில் கவிதைகளை எழுதிவந்தார்.

கவிஞர் நீலாவாணனின் பாசறையில் வளர்ந்த இவர், கிழக்கு மாகாணத்தில் பல முக்கிய இலக்கிய அமைப்புகளின் செயற்பாட்டாளராக இருந்து பல இளம் கவிஞர்கள் உருவாக உறுதுணையாக இருந்தார்.

தனது தொழில் நிமித்தம் மலையகத்தின் பதுளை மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்த இவர், தனது மனைவி நீலாதேவியின் பெயரில் ஒருபகுதியை இணைத்து நீலாபாலன் என்ற புனைப்பெயரில் இலக்கியங்கள் படைத்துவந்தார்.

கவிதை தவிர, திறனாய்வு, பத்தி எழுத்து, மேடை நாடகம், வானொலி நிகழ்ச்சி தொகுப்பு, கவியரங்கு, மேடை நிகழ்ச்சி தொகுப்பு என பல்துறைகளிலும் ஆளுமை செலுத்தி வெற்றிகண்டார். இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகிய கவிதைக்கலசம், முத்துப்பந்தல் ஆகிய நிகழ்ச்சிகளை நீண்டகாலமாக நெறியாள்கை செய்து தொகுத்து வழங்கி பல கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்தார்.



இவருடைய கவிதைகள் அதிகளவில் நூலுருவாக்கம் பெற்றுள்ளன. ஈழத்தின் பிரபல இலக்கிய சஞ்சிகையான ஜீவநதியின் பதிப்பில் இவரது இறுதிக் கவிதை நூலான 'கடலோரத் தென்னை மரம்' பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியில் 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்பட்டது.

தனது இறுதிக் காலம்வரை மரபு, நவீனம், பின் நவீனம் என்ற சிந்தனைகளுக்கும் அப்பாற்சென்று சந்தர்ப்பச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தேசிய நாளேடுகளில் கவிதைகள் எழுதிவந்தார். இறுதியாக பதுளை மாவட்ட மலையக மக்கள் முன்னணி காரியாலயத்தில் நிர்வாக உத்தியோகத்தராக பணிபுரிந்தார்.

கவிஞர் நீலாபாலனின் மறைவு ஈழத்து இலக்கிய உலகிற்கும் பதுளை மண்ணிற்கும் பேரிழப்பாகும். அன்னாரின் பூதவுடல் முத்து உயன, திவிதொட்டவெல, வெலிமடை என்ற முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளதுடன், இன்று இறுதிக்கிரியைகள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கவிச்சக்கரவர்த்தி நீலாபாலனின் இழப்பு இலக்கிய உலகில் நிரப்பப்படாத வெற்றிடம்

## அகரம் கலைக்கழகம் அனுதாபம்

கலை, இலக்கியப் பணியில் கிழக்கிற்கும் மலையகத்திற்கும் இடையில் உறவுப்பாலமாக திகழ்ந்த கவிச்சக்கரவர்த்தி நீலாபாலனின் (பூபாலரெத்தினம்) இழப்பு தமிழிலக்கியத்துறையில் என்றும் நிரப்பப் படாத வெற்றிடமாகும் - என அம்பாறை, பாண்டிருப்பை தளமாகக்கொண்டு இயங்கிவரும் அகரம் கலைக்கழகம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது.

அகரம் கலைக்கழகத்தின் தலைவர் செ.துஜியந்தன், செயலாளர் வி.சரன்தாஸ் ஆகியோர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

பிரபல கவிஞர்களில் ஒருவராகத் திகழ்ந்த கவிஞர் நீலாபாலன் தனது 73ஆவது வயதில் திங்கட்கிழமை இயற்கையெய்தினார். கிழக்கில் கல்முனையை பிறப்பிடமாகக்கொண்ட இவர் பூபாலரெத்தினம் எனும் இயற்பெயரைக்கொண்டவர்.

திருமணத்தின் பின் பதுளை வெலிமடையில் வசித்துவந்தார். ஆரம்பத்தில் கல்முனை பூபால் எனும் பெயரில் எழுத்துத்துறைக்குள் நுழைந்தவர். பின்நாட்களில் தனக்கு மிகவும் பிடித்த நீலாபாலன் எனும் புனைபெயரில் கவிதை, சிறுகதை, விமர்சனம், ஆய்வுகட்டுரைகள், மேடைநாடகங்கள், மெல்லிசைப்பாடல்கள் போன்ற பல்வேறு கலை, இலக்கியச் செயற்பாடுகள் தொடர்பில் ஏராளமான படைப்புகளை வெளியிட்டுள்ளார்.

இலக்கியப்பரப்பில் இவரது படைப்புகள் வெளிவராத பத்திரிகைகள் இல்லையென்றே கூறவேண்டும். கவிஞர் நீலாபாலனின் தொடர்ச்சியான இலக்கியச் செயற்பாடுகள் இளம் படைப்பாளிகளுக்கு ஓர் உந்துசக்தியாகவும் அமைந்திருந்தன.

கிழக்கிலிருந்து அகரம் கலைக்கழகத்தின் வெளியீடாக இரு மாதங்களுக்கொரு முறை வெளிவரும் விருந்து சிற்றிதழுக்கு தொடர்ச்சியாக ஆக்கங்களை எழுதிவந்தவர் நீலாபாலன். இவரது பன்முக ஆளுமைத்திறன் இலங்கையின் தமிழ் இலக்கியத்துறையில் என்றும் நிரப்பப்படாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

அன்னாரின் பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கும், கலை, இலக்கிய நண்பர்களுக்கும் அகரம் கலைக்கழகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய உற்பத்தியை ஊக்குவிப்பது குறித்து கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

(சிவா ஸ்ரீதரராவ்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சௌபாக்கிய நோக்கு திட்டத்தின்கீழ் கிராமிய பொருளாதாரத்தை மேலும் ஊக்குவிக்கும் தேசிய வேலைத்திட்டம் கேகாலை மாவட்டத்தில் தேசிய உற்பத்தி கைத்தொழிலை ஊக்குவிப்பது குறித்து கேகாலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் கேகாலை நகர சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது தேயிலை. தேங்காய், பாக்கு, கித்துல், இறப்பர், கறுவாப்பட்டை, கராம்பு, மிளகு உட்பட மேலும் பல சிறு பயிர்ச்செய்கை அபிவிருத்தி குறித்தும் மற்றும் மட்பாண்டங்கள் உட்பட ஏனைய கைத்தொழில் அபிவிருத்தி குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, அமைச்சர் ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், ஜானக வக்கும்புர உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கேகாலை மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய உட்பட அரச அதிகாரிகள் அரசியல்வாதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.






# கொழும்பு- பதுளை வீதி உணவகங்களில் சீர்கேடு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

கொழும்பு - பதுளை வீதியில் பயணிக்கும் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் பயணிகளின் உணவு மற்றும் சிற்றுண்டித் தேவைகளுக்காக நிறுத்தப்படும் உணவகங்களின் உணவு வகைகள், சிற்றுண்டிகள் உட்பட ஏனைய வசதிகள் குறித்து கடும் விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

எஹலியகொடை, மின்னான, பரகடுவ, குருவிட்ட, இரத்தினபுரி, லெல்லுபிட்டிய, பெல்மதுளை, பலாங்கொடை, பெலிஹுல்ஓய, ஹல்தும்முல்லை போன்ற இடங்களில் உணவிற்காக பஸ்கள் நிறுத்தப்படுகின்றன.

இவற்றில் பெரும்பாலான உணவகங்களில் பயணிகளுக்குப் பொருத்தமான உணவுப் பொருட்கள் இல்லையெனவும் உணவுப் பொருட்களது தரம், அளவு, சுத்தம், சுவை போன்ற விடயங்களில் நியாயங்களை கேட்டு பெற்றுக்கொள்வதற்குரிய மனிதாபிமான மனநிலை அற்றவர்களாக இவர்கள் செயற்படுவதாகவும் பயணிகள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

அத்துடன், உணவு வகை தயாரிப்பதிலும் பரிமாறுவதிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் சுத்தம் கீழ்மட்டத்திலுள்ளதாகவும் இவற்றை அவதானிக்க அதிகாரிகள் முன்வராமை குறித்தும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# அரசியல் பழிவாங்கலில் ஆளும் கட்சி உடன் நிறுத்துமாறு வேலுகுமார் எம்.பி. கோரிக்கை

## உதாகம்மான வீட்டுத்திட்டம் நிறுத்தப்பட்டமைக்கு கடும் எதிர்ப்பு

உதாகம்மான தனிவீட்டுத் திட்டங்களை நடுவழியில் கைவிட்டு அரசியல் பழிவாங்கல் செய்வதை அரசாங்கம் நிறுத்தவேண்டும் - என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதி தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த நல்லாட்சியில் தேசிய வீடமைப்பு அமைச்சராக தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச செயற்பட்டார். அதன்போது, நகர, கிராம மக்களுக்கு பல வீடமைப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், தோட்ட மக்களுக்கான வீடமைப்பு, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் ஊடாகவே மேற்கொள்ளவேண்டும் என கூறப்பட்டது. நாம் தொடர்ச்சியாக நகர, கிராம வீடமைப்புக்கு ஒத்ததாக தேசிய வீடமைப்பு அமைச்சின் ஊடாகவும், தோட்டப் பகுதிகளில் வீடுகள் அமைக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தோம். அதன்படி, 2018 /19ஆம் ஆண்டுகளில் தோட்டப் பகுதிகளிலும் உதாகம்மான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2019 ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றபோது, அவை அவற்றின் முதலாம், இரண்டாம் கட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டு, இறுதி வேலைகள் எஞ்சிய நிலையில் இருந்தன. தற்போது இந்த உதாகம்மான தனிவீட்டுத் திட்டங்களை நடுவழியில் கைவிட்டு அரசியல் பழிவாங்கல் செய்வதை அரசாங்கம் நிறுத்தவேண்டும்.

கண்டி மாவட்டத்தின் ஹந்தானை, லெவலன்ட், கெலாபொக்க, ரங்களை மற்றும் வைத்தலாவ தோட்டங்களில் இத்தனிவீடுகள் கட்டப்பட்டுவந்தன. இவற்றில் மொத்தமாக 565 வீடுகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வீட்டிற்கும் அதன் பயனாளிக்கு ரூபா 5,00,000 தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் நன்கொடையாக வழங்கப்படும். அதன்படி, இக்கொடுப்பனவு பல கட்டங்களாக பகிர்ந்து வழங்கப்படுவதே நடைமுறையாகும்.

மொத்தமாக பயனாளிகளுக்கு வழங்கப்பட விருந்த நிதி 282 மில்லியன் ரூபாவாகும். அதில் நல்லாட்சிக் காலத்தில் முதலாம், இரண்டாம் கட்ட கொடுப்பனவுகளாக 60 வீதத்துக்கு அதிகமான தொகை பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. எனினும், ஜனாதிபதித் தேர்தலிலிருந்து இன்றுவரை எஞ்சிய தொகையில் ஒரு சதமேனும் வழங்கப்படவில்லை. இந்நிலையில், இவ்வனைத்து வீடுகளும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

இந்நிலை தொடர்ந்தால் இவை எவ்வித பிரயோசனமுமற்ற நிலைக்குத் தள்ளப்படும். எனினும், இது தொடர்பாக அரசாங்கத்திற்கோ, அரசாங்கத்திலுள்ள எமது பிரதிநிதிகளுக்கோ, எவ்வித அக்கறையும் இருப்பதாக தெரியவில்லை.

அரசாங்கம் எதுவாக இருந்தாலும் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை பூரணப்படுத்த, பயனாளிகளுக்கான கொடுப்பனவை வழங்க வேண்டும். மாறாக இன்றைய அரசாங்கம் அவற்றை கைவிட்டு, புதிய வேலைத்திட்டங்களை தொடங்குவதாக குறிப்பிடுகின்றது. இவ்வேலைத்திட்டம் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் ஆரம்பிக்கப்பட்டதாலேயே இவ்வாறு செய்ய முற்படுகின்றனர்.



இவ்வாறான அரசியல் பழிவாங்கலை கைவிட்டு, அப்பாவி தோட்ட மக்களினது வீடுகளை பூரணப்படுத்த அவசியமான கொடுப்பனவை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

அதற்கு, நாம்தான் ஆளுந்தரப்பு என மார்தட்டிக்கொண்டவர்கள் வழிசமைக்க வேண்டும். அதனை விட்டு அரசாங்கத்தோடு சேர்த்து, பித்தலாட்டம் ஆடி, மக்களை ஏமாற்ற வேண்டாம் என கூறிவைக்க விரும்புகின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழன்
www.thamilan.lk

# வணிக உலகம்
Business world

# பெருநிறுவனத் தரத்தில் கிளவுட் அடிப்படையிலான பணிப்பாய்வுத் தானியங்கல் தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தும் இலங்கையின் முதலாவது காப்புறுதி வழங்குநரான AIA

கிளவுட் (Cloud) அடிப்படையிலான பணிப்பாய்வுத் தானியங்கல் (Workflow Automation) தொழில்நுட்பத்தின் அறிமுகப் படுத்தலுடன் இலங்கைக் காப்புறுதித்துறையில் முதன்முறையாக மற்றுமொரு புரட்சிகரமான தொரு டிஜிட்டல் மாற்றத்தினை AIA இன்ஷூரன்ஸ் அறிவித்திருக்கின்றது. AIA தனது பல சிக்கலான மற்றும் முக்கியமான பணிப்பாய்வுகளின் தானியங்கல் செயல்முறைகளை இயலுமாக்கு வதற்கு மைக்ரோசொஃப்ட் அஸூர் லொஜிக் அப்ஸ் (Microsoft Azure Logic Apps) இனைத் தெரிவுசெய்திருக்கின்றது.

தானியங்கல் திட்டமானது AIAஇனது செயற்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் பல்வேறு தொழிற்பாடுகள் அனைத்திலும் அறிமுகப்படுத் தப்படுகின்றது. மேலும், இது புதிய வியாபாரச் சமூகமயமாக்கலுடன் தொடர்புடைய வழமையான - கிரமமான ஊழியர்களினால் மேற்கொள்ளப்படும் செயல்முறைகள் மற்றும் பல்வேறு ஏனைய அனைத்து வாடிக்கையாளர் சேவை செயல்முறைகள் ஆகியவற்றை மிகவும் எளிதாக்குகின்றது. பணிப்பாய்வுத் தானியங்கல் செயல்முறையினை மேம்படுத்தலுடன் பயன்படுத்துவதானது காப்புறுதித் திட்ட விநியோகம் மற்றும் இழப்பீட்டுக் கோரிக்கை மேலாண்மையுடன் தொடர்புடைய வியாபாரச் செயல்முறைகளின் வினைத்திறன் மற்றும் துல்லியத்தன்மை ஆகியவற்றை அதிகரித்தல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் உதவுகின்றது.

AIA இன் பிரதான நிறைவேற்று அதிகாரி நிகில் அத்வானி இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், டிஜிட்டல் மாற்றமானது AIAஇற்கான அத்தியாவசியமான முன்னுரிமைக்குரியதொரு விடயமாகவே திகழ்கின்றது. எங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறந்த சேவையினை வழங்குவதற்காக மிகவும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதற்கு நாங்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். கிளவுட் அடிப்படையிலான பணிப்பாய்வுத் தானியங்கல் தொழில்நுட்பமானது இலங்கைக்கு டிஜிட்டல் மாற்றம் மற்றும் தானியங்கல் செயல்முறையில் புதிய பரிமாணத்தையே கொண்டுவருகின்றது. இந்த குறிப்பிட்ட விசேட திட்டத்துடனான எங்களின் இறுதியான இலக்கானது எங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு அனுகூலங்களை வழங்கக்கூடிய வினைத்திறனான, துல்லியமான மற்றும் வேகமான காப்புறுதி விநியோகத்தினை உறுதிப்படுத்துவதாகும் எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

AIA இன் பிரதான தொழில்நுட்ப உத்தியோகத்தர் உமேஷி டிபொன்சேகா கருத்துத் தெரிவிக்கையில், தானியங்கல் மேற்கொள்ளப்பட்ட பணிப் பாய்வினை பயன்படுத்துவதன் மூலம் நாங்கள் நிறுவன உள்ளகச் செயல்முறைகளை நெறிப் படுத்துவதோடு, அதனை மேலும் துரிதப்படுத்து கின்றோம். அத்துடன், ஊழியர்களினால் மேற்கொள்ளப்படும் பெருமளவான தலையீடுகளையும் குறைக்கின்றோம். உண்மையில் இத்தீர்வானது மிகவும் பயனர் நட்புறவானதாகவும் இணைய இணைப்பு மற்றும் இணைய உலாவி ஒன்று காணப்படும் எந்தவொரு சாதனத்திலும் தொழில்படக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. மேலும் உலகின் எந்தவொரு இடத்திலிருந்தும் இதனை அணுகக்கூடியதாகவே காணப்படுகின்றது. இந்த மேகக்கணி (கிளவுட்) சேவையானது பயனர்களுக்கு எவ்விதத் தடங்கலுமற்ற மேம்பட்ட அனுபவத்தை வழங்குவதற்காக நிறுவனம் முழுவதும் பல அமைப்புகள் மற்றும் சேவைகளுடன் ஒருங்கிணைக்கப்படுகின்றது. மிகச்சிறந்த பணிமுறையுடன் உண்மையான




அனுகூலங்களைப் பெறுவதற்காக வாடிக்கை யாளர்களுக்காக நிறுவன அமைப்பில் புதுமை யான மற்றும் வழமையான செயல்முறைகளில் ஒரு மாற்றம் நிகழவேண்டும். நிஜமாக AIAஇல் நாங்கள் இதனையே மிகவும் துல்லியமாக மேற்கொள்கின்றோம் - எனக் கருத்துத் தெரிவித் திருந்தார்.

AIAஇன் பிரதான சட்ட, செயற்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் பணிப்பாளர் சத்துரி முனவீர கருத்துத் தெரிவிக்கையில், எங்களுடைய செயல்முறைகளை மேம்படுத்துவதற்கான வழிகளையே நாங்கள் AIA இல் தொடர்ச்சியாக ஆராய்கின்றோம். ஆகவே, எங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு இணையற்ற சௌகரியத்தினையும் இதன்மூலமாக எங்களால் வழங்க முடியும். இப்புதிய கிளவுட் அடிப்படையிலான பணிப்பாய்வுத் தானியங்கலானது எங்களுடைய வாடிக்கையாளர் அனுபவத்தினை மிகவும் வினைத்திறன்மிக்கதாக நிர்வகிப்பதை இயலுமாக்கும் விதமாக நிறுவன சமூகமயமாக்கல் செயல்முறையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் மற்றும் முழு நிறுவனத்தினதும் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும் எங்களுக்குப் பெரிதும் உதவுகின்றது. எங்களின் இறுதியான இலக்கானது வாடிக்கையாளர் விசுவாசத்தினை அதிகரிப்பதும் மற்றும் எங்கள் வியாபாரத்தினை வளர்ச்சிப்பாதையில் பயணிக்கச் செய்வதுமாகும் எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

(குளோபல் பேங்கிக் மற்றும் பைனான்ஸ் ரிவியு சஞ்சிகையினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ள) இலங்கையின் மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதி வழங்குநராகத் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களாகத் திகழும் AIA டிஜிட்டல் மாற்றத்தில் எப்போதும் முன்னணியில் திகழ்வதோடு, செயற்திறன் மற்றும் வாடிக்கையாளர் சேவையினை மேம்படுத்துவதற்காகத் தொழில்நுட்பத்தில் தொடர்ச்சியாக பெருமளவில் முதலீடுகளையும் மேற்கொள்கின்றது.

## சிறந்த கூட்டாண்மை குடிமகன் நிலைபேறாண்மை விருதுகள்

# 2020இல் சிறந்த பத்து நிறுவனங்கள் வரிசையில் CDBக்கு கௌரவிப்பு




CDB சிறந்த கூட்டாண்மை குடிமகன் நிலைபேறாண்மை விருதுகள் தெரிவுக்குழுவின் தவிசாளர் கலாநிதி ஆனந்த மல்லவதந்திரி, CDBஇன் நிறைவேற்றுப் பணிப்பாளர்/பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி/பிரதம நிதி அதிகாரி தமித் தென்னகோன், CDBஇன் நிலைபேறாண்மை தலைமை அதிகாரி/திறன் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி அரோஷி ரணதுங்க, இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தவிசாளர் கலாநிதி. ஹான்ஸ் விஜயசூரிய, CDBஇன் புத்தாக்கம் மற்றும் வியாபார புலனாய்வு பொது முகாமையாளர் ஹசித தசநாயக்க மற்றும் CDBஇன் நிலைபேறாண்மை செயற்பாடுகளுக்கான சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி ஒவினி டயஸ் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இலங்கையின் முன்னணி வங்கிசாரா நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமான சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி (CDB), அண்மையில் இடம்பெற்ற சிறந்த கூட்டாண்மை குடிமகன் நிலைபேறாண்மை விருதுகள் 2020இல் இலங்கையின் சிறந்த பத்து கூட்டாண்மை நிறுவனங்களில் ஒன்றாக கௌரவிக்கப்பட்டிருந்தது. நான்காவது தடவையாக CDB கௌரவிக்கப்பட்டிருந்ததுடன், இதில் 2018 - 2020 வரை மூன்று தடவைகள் தொடர்ச்சியாக விருதை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. சகல பிரிவுகளிலும் நீண்டகாலமாக நிலைபேறான வியாபார செயன்முறைகளை முன்னெடுப்பதற்கு காண்பித்திருந்த அர்ப்பணிப்பை உறுதிசெய்யும் வகையில் CDBக்கு இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் நிலைபேறாண்மை தொடர்பில் உள்நாட்டு நிறுவனங்கள் காண்பித்திருந்த முயற்சிகளையும் புதிய செயற்றிட்டங்களையும் கௌரவிக்கும் வகையில் வருடாந்தம் சிறந்த கூட்டாண்மை குடிமகன் விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றது. சூழல், சமூகம், பொருளாதாரம் மற்றும் ஒழுக்க செயன்முறைகள் போன்றவற்றில் இந்தச் செயற்பாடுகளின் தாக்கம் மற்றும் உள்ளம்சங்கள் போன்றன பலதுறைசார் நிபுணர்களினால் பல்வேறு கட்டங்களில் மதிப்பீடுசெய்யப்பட்டு, வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுகின்றனர்.

பொதுபட்டியலிடப்பட்ட கூட்டாண்மை நிறுவனமாக சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி (CDB) திகழ்வதுடன், இலங்கையில் காணப்படும் சிறந்த ஐந்து வங்கிசாரா நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் ஒன்றாகவும் திகழ்கின்றது. நாடளாவிய ரீதியில் பரந்த பிரசன்னத்தைக் கொண்டுள்ளதுடன், இலங்கையில் நிதிச் சேவைகள் முன்னெடுக்கப்படுவதில் புரட்சிகரமான மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## தன நிதானய
உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 13 23 46 72
திகதி: 06.04.2021
சீட்டிழுப்பு இலக்கம்: 0486

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 6 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 118 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 242 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 5774 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 3798 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 95436 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 17796 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 4,265.920.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 123,170

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 91,712,730.80

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Web: www.nlb.lk

## கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2744 சீட்டிழுப்பு திகதி: 06.04.2021
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கங்கள்: 02 41 69 73

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 9 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 195 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 411 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 10524 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 6929 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 174559 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 31940 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 224,567

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 7,160,540.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 63,367,133.20

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk

செய்திகளை உடனுக்குடன் அறிய
www.thamilan.lk
தளத்திற்கு பிரவேசியுங்கள்

## மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4449
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 06.04.2021

வெற்றி எழுத்து: F
வெற்றி இலக்கங்கள்: 9 4 1 5 1 4

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | ■ 9 4 1 5 1 4 | ரூபா 2,000,000/- | 2 |
| 2ஆம் பரிசு | ■ ■ 4 1 5 1 4 | ரூபா 100,000/- | 13 |
| 3ஆம் பரிசு | ■ ■ ■ 1 5 1 4 | ரூபா 10,000/- | 140 |
| 4ஆம் பரிசு | ■ ■ ■ ■ 5 1 4 | ரூபா 1,000/- | 1416 |
| 5ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ 1 4 | ரூபா 100/- | 14162 |
| 6ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ ■ 4 | ரூபா 20/- | 140342 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ 9 4 1 5 1 ■ | ரூபா 10,000/- | 12 |
| 8ஆம் பரிசு | ■ 9 4 1 5 ■ ■ | ரூபா 1,000/- | 151 |
| 9ஆம் பரிசு | ■ 9 4 1 ■ ■ ■ | ரூபா 100/- | 1455 |
| 10ஆம் பரிசு | ■ 9 4 ■ ■ ■ ■ | ரூபா 50/- | 14044 |
| 11ஆம் பரிசு | F ■ ■ ■ ■ ■ ■ | ரூபா 20/- | 56220 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரு. 14,582,140.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,213,326.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை
www.nlb.lk
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி: 011-4607000, 011-2324324, Fax: 011-4669416.

## சுபிரி வாசனா சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி: 06.04.2021
சீட்டிழுப்பு இலக்கம்: 1589
சுப்பர் இலக்கம்: 10
வெற்றி இலக்கங்கள்: 02 08 30 34

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | 0 |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 20,000.00 | 10 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 133 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 408 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 5665 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 4965 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 69790 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 16882 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 3,012,440.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 3,187,666.80

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk

## Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம்: 0809
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 06.04.2021

ஆங்கில எழுத்து: M
சுப்பர் இலக்கம்: 06
வெற்றி இலக்கங்கள்: 10 58 64 72

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 111 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 247 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5633 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3795 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 95016 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 17500 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 127,603,960.40

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 3,499,920.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
Web: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

## சுற்றுநிருபத்துக்கு வினோ எம்.பி. கண்டனம்!

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் ஊடகவியலாளர்களின் அனுமதி மறுப்பானது, பொதுமக்கள் உண்மைச் செய்திகளை அறிந்துவிடக்கூடாது என்பது மட்டுமல்லாது மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கத்தையோ, அரச அதிகாரிகளையோ பொது வெளியில், ஊடகவியலாளர்கள் முன்னிலையில் பிரச்சினைகளை கொண்டுவரக்கூடாது என்ற உண்மைகளை மறைக்கும் செயற்பாடாகும் - என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் போது செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்காதிருக்கும் சுற்றுநிருபம் தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் நேற்று செவ்வாய்க்கிழமை மேலும் தெரிவிக்கையில்,



ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் தான் செய்தியாளர்களை சந்திக்க முடியுமென்றால் - முடிவுகளை அறிவிக்கவேணுமென்றால் மக்கள் பிரதிநிதிகளை அழைக்கவும் தேவையில்லை. பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் அழைக்கத் தேவையில்லை.

மாவட்ட, பிரதேச அபிவிருத்தி விடயங்களை அதிகாரிகளுடன் பேசிவிட்டு ஊடக சந்திப்பை நடத்த முடியும்.

இது முற்றிலும் உண்மைகளை மறைக்கும் விடயமாகும். ஊடகவியலாளர்களின் தனித்துவமான, உண்மைச் செய்திகளை சேகரிக்கும் அவர்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு சவால் விடுக்கும் செயற்பாடாகும். மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவர்கள் தவறாக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கும், உண்மைகளை சொல்லாது விடப்படுவதற்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கும்.

நாடாளுமன்றத்தில் விவாதங்களை நேரலையாக ஒளிபரப்ப ஊடகங்கள் அனுமதிக்கப்படும்போது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க மறுக்கப்படுவது அரசாங்கத்தின் மீது சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது.

உள்ளூர் செய்தியாளர்களை சந்தேகக்கண்கொண்டு பார்க்கப்படுவது அவர்களின் நேர்மை, துணிச்சல், பக்கம்சாரா நடுநிலை மீது கை வைக்கும் ஓர் அரச அடக்குமுறையாகவே தெரிகிறது. எனவே ஊடகங்களினதும், ஊடகவியலாளர்களினதும் குரல்வளைகளை நெரிக்கும் - சுதந்திரத்தைப் பறிக்கும் செயற்பாடுகளை நிறுத்தி உண்மைகளையும் பொய்யான விடையங்களையும் வெளி உலகுக்கும், மக்களுக்கும் கொண்டுசேர்க்க ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்கு ஊடகங்களை அனுமதிக்க வேண்டும் - என அவர் மேலும் தெரிவித்தார்.

# நில அளவைத் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக யாழ். அலுவலகத்தை முடக்கி போராடுவோம்

## எச்சரிக்கை விடுக்கிறார் சிவாஜிலிங்கம்

நில அளவைத் திணைக்களத்தின் செயற்பாடுகளை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது. யாழ். அலுவலகத்தை முடக்கி போராட்டம் நடத்துவோம் - என வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். மிருசுவில் பகுதியில் இராணுவத்தினரின் தேவைக்காக சுமார் 40 ஏக்கர் காணியை சுவீகரிப்பிற்காக அளவீடுசெய்யும் நடவடிக்கையை எதிர்த்து காணி உரிமையாளர் மற்றும் அரசியல்வாதிகள் இணைந்து நேற்று முன்தினம் போராட்டம் நடத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் பல போராட்டங்களை செய்யும்போது அந்தக் காணிகள் அளவிடும் பணிகள் இடைநிறுத்தப்படுகின்றன. இதனை நாம் தொடர்ந்தும் செய்யமுடியாது. பல தடவைகள் நில அளவை



திணைக்களத்திற்கு கூறிவிட்டோம். எமது காணிகளை தரமாட்டோம். மக்களின் காணி மக்களுக்குத்தான் தேவை. அவர்களுக்கு சொந்தம் இவர்கள் இதை கேட்பதாக இல்லை. இவர்களின் செயற்பாடுகளை இனியும் பொறுக்க முடியாது.

நாம் யாழிலுள்ள அலுவலகத்தை முடக்கி போராட்டம் செய்யவேண்டி வரும். எமது மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் அரச அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும்.

எமது தன்மானத்தை இழந்து வாழ நாங்கள் விரும்பவில்லை. இராணுவ முகாமுக்கு முன்னால்தான் இருக்கிறோம். சுட விரும்பினால் சுடலாம். தண்ணீர் வீச வேண்டும் என்றால் வீசலாம். எதற்கும் மானமுள்ள தமிழன் அஞ்சமாட்டான் - என்றார்.

# வலி. தெற்கில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

வலி. தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் பங்களிப்பில் அத்தியாவசிய உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச சபையின் தவிசாளர் க.தர்ஷன், சந்நிதியான் ஆச்சிரமத்திடம் வேண்டுகோள் விடுத்ததன் பயனாக குறித்த பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏழாலை, குப்பிளான், மயிலங்காடு, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 30 குடும்பங்களுக்கே உதவிப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

வலி. தெற்கு தவிசாளர் க.தர்ஷன், சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகன் சுவாமிகள், கிராமசேவகர் அகிலன், பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர் மக்களிடம் உதவிப்பொருட்களை கையளித்தனர்.



# தேசிய ரீதியில் விருதுகளை பெற்ற வடமாகாண இளைஞர் - யுவதிகள்



(வன்னி செய்தியாளர்)

இலங்கை அரசாங்கத்தின் சிலாஸ்கோம் (SLASSCOM) நிறுவனம் நடத்திய முயற்சியாளர்களுக்கான 2021 தேசிய புத்திக்கூர்மை விருதுகள் (National Ingenuity Awards) ஷங்கிரி-லா ஹோட்டல் (Shangri - La Hotel) 30 மார்ச் 2021இல் நடைபெற்றது.

இதில் சிலாஸ் கோம் (SLASSCOM) நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் பலர் பங்குபற்றினர்.

நூற்று எழுபதுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களிலிருந்து சிறந்த தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு மாகாண மற்றும் தேசிய ரீதியில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதில் கிளிநொச்சி, வட்டக்கச்சியைச் சேர்ந்த யதுஷா குலேந்திரன் (Olai Shop Pvt Ltd) இந்த வருடத்திற்கான வளர்ந்துவரும் பெண் தொழில்நுட்ப தொழில்முனைவர் விருதை தேசிய ரீதியில் மற்றும் வடமாகாண ரீதியில் (Emerging Woman Technopreneur of the Year -National & Provincial Level) பெற்றுக்கொண்டார்.

கிளிநொச்சி, வட்டக்கச்சியைச் சேர்ந்த குலேந்திரன் கோபீந்திரன் (HUEX STUDIOPvt Ltd) வடமாகாணத்தின் சிறந்த தொடக்க நிறுவனத்திற்கான (Best Startup) விருதை பெற்றுக்கொண்டார்.

வடமாகாணத்தின் சிறந்த புதுமை தயாரிப்புக்கான (Best Innovative Product) பல்கலைக்கழக ரீதியான விருதை யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மயூரவாணி மதுரநாதன் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தைச் (IIT) சேர்ந்த ஜூட் சஜித், விதுஷன் சில்வெஸ்டர், அகலங்க பெரேரா, ஹெல்மினி பௌலா, தேஷன் ஜெயவர்த்தன, இஸ்மாயில் நைசர் ஆகியோர் பெற்றுக்கொண்டுள்ளனர்.

மேலும் வடமாகாணத்தின் சிறந்த புதுமை தயாரிப்புக்கான (Best Innovative Product) பாடசாலை ரீதியான விருதை யாழ்/இந்துக் கல்லூரியைச் சேர்ந்த முருகதாஸ் பிரதாபன் மற்றும் யாழ்/வேம்படி மகளிர் பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த மதுரா அருந்தவம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.




# எழுதுமட்டுவாள் மயானக் காணி இராணுவத்தினர் வசம்; தனியார் காணியில் உடல்கள் தகனம்

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி- எழுதுமட்டுவாள் வடக்கு பகுதியில் மயானத்திற்கென தனியார் ஒருவரால் சாவகச்சேரி பிரதேச சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியும் தற்போது இராணுவத்தின் வசம் காணப்படுவதாக மக்கள் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை எழுதுமட்டுவாள் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 50 ஏக்கர் காணியை சுவீகரிக்கும் முனைப்பில் நில அளவைத் திணைக்களம் அளக்க வந்தபோது அதனை எதிர்த்து முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் பிரதிநிதிகளே இவ்வாறு தெரிவித்திருந்தனர். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

எழுதுமட்டுவாள் 52ஆவது படைத்தலைமையகம் அமைந்துள்ள 50 ஏக்கர் காணிக்கு உரித்தாளரான த.மகேஸ்வரி என்பவர் கடந்த காலத்தில் உரிய முறைப்படி தனது காணியில் 2 ஏக்கர் நிலப்பரப்பை மயானப் பயன்பாட்டிற்கென சாவகச்சேரி பிரதேச சபைக்கு வழங்கியிருந்தார். இருப்பினும், யுத்த காலத்தின் பின்னர் காணியை அன்பளிப்பாக வழங்கியவரின் 50 ஏக்கர் காணியுடன் மயானத்திற்கு வழங்கப்பட்ட காணியும் இராணுவத்தினரால் (52ஆவது படைப் பிரிவால்) கையகப்படுத்தப்பட்டுவிட்டது. கிராமத்தில் தற்போது மயானம் இல்லாமையால் தனியார் காணி ஒன்றில் உடல்களை தகனம் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதாக மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

# கிளிநொச்சி பிரமந்தனாறு குளத்திலிருந்து 500 ஏக்கர் சிறுபோக செய்கை மேற்கொள்ள தீர்மானம்



கிளிநொச்சி பிரமந்தனாறு குளத்திலிருந்து 500 ஏக்கர் சிறுபோக செய்கை மேற்கொள்ள தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பிரமந்தனாறு குளத்தின் கீழ் சிறுபோக செய்கை மேற்கொள்வது தொடர்பான கூட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிறிமோகன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலின்போது அக்குளத்தின் கீழ் 500 ஏக்கரில் செய்கை மேற்கொள்வதற்கான தீர்மானம் எட்டப்பட்டது.

12 அடி கொள்ளளவுகொண்ட பிரமந்தனாறு குளம் 3155 ஏக்கர் அடி நீர் கொள்ளளவு கொண்டதாகும்.

தற்போது 11.06" நீர் காணப்படும் நிலையில், 2925 ஏக்கர் அடி நீர் காணப்படுவதாக நீர்ப்பாசன பொறியியலாளர் செந்தில்குமரன் தெரிவித்தார்.

நீரின் அளவிற்கு அமைவாக இம்முறை 500 ஏக்கர் சிறுபோகம் மேற்கொள்ள முடியும் என தீர்மானம் எட்டப்பட்டது.

அதற்கமைவாக அடுத்த வாரம் செய்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குறித்த கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிறிமோகன், கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன், நீர்ப்பாசன பொறியியலாளர் செந்தில்குமரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன், கமநல சேவைகள் மற்றம் கால்நடை நிணைக்களங்களின் அதிகாரிகள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கடந்த வருடம் குறித்த குளத்தின் கீழ் 450 ஏக்கர் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில்,

இம்முறை மேலதிகமாக 50 ஏக்கர் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன், கால்நடைகளுக்கான புல் வளர்ப்புக்கும்மானியம் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் 16 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

## வைத்தியர் கேதீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் மேலும் 15 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் ஒருவருக்கும் கொரோனா தொற்று உள்ளமை நேற்று முன்தினம் கண்டறியப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொற்றுக்குள்ளானவர்களில் 8 பேர் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்டவர்கள். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடங்களில் 761 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே 16 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அந்த வகையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில்



ஒருவருக்கும், பருத்தித்துறை வைத்தியசாலை நோயாளர் விடுதியில் ஒருவருக்கும், நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த யாழ். மாநகர சபை உறுப்பினர் ஒருவருக்கும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவருக்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்ற நோயாளிகள் இருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் நால்வர் பாற்பண்ணை கிராமத்தைச் சேர்ந்தவர்கள். மூவர் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களென சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள். மற்றொருவர் யாழ்ப்பாணம் மாநகரில் வங்கியொன்றில் பணியாற்றும் கொக்குவிலில் வசிப்பவர்.

அத்தோடு வவுனியா பொது வைத்தியசாலை விடுதியில் சிகிச்சைபெற்றுவந்த நோயாளி ஒருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது – என்றார்.

# அருட்கலாநிதி மரியசேவியர் அடிகளாரின் பூதவுடல் நல்லடக்கம்

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கலை இலக்கியத்துறையில் கடந்த 55 ஆண்டுகளுக்கு மேலாக தன் வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்துக் காலமான யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகர், இயக்குநர் கலைத்தூது அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மரியசேவியர் அடிகளின் புகழுடல் நேற்று திங்கட்கிழமை காலை 10 மணிமுதல் யாழ்.



ஆயர் இல்ல சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நேற்றுக் காலை 8 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஆரம்பமாகின. அதனைத் தொடர்ந்து காலை 9.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதன்பின்னர் மரியசேவியர் அடிகளின் புகழுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அடிகளாரின் இறுதி நிகழ்வில் யாழ்ப்பாணம் மன்னார் மட்டக்களப்பு மறைமாவட்டங்களிலிருந்து குருக்கள், துறவிகள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.



மன்னார் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பூதவுடல் இரங்கல் திருப்பலியுடன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் நேற்று முன்தினம் நல்லடக்கம் செய்யப்பட்டது. அத்துடன் அவரின் உருவச்சிலை மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் திறந்துவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சனின் நாடாளுமன்ற உறுப்புரிமை: ஆளும் - எதிர்க்கட்சிகள் கடும் வாக்குவாதம்!

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவுக்கு விடுமுறை வழங்கக்கோரி எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட விடுமுறை பிரேரணை சபாநாயகரினால் நிராகரிக்கப்பட்டதையடுத்து, சபையில் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் காலை 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடியது. இதனையடுத்து இடம்பெற்ற பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, விசேட கூற்றொன்றை முன்வைத்து, சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. அந்த உத்தரவை சவாலுக்குட்படுத்தி உயர் நீதிமன்றில் முறையிட நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

இருந்தபோதும் ரஞ்சன் ராமநாயக்க நாடாளுமன்றத்துக்கு வராமல் இருப்பது அவரது தனிப்பட்ட காரணத்துக்கு அல்ல. சபாநாயகரான நீங்கள் அதற்கான உத்தரவை வழங்காமல் இருந்ததனாலாகும். அதனால் 3 மாதங்கள் தொடர்ந்து நாடாளுமன்றத்துக்கு வருகை தராமல் இருப்பதை அடிப்படையாகக்கொண்டு, அவரது நாடாளுமன்ற பதவி இல்லாமல்போகும் நிலை இருக்கின்றது. அதனால் அவரது 3 மாத விடுமுறை பிரேரணையை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

அதற்கு சபாநாயகர், இதுதொடர்பில் கவனம் செலுத்துவதாக குறிப்பிட்டு சபை நடவடிக்கையை தொடங்க முற்பட்டபோது, மீண்டும் எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அரசியலமைப்பின் பிரகாரம் 3 மாதத்துக்கு நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர் ஒருவர் வராவிட்டால் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாமல்போகின்றது. தற்போது ரஞ்சன் ராமநாயக்க நாடாளுமன்றத்துக்கு வருகை தராமல் 3 மாதங்களை முடிவடைய இருக்கின்றது.

அதனால் 3 மாதங்கள் வராமை என்ற அடிப்படையில் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வெற்றிடமாக்காமல், இருப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க உத்தரவிட வேண்டும். அதற்காக நீதிமன்ற உத்தரவு வரும்வரை ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கான விடுமுறை பிரேரணையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

இதற்கு சபாநாயர் பதிலளிக்கையில்,

ரஞ்சன் ராமநாயக்க தொடர்பான நீதிமன்ற உத்தரவு இதுவரை எனக்கு அறிவிக்கப்படவில்லை. அவருக்கான விடுமுறை பிரேரணையை தற்போது என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. எந்த உறுப்பினரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் என்னால் நீக்க முடியாது. சட்டத்தின் அடிப்படையிலே என்னால் செயற்பட முடியும் - என்றார்.

இதன்போது எழுந்த சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிக்கையில்,

ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பாக ஏற்கனவே சபாநாயகரினால் தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருக்கின்றது. அந்தத் தீர்ப்பில் எந்த மாற்றமும் இல்லை. அதனால் எதிர்க்கட்சிக்குத் தேவையான முறையில் சபாநாயகரின் தீர்ப்பை மாற்ற முடியாது - என்றார்.

இதனையடுத்து அரச தரப்பினருக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது. இதன்போது அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, சஜித் பிரேமதாசவை குற்றஞ்சாட்டி சில விடயங்களை முன்வைத்தார். எனினும், இதற்கு தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட சஜித் பிரேமதாச, அந்த விடயங்களை ஹன்சாட்டிலிருந்து நீக்கவேண்டும் என சபாநாயகரிடம் கோரினார்.

இது தொடர்பில் தான் நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் கூறினார். இதன் பின்னரும் மஹிந்தானந்த அளுத்கமகே சஜித் பிரேமதாசவுடன் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

# ஹட்டனில் முச்சக்கரவண்டி விபத்து: கைக்குழந்தை உட்பட இருவர் காயம்!







ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் ஸ்டதர்டன் தோட்டத்திற்கு அருகில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் ஏற்பட்ட வாகன விபத்தில் இருவர் காயத்துக்குள்ளாகியுள்ளனர்.

ஹட்டனிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி ஹட்டன் - கொழும்பு பிரதான பாதையின் ஸ்டர்டதன் தோட்ட பிரதான பாலத்துக்கு அருகில் வண்டியின் முன்பக்க சக்கரம் திடீரென்று வெடித்ததால் சாரதிக்கு முச்சக்கர வண்டியின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளது.

அத்தருணத்தில் பிரதான பாதையின் ஊடாக சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் முச்சக்கர வண்டி மோதியதால பாதையின் நடுவில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதனையடுத்து பஸ்ஸில் பயணித்த பயணிகள் உடனடியாக முச்சக்கரவண்டியில் பயணித்த சாரதி மூன்று பெண்கள் மற்றும் கைக்குழந்தையையும் மீட்டெடுத்துள்ளனர்.

இதேவேளை, முச்சக்கரவண்டியில் பயணித்த கைக்குழந்தைக்கு சிறிய காயம் ஏற்பட்டதால் அந்தக் குழந்தை வட்டவளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மக்கள் பிரச்சினைகளுக்கு முன்னுரிமையளித்து செயற்பட்ட அரச நிர்வாகி சிவஞானசோதி

## - நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட்டின் அனுதாபச் செய்தி

சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளரும் மூத்த அரச நிர்வாகியும் மனிதநேயமுள்ளவருமான வே.சிவஞானசோதியின் மறைவால் கடும் கவலையுற்றுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் கூறியுள்ளதாவது,

நண்பர் சிவஞானசோதி, நாடறிந்த அரச நிர்வாகி. செய்யும் தொழிலே தெய்வம் என்கின்ற தத்துவத்தை அவரது சேவையில் காணமுடிந்தது. வேறுபாட்டுச் சிந்தனைகள் அவரது அரச பணியில் இருந்தது கிடையாது. எவ்வளவு பெரிய, எத்தனை சிறப்புடைய பதவிகளை அவர் வகித்தபோதும், செருக்குத்தனமின்றிக் கடமையாற்றிய கண்ணியவானாகவே அவரை நான் பார்க்கிறேன்.

போருக்குப் பின்னர் மக்களுக்குச் செய்யவேண்டியிருந்த சகல கருமங்களையும் களத்தில் நின்று சாதித்தவர். மீள்குடியேற்றம் என்பது வார்த்தைகளால் சொல்லிவிட்டு வாளாவிருந்து விடுவதல்ல. மக்களின் நாளாந்த வாழ்நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடுவதே இதில் பிரதானம். இத்தனையையும் இலகுவாகச் செய்துமுடிக்க அமரர் சிவஞானசோதி அரும்பாடுபட்டார்.

அப்பலோ வைத்தியசாலையில் அண்மையில் அவரைக் காணக்கிடைத்தது. அவரது மனைவியார் சக்கரநாற்காலியில் வைத்தவாறு சிவஞானசோதியை தள்ளிக்கொண்டு வந்தார். நன்கு மெலிந்திருந்த அவரது தோற்றத்தைக் கண்டு நான் கவலையடைந்தேன். அவர் என்னை அடையாளங்காணவில்லை. என்றாலும், நானே அவர் அருகில் சென்று, சிவஞானசோதியா நீங்கள்? எனக் கேட்டுவிட்டு, சுகம் விசாரித்துவிட்டு வந்தேன். மிக விரைவில் குணமடைந்து விடுவேன் என்று அவர் என்னிடம் கூறினார்.

ஆனால், ஒருவாரம் கடந்த பின்னர் அவரது மரணச் செய்தியே எனக்கு கிடைத்தது. என்ன செய்வது?

காலன் வந்தால், இவ்வாறுதான் நாமும் ஒருநாள் காவுகொள்ளப்படுவோம்.

அவரது இழப்பால் துயருறும் அவரின் மனைவி மற்றும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றேன் - என்று தெரிவித்துள்ளார்.

# காடழிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.தே.க. கொழும்பில் போராட்டம்




படப்பிடிப்பு: பிரதிப் தம்பரகே

நாட்டில் இடம்பெறும் காடழிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (செவ்வாய்க்கிழமை) கொழும்பில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு ஐக்கிய நாடுகளின் தலைமை அலுவலகம் முன்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் ருவான் விஜேவர்தன உட்பட கட்சியின் உறுப்பினர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸுக்கு இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரபூர்வமாக கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

இந்தக் கடிதம் நேற்றைய தினம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியிடம் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தனவினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இயற்கைச் சூழலை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிங்கராஜ வனம் பாதுகாக்கப்பட்ட வலயமாக சட்டத்தின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வனப் பகுதியில் எவ்விதமான அழிவை ஏற்படுத்தும் செயற்பாடுகளையும் செய்வதற்கு அனுமதிக்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சட்டங்களின் ஊடாக மட்டுமன்றி, சர்வதேச உடன்படிக்கைகளின் மூலமும் சிங்கராஜ வனம் பாதுகாக்கப்பட்ட வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது என கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வனப் பகுதியில் எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தையும் முன்னெடுக்க அனுமதிக்கக்கூடாது எனவும், இது குறித்து ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பதுளையில் 15 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்

(பதுளை)

பதுளை மாநகரின் வர்த்தக நிலையங்களில் 15 வர்த்தகர்களுக்கெதிராக பதுளை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் கூட்டாக பதுளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நேற்று வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பதுளை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பத்து பேர் கொண்ட குழுவினர், பதுளை மாநகரின் 160 வர்த்தக நிலையங்களை முற்றுகையிட்டு, நேற்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அந்த சோதனை நடவடிக்கைகளுக்கமைய, 15 வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த 15 வர்த்தகர்களுக்கெதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு அவர்களுக்கெதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அத்துடன், மேலும் பெரும்பாலான வர்த்தகர்களுக்கு எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வழக்குகள் தொடரப்பட்ட 15 வர்த்தகர்களுக்கெதிராக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாமை, அசுத்தமான உணவுவகைகளை சுத்தப்படுத்தி காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை, மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் வைத்திருந்தமை, காலம் கடந்த நிலையிலான பொருட்கள் இருந்தமை, எடை குறைக்கப்பட்ட நிலையிலான பொதிசெய்யப்பட்ட பொருட்களை கண்டுபிடித்தமை, பொருட்களை பதுக்கிவைத்திருந்தமை, கூடுதல் விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டமை போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

நேற்று பதுளை நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் உணவகங்கள், உணவுப் பொருட்கள் விற்பனைசெய்யப்படும் இடங்கள், மளிகைப் பொருட்கள் விற்பனை செய்யும் இடங்கள் முற்றுகையிடப்பட்டன.

பொதுமக்களின் நலன் கருதியும், அவர்களினால் செய்யப்பட்ட புகார்களின் அடிப்படையிலுமே மேற்படி முற்றுகை இடப்பட்டு, சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

# மதுரங்குளியில் நபரொருவர் கொலை: மனைவி உட்பட மூன்று பேர் கைது




தனது கணவரை தாக்கி கொலைசெய்ததாக சந்தேகிக்கப்படும் அவரது மனைவி மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியதாக கூறப்படும் அவரது சகோதரர் மற்றும் சகோதரி ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி, பாலசோல பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய வன்னிநாயக்க தென்னக்கோன் முதியன்சலாகே அசங்க சமன் குமார என்றழைக்கப்படும் இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்துள்ளவர், தினந்தோறும் மதுபோதையில் வீட்டுக்கு வந்து மனைவியுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுபவர் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. கடந்த ஐந்தாம் திகதி இரவும் அவர் மதுபோதையில் வீட்டுக்கு வந்து மனைவியுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

சிறிதுநேரத்தின் பின்னர் அவர் தனது படுக்கைக்கு அருகிலுள்ள சுவரில் கழுத்தில் கயிறு மாட்டப்பட்டு தொங்குவதை அவதானித்த ஒருவர் 119 என்ற அவசர அழைப்புக்கு தகவல் வழங்கியுள்ளார். அந்தத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மதுபோதையில் வீட்டுக்கு வந்து இடையூறு ஏற்படுத்துவதால் அவரின் மனைவி மற்றும் மனைவியின் சகோதரர் மற்றும் சகோதரி ஆகியோர் அவரை தாக்கி கொலை செய்துவிட்ட அதன் பின்னர், அவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதுபோல் காண்பிப்பதற்கு முயற்சித்துள்ளனர் என்று சந்தேகிப்பதாக பொலிஸ் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முந்தல் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பொலிஸ் வேடம் தரித்து கொள்ளை சம்பவங்களை முன்னெடுக்கும் மர்மக் குழுக்கள்!

## - பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எச்சரிக்கை

வவுனியா பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸ் வேடம் தரித்து கொள்ளையில் ஈடுபட்ட இரண்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஆகவே, இந்த புத்தாண்டு காலப்பகுதியில் பொலிஸ் அல்லது குற்றப்புலனாய்வு அதிகாரிகளாக வேடம் தரித்து கொள்ளைச் சம்பவங்களை மேற்கொள்பவர்கள் தொடர்பில் அவதானத்துடன் இருப்பது அவசியம் - என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பண்டிகைக்காலத்தில் பல்வேறு வகையான குற்றச்செயல்கள் பதிவாவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளன.

விசேடமாக பொலிஸ் அதிகாரிகளாக வேடமிட்டு நிதி மோசடி செய்யும் சம்பவங்கள் தொடர்ச்சியாக பதிவாகி வருகின்றன. அதற்கமைய, நேற்று முன்தினம் வவுனியா, மையலங்கேனி பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நுழைந்த சிலர், பொலிஸ் அதிகாரிகள் என்று தெரிவித்து ஒரு இலட்சத்து 8 ஆயிரம் ரூபா நிதி கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை, வவுனியா, புளியங்குளம் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நுழைந்த மேலும் சிலர் பொலிஸார் என்று தெரிவித்து 3 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் மற்றும் நிதி கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இதுதொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த பண்டிகை காலப்பகுதியில் கொள்ளைச் சம்வங்களில் ஈடுபடுபவர்கள் வீடுகளுக்கு வருவதற்கான வாயப்பு இருக்கின்றது.

பொலிஸ் அதிகாரிகள் அவ்வாறில்லாவிட்டால் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் என்று குறிப்பிட்டு வீடுகளுக்கு வந்து நிதி மோசடி செய்ய முடியும். அவ்வாறான சந்தப்பங்களில் அவதானத்துடன் செயற்படவேண்டும்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸ் அதிகாரிகள் அவ்வாறு வீடுகளுக்கு வருவார்களாக இருந்தால் அவர்களுக்கான சீருடை அல்லது சிவில் உடையில் வருவார்களாக இருந்தால் அவர்களுக்குரிய உத்தியோகபூர்வ அடையாள அட்டையுடன் வருகைதருவார்கள். இதுதொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

# பசறை பஸ் விபத்து விவகாரம்:

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பாக இருக்க வாய்ப்பில்லை

## - ஆய்வறிக்கையில் தகவல்

(பதுளை)

பசறை 13ஆவது மைல்கல்லில் இடம்பெற்ற தனியார் பஸ் விபத்து பாதை சீர்கேட்டினால் ஏற்பட்டதல்ல என்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை இதற்கு பொறுப்பாக இருக்க வாய்ப்பில்லையென்றும் இந்த விபத்து தொடர்பான விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 20ஆம் திகதி இவ்விபத்து இடம்பெற்றிருந்தது. இந்த விபத்து தொடர்பில் ஆராய விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாதை சீர்கேட்டினாலேயே இடம்பெற்றதென்று, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது. இதையடுத்தே, டபிள்யு.பீ.வீரதுங்க தலைமையிலான மூவரடங்கிய விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. இவ்விபத்து பாதை தரத்தினால் ஏற்பட்டதல்லவென்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்விபத்தில் 14 பேர் பலியானதுடன், 32 பேர் காயங்களுக்குள்ளாகியிருந்தனர். லுணுகலையிலிருந்து கொழும்பை நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸே விபத்துக்குள்ளானதாகும்.

விபத்து தொடர்பாக விபத்துக்குள்ளான பஸ் சாரதியும், விபத்துக்குள்ளான பஸ்ஸின் எதிர்த்திசையில் வந்த லொறிச் சாரதியும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இருந்தபோதிலும், தற்போது பஸ் சாரதி மட்டும் நாளைய தினம் (08-04-2021) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், லொறிச்சாரதி சீரர்ப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. விபத்து குறித்த வழக்கு விசாரணை நாளை (08-04-2021) பசறை நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அன்றைய தினம் சீரர்ப் பிணையில் விடுவிக்கப்பட்ட லொறிச் சாரதியும் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்று பசறை நீதிமன்ற நீதிபதி சமிந்த கருணாதாச உத்தரவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் அத்துமீறல் - கச்சதீவு விடயம் ஆகியன தொடர்பில் நிதானமாக செயற்படவேண்டும்

## - அரசாங்கத்திடம் ஆனந்தசங்கரி வலியுறுத்தல்

(கனகராசா சரவணன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பிலும், கச்சைதீவு விடயம் தொடர்பிலும் அரசாங்கம் நிதானமாக செயற்படவேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி வலியிறுத்தியுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி நேற்று முன்தினம் வெளயிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பிலும், கச்சதீவு விடயம் தொடர்பிலும் பல்வேறு தடவைகள் நான் கூறி வந்துள்ளேன். ஆனாலும் குறித்த பிரச்சினை தொடர்பில் இன்றுவரை தீர்வு எட்டப்படாத நிலையே காணப்படுகின்றது.

இந்திய - இலங்கை மீனவர்களின் முறுகல் நிலைமைக்குத் தீர்வு, இந்திய மீனவர்களுக்கும் உள்ளூர் மீனவர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள முறுகல்நிலை இருசாராரும் உணர்ச்சிவசப்படக்கூடிய விடயம் என்பதால் அது சம்பந்தமாக விடப்படுகின்ற அறிக்கைகள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். அத்தகைய அறிக்கைகள் இருசாராரின் உணர்வுகளை சாந்தப்படுத்தவேண்டுமேயொழிய தூண்டிவிடக் கூடியதொன்றாக இருக்கக்கூடாது.

உள்ளூர் மீனவர்களின் எண்ணிக்கை மிகச்சிறியது. ஆனால், இந்திய மீனவர்களின் எண்ணிக்கையோ மிகவும் அதிகமாகும். ஆகவே, உள்ளூர் மீனவர்கள்தான் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர்.

ஆனால், இந்திய மீனவர்களையும் அவர்களின் மீன்பிடி உபகரணங்களையும் அதிகளவில் கைப்பற்றவேண்டுமென இலங்கை கடற்படையினருக்கு அமைச்சரால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் கடுமையான உத்தரவு என்னை மிகவும் குழப்பமடையச் செய்துள்ளது. இந்த அறிக்கை இந்தியத் தலைவர்களை குழப்பமடையச் செய்து மாற்று நடவடிக்கைக்குத் தூண்டும் என்ற ஐயம் எனக்கு எழுகின்றது. அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் தீர்வையொட்டி எந்தவொரு நடவடிக்கையையும் யாராலும் எடுக்கமுடியாது.

இந்திய மீனவர்களை கைதுசெய்து அவர்களுடைய மீன்பிடி உபகரணங்களை கைப்பற்றுவதால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படப்போவதில்லை. புத்திசாதுரியமாக இருசாராரும் செயற்படவேண்டிய காலகட்டம் இதுவாகும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் கடந்த ஒருவருடத்திற்கு முன்பு ஐந்து மீனவர்கள் இழைத்த குற்றத்துக்காக மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த வேளையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடந்த 2014ஆம் ஆண்டு எழுதிய கடிதத்தின் சில பகுதிகளை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

அவற்றை உற்றுப்பார்த்தால் காலத்தின் தேவை என்ன? யார் யார் எவ்வாறு செயற்படவேண்டும் என்ற உண்மைகள் தாமாக புலப்படும். ஏனையவை ஒருபுறமிருக்க, கச்சதீவு சம்பந்தமாக எழுதப்பட்டுள்ள பகுதியை ஊன்றிப் படியுங்கள். அன்றைய இலங்கைப் பிரதமர் சிறிமாவோபண்டாரநாயக்கவின் வேண்டுகோளுக்கிணங்க கச்சதீவு இலங்கைக்கு கையளிக்கப்பட்டவேளை இந்திய மாநிலங்கள் சில குறிப்பாக தமிழ்நாடு பெரும் எதிர்ப்புக் காட்டியது. கச்சதீவு பற்றி இந்திராகாந்தி அம்மையார் தெரிவித்ததை நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தேன். கச்சதீவை விடுதலைப் புலிகள் தமது தளமாக பயன்படுத்த வாய்ப்புண்டு என கவலையுற்றதோடு, அது பின்நாட்களில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையுமெனவும் அறிந்திருந்தார். அவ்வாறு ஒருவர் இன்றும் சிந்திப்பதில் தவறில்லை. விசேடமாக எமது நாடும் சீனாவும் காட்டிவரும் நெருங்கிய உறவும், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் உள்ள உறவில் ஏற்பட்டுள்ள விரிசலுமாகும்.

இந்திய சாணக்கியத்திலும், ஜனநாயகத்திலும் இருந்து நாம் கற்கவேண்டிய பல விடயங்கள் உள்ளன. கச்சதீவு சம்பந்தமாக நமதுநாடு செய்துகொண்ட ஒப்பந்தத்தில் இந்திய மீனவருக்கு பலஉரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. இருந்தும் இன்று கச்சதீவு இலங்கையின் ஏகசொத்தாகும். கச்சதீவு இன்று ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. தமிழ்நாட்டு அரசு உட்பட இந்தியாவின் பல மாநிலங்கள் கச்சதீவை இந்திய அரசு மீளப்பெறவேண்டும் என பெரும் போராட்டங்களை நடத்திவருகின்றன.

இந்தக் கோரிக்கையும் அரசுக்குக் கொடுக்கப்படும் அழுத்தங்களும் இந்திய அரசுக்கு மிக சங்கடமான நிலைமையை



உருவாக்கியுள்ளது. விடயம் நீதிமன்றம்வரை சென்றுள்ளபோது இந்திய அரசு எதுவித ஆரவாரமுமில்லாமல் கச்சதீவை மீளப் பெற்றிருக்க முடியும். இலங்கை அரசுகூட மௌனம் சாதித்திருக்கும். இந்திய அரசு விரும்பியிருந்தால் உயர்நீதிமன்றமும் அனுமதி வழங்கியிருக்கும். ஆனால், பெரும் ஆச்சரியம் என்னவெனில், உயர்நீதிமன்றம் மத்திய அரசின் அபிப்பிராயத்தை கேட்டபோது அதிர்ச்சி தரக்கூடிய - ஆனால், பாராட்டப்பட வேண்டிய பதில் கையளிக்கப்பட்டதுதான்.

கச்சதீவை மீளப்பெறமாட்டோ என நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தியதோடு ஒருபடி மேலே சென்று இந்திய மீனவர் அங்கே மீன்பிடிக்கக்கூடாது எனவும் தெரிவித்தது. நான் உங்களை கேட்கிறேன், இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டிருந்தால் நாம் என்ன செய்திருப்போம்? என்று .ஜனாதிபதி அவர்களே! இந்திய அரசின் முடிவை ஆராய்ந்து பார்ப்பீர்களேயானால் ஒருவிடயம் தெளிவாகின்றது. சரியோ பிழையோ ஒரு தலைவி எடுத்த முடிவுக்கு மாறாக அவருக்கு அபகீர்த்தி ஏற்படுத்த அரசு விரும்பவில்லை.

அத்தலைவி இறந்து 30 ஆண்டுகள் கடந்தபின்பும்கூட அவரின் கௌரவத்துக்கு களங்கம் ஏற்படுத்த அரசு தயாரில்லை. மிகப் பராட்டுதலுக்குரிய விடயம் யாதெனில், அண்மையில் நடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் இந்த விடயம் முக்கிய இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஒரு பெரும் அரசியல் தலைவர் கூறியதுபோல் தான் விசுவாசமாக நேசிக்கும் சமூகத்திடம் பொய்களைக் கூறி வெற்றிபெறுவதைவிட உண்மையைக் கூறி தோல்வியைத் தழுவுவது மேலானதாகும் என காங்கிரஸ் கூட்டாட்சி எண்ணியதுபோல் தோன்றுகிறது.

எனவே, தற்போதைய அரசாங்கம் இவ்விடயம் தொடர்பில் நிதானமாக செயற்பட வேண்டும் என்பதை மீண்டும் நான் வலியுறுத்தி கூறுகின்றேன் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

# ஹெரோயினுடன் கைதான நால்வருக்கு 16ஆம் திகதிவரை விளக்கமறியல்

(அனுராதபுரம்)

ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் நான்கு பேரை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அனுராதபுரம் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு மற்றும் அனுராதபுரம் நீராவிய பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்டவர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் அனுராதபுரம் திசாவெவ மற்றும் பழைய நகரம் பகுதியில் கடந்த 03ஆம் திகதி மாலை நடத்திய சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து நான்கு கிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருளும் அனுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பரீட்சை எழுதச் சென்ற மாணவி திடீர் சுகயீனமுற்று உயிரிழப்பு

(ஜூட் சமந்த)

தவணை பரீட்சை எழுதிக்கொண்டிருந்த பாடசாலை மாணவி ஒருவர் திடீர் சுகயீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். வனாத்தவில்லு - காட்டுபுலியன்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயதுடைய ஜே.ஏ.ரவீஷா தனஞ்ஜனி என்ற பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வனாத்தவில்லு பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் தரம் 8இல் குறித்த மாணவி கல்வி கற்றுவந்துள்ளார். நேற்று காலை தவணைப் பரீட்சைக்குத் தோற்ற பரீட்சை மண்டபத்துக்குச் சென்றுள்ள நிலையில், அவர் திடீர் சுகயீனமடைந்துள்ளார். அதன்பின்னர், ஆசிரியர்கள் மாணவியை அவரது அம்மாவிடம் ஒப்படைத்து வைத்தியசாலைக்கு அழைத்தச்செல்ல நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதற்கமைய, மாணவியை அவரது தாய் வனாத்தவில்லு பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். மாணவியின் நிலைமை பாரதூரமாகவுள்ளது என்று அறிவித்து அவர் மேலதிக சிகிச்சைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மாணவி உயிரிழந்துள்ளார். உயிரிழந்த மாணவிக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டதன் பின்னர் மரண பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன.

# புத்தாண்டு காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டங்களை பின்பற்றி செயற்படவேண்டும்

## - மக்களிடம் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கோரிக்கை



புத்தாண்டு காலப்பகுதியில் புதிய கொரோனா கொத்தணி தோற்றம் பெறலாம் என்றும் மக்கள் தனிமைப் படுத்தல் சட்டங்களை பின்பற்றி செயற்பட வேண்டும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு இன்னும் ஒருவார காலமே இருக்கிறது. எதுஎவ்வாறாயினும், பொதுமக்கள் இந்தக் குறுகிய காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டங்களை முழுமையாக கடைப்பிடிக்கவேண்டியது கட்டாயமாகும். புதிய ஆடைகளை அணிந்து பலவகை உணவுகளை சமைத்து உண்டு மகிழவே மக்கள் முயற்சிக்கிறார்கள். ஆனால், தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி செயற்பட்டால் புதுவருடத்தை மகிழ்ச்சியாக முன்னெடுக்க முடியாமல்போகும்.

தொடர்ச்சியாக கொரோனா நோய் நிலைமை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. சுகாதார வழிமுறைகளை பின்பற்றாவிட்டால் கொரோனா தொற்று மீண்டும் கொத்தணியாக உருவெடுப்பதற்கான வாயப்புகள் அதிகமுள்ளன. அதனால், தொடர்ச்சியாக இதுதொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அதேபோன்று நேற்று முன்தினம் குளியாபிட்டிய பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 11 பேர்வரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய, இதுவரையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 3 ஆயிரத்து 425 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எனவே, தொடர்ந்து தனிமைப்படுத்தல் சட்டம் தொடர்பான சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# கல்விமான் சிவஞானசோதி காலமானார்



கொழும்பு கொட்டாஞ்சேனை அருள் கல்வி வட்டத்தின் ஊடாக பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் இதயத்தை வென்ற ஆசானும் அரசின் உயர் அதிகாரியுமான கல்விமான் வே.சிவஞானசோதி காலமானார்.

இவரது மரணம் நாட்டிற்கு மட்டுமல்ல, அவரிடம் கற்ற அனைத்து மாணவர்களுக்கும் பேரிழப்பாகும். கணக்கியல் ஆசிரியரான இவரிடம் கற்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இன்று உயர் தொழிலில் இருந்துவருவது குறிப்பிடத்தக்கது

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாயை பிறப்பிடமாகக்கொண்ட வே.சிவஞானசோதி பல அமைச்சுகளின் செயலாளராக திறன்பட பணியாற்றியிருந்தார். குறிப்பாக இந்து கலாசார அமைச்சு, பாரம்பரிய சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு, வடக்கு மாகாண ஜனாதிபதி செயலணி, நல்லிணக்க அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றியிருந்தார்.

இறுதியாக ஓய்வுபெற்ற பின்பும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளராகவும் கடமையாற்றிக்கொண்டிருந்தார். நேற்று முன்தினம் திடீர் சுகவீனமுற்று கொழும்பு – அப்பலோ வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

"இலங்கையில் மட்டுமல்ல, பல நாடுகளில் சிறந்த அரச விருதுகளையும் கல்வியல் விருதுகளையும் பெற்று எமக்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்தவர். நீண்டகாலமாக அரச பணியில் மிகப் பெரும் பங்கை - குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஆற்றியிருந்தார்.

ஒரு தலைசிறந்த மூத்த தமிழ் அரச அதிகாரியாக மட்டுமல்லாது ஓய்வுபெற்ற பின்பும் வடமாகாண மக்களுக்கு தொடர்ந்து செயலாற்றவேண்டி என்னுடன் இணைந்து ஓர் ஆலோசகராக இறுதி மூச்சுவரை தொடர்ச்சியாக கலந்துரையாடி பல்வேறு சேவைகளை மக்களுக்கு திட்டமிட்டு வழங்கிகொண்டுவருகின்ற இவ்வேளையில் திடீர் இழப்பு பலரை பாதித்துள்ளது

தனிப்பட்ட ரீதியில் எனக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கும் ஈடிணையற்ற பாரிய இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்போமாக" - என நாடாளுமன்ற உறுப்பினரான அங்கஜன் ராமநாதன் அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

"சாதி மதம் பேதம் பார்க்காமல் ஒரு தாய் வயிற்றில் பிறந்த குழந்தைகளை போஷிப்பதை போன்று போஷித்த சிறந்த ஆசிரியர். இவரது மறைவிற்கு 93ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர மாணவர்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறோம்" - என்று பழைய மாணவர் சங்க பொதுச் செயலாளர் ஆறுமுகம் சேகர் தெரிவித்துள்ளார். பூதவுடல் அஞ்சலிக்காக பொரளை தனியார் மலர்ச்சாலையொன்றில் வைக்கப்பட்டுள்ளதுடன், நாளை பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது.

# முதுகண்டிய விவசாய வேலைத்திட்டம்: பாதிக்கப்பட்டவர்களுக்கு 42 வருடங்களின் பின்னர் நிவாரணம் வழங்க நடவடிக்கை

சியம்பலாண்டுவ - முதுகண்டிய விவசாயிகளுக்கான வேலைத்திட்டத்துக்காக 42 வருடங்களுக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துகளுக்கு நிவாரணம் வழங்க காணி ஆணையாளர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

1973ஆம் ஆண்டு சியம்பலாண்டு பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட முதுகண்டிய விவசாயிகளுக்கான வேலைத் திட்டத்துக்கு யக்கந்துராவ, சியம்பலாண்டுவ, மானாஹறன, சமனலகம, மடுல்ல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் பலானேகம, பலஹத்ஆர, மாரிஆராவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் சொத்துகள் ஒதுக்கப்பட்டன. இந்தச் சொத்துகளுக்கான நிவாரணங்களை வழங்கம் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக காலந்தாழ்த்தப்பட்டு வந்தன.

இதுதொடர்பில் தொடர்ச்சியாக அந்த மக்கள் அரசாங்கங்களிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் நிவாரணம் கிடைக்கவில்லை. தற்போதைய அரசாங்கம் இதுதொடர்பில் கவனம் செலுத்தி விவசாய குடும்பங்களுக்கு 30 மில்லியன் ரூபா நிவாரணத்தை வழங்குவதற்காக சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர் காரியாலயத்துக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக மொனராகலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் குமாரசிறி ரத்நாயக்க தெரிவித்தார்.

# கடும்போக்குவாத மதக் கொள்கையை கைவிட்டு சகோதரத்துவத்துடன் ஐக்கியமாக வாழ்வோம்

## - சப்ரகமுவ பல்கலைக்கழக வேந்தர் கோரிக்கை




(அஷ்ரப் ஏ சமத்)

கடும்போக்குவாத மதக் கொள்கையை கைவிட்டு, சில முஸ்லிம்களுடன் இந்த அழகான நாட்டில் சகலரும் சகோதரத்துவதோடு ஐக்கியமாகவும் சாந்தி சமாதானமாக வாழ்வோம் என்று சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வேந்தர் கும்புருகமுவ வஜிர தேரர் தெரிவித்தார்.

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும் தெஹிவளை ஜம்ஆப் பள்ளிவாசலும் இணைந்து மேல் மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் உள்ள பிரதான ஜும்ஆப் பள்ளிவாசல்களது பிரதான கதிப்மார்களுடன் (மௌலவிகள்) அண்மையில் தெஹிவளை முகையித்தீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் முழுநாள் கருத்தரங்கொன்று நடத்தின. இதில் கலந்துகொண்டு உரையாற்றம்போதே அவர் அவவாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வு முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவலகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அஷ்ஷேக் ஏ.பி.ஏ.அஷ்ரப் தலைமையில் நடைபெற்றது. அத்துடன், பேராசிரியர் ருஸ்தி பாபு, அப்துல் ஹமீட் பாஜி, பள்ளிவாசல்கள் பொறுப்பான வக்பு சபையின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி சப்ரி ஹலீம்டீன், ஜம்மியத்துல் உலமா பதில் தலைவர் அஷ்ஷேக் அப்துல் ஹாலிக், முஸ்லிம் சமய திணைக்களத்தின் நீதி அலுவலக சட்டத்தரணி எம். சுரைஹா, பிரதம மந்திரியின் முஸ்லிம் சமய விவகார ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷேக் ஹசன் மௌலானா, சப்பரகமுவ பல்கலைக்கழகத்தின் வேந்தரும் மருதானை மாளிகாகந்தை பிரதான ஆமதுருமான பேராசிரியர் கும்புருகமுவ வஜிர தேரரும் விரிவுரைகளை நடத்தினர்.

இங்கு உரையாற்றிய சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வேந்தர் கும்புருகமுவ வஜிர தேரர் உரையாற்றுகையில்

இந்த நாடு பெரும்பான்மையான பௌத்தர்கள் வாழ்ந்தாலும் ஏனைய இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்களைக்கொண்ட சகல சமூகங்களும் அழகாக அனுசரித்து போகக்கூடியதொரு பல்லின சமூகம் வாழ்கின்றதொரு நாடாகும். நாட்டில் மூவினங்களும் அமைதியாகவும் சமாதானமாகவும் அவரவர்களது மத, கலை, கலாசார விழுமியங்களுக்கு மதிப்பளித்து தமது கடமைகளை எவ்வித அச்சமின்றி வாழ்ந்து வந்தனர். ஆனால், கடந்த 2 வருடத்தின் முன் இதே ஒரு தினத்தில் உயிhத்த ஞாயிறு தாக்குதலில் சஹ்ரானின் குண்டுத்தாக்குதலால் முஸ்லிம்கள் மத்தியில் ஒரு கறுப்புப் புள்ளியை வைத்துவிட்டுச் சென்றுள்ளார். இதனால், தான் நாம் நமது சகோதரர்களை சந்தேகக்கண் கொண்டு பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாம் கிறிஸ்தவ இலங்கைத் தலைவர் மெல்கம் கர்தினால் ரஞ்ஜித் ஆண்டகை தீர்க்கதரிசமான முடிவினால் இந்த நாட்டில் பாரிய அசம்பாவிதங்கள் நடைபெறவில்லை. நாம் இலங்கையில் இன்றும் அமைதியாக வாழ்கின்றோம்.

ஆகவேதான் பள்ளிவாசல்களிலுள்ள பிரதான மௌலவிமார்கள் இணைந்து முஸ்லிம் சமூகத்தில் உள்ள இளைஞர் சமுதாயத்தினை நல்வழிக்கு கொண்டுவருதல் வேண்டும். கடும்போக்குடைய இஸ்லாமிய கொள்கைகளை விட்டு தற்போதைய இளைஞர்களை சீரான - சிறந்தவர்களாக கொண்டுவருதல் வேண்டும். முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் சீறிய வாழ்க்கைமுறை அழகானது. அவரின் போதனைகள் சிறந்தவை. அவர் விட்டுக்கொடுப்பு, பொறுமை, இறக்கம் சாந்தி சமதானமாக இஸ்லாம் மதத்தினை உங்களுக்கு போதித்தவர்.

கடந்த காலங்களில் மருதானை மாளிகாகந்தை எனது விகாரையில் முஸ்லிம்களுக்கு நோன்பு திறப்பதற்கு வசதியளித்தேன். அதேபோன்று மறைந்த எம்.எச்.முஹம்மதினால் மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தில் பிரதான பௌத்த குருமார்களை அழைத்து காலை உணவினை வழங்கினார்.

பௌத்தம் - இஸ்லாம் மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தினை ஏற்படுத்த நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்றுள்ளோம். இன்றும் மௌலவி ஹசன் மௌலானவுடன் இணைந்து எனது 90 வயதிலும் எனது கடமையைச் செய்து வருகின்றேன். ஆகவேதான் முஸ்லிம் சமய திணைக்களம் இதுபோன்ற நல்லிணக்க கருத்தரங்குகளை நாடுபூராவும் செயற்படுத்தி வருகின்றோம். முஸ்லிம்களில் சிலர் கடும்போக்குவாத மதக் கொள்கையை கைவிட்டு இந்த அழகான நாட்டில் சகலரும் சகோதரத்துவதோடு ஐக்கியமாகவும் சாந்தி சமாதானமாக வாழ்வோம் - என்றார்.

# பொது மன்னிப்புக் காலத்தை ஜுன் 30வரை நீடிக்குமாறு ஓமான் அரசாங்கத்திடம் இலங்கை தூதுவர் கோரிக்கை

வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 248 புலம்பெயர் இலங்கைத் தொழிலாளர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மூலமாக நாட்டுக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி இவர்கள் நாடு திரும்பியுள்ளதுடன், இதற்கான விசேட ஏற்பாடுகளை ஜனாதிபதி செயலகம் மற்றும் இலங்கை வெளிநாட்டு அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து ஓமானிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. இவர்களில், தமது விசாக்கள் காலாவதியானதன் பின்னர் ஓமான் சுல்தானேற்றில் தங்கியிருந்த 45 புலம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில்களை இழந்தவர்கள், தூதரகத்தின் பாதுகாப்பு இல்லத்தில் தஞ்சமடைந்தவர்கள், சிறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மற்றும் மருத்துவ அவசரநிலைக்கு உட்பட்டவர்கள் ஏனைய புலம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்களில் உள்ளடங்குவர்.

இதுதெடார்பில், அந்த தூதரகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆதரவற்ற புலம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்களின் தண்டம் மற்றும் அபராதங்களை முழுமையாக தள்ளுபடி செய்வதன் மூலம் ஓமான் அரசாங்கம் பொதுமன்னிப்பு வழங்கியது. அவர்கள் நாடு திரும்புவதற்குத் தேவையான பயண ஆவணங்களை மஸ்கட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் இலவசமாக வழங்கியது. அபராதம் பெற்ற புலம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்கள் தண்டம் / அபராதமற்ற விதிவிலக்குடன் நாடு திரும்புவதற்கு சலுகையளித்தமைக்காக சுல்தான் ஹைதம் பின் தாரிக்கின் அரசாங்கத்திற்கு ஓமான் சுல்தானேற்றுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்ததார். எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதி வரை பொதுமன்னிப்புக் காலத்தை மேலும் நீடிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

பொதுமன்னிப்பைப் பயன்படுத்தி தண்டம் மற்றும் அபராதங்களை முழுமையாக தள்ளுபடி செய்வதன் மூலம் சுமார் 425 வறிய புலம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்களை நாட்டிற்கு மீள அனுப்பிவைப்பதற்கான வசதிகளை தூதரகம் வழங்கியுள்ளது.

248 ஆதரவற்ற புலம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தந்தவுடன் அவர்களுக்கான இலவசமான பி.சி.ஆர். பரிசோதனைகளை அரசாங்கம் மேற்கொண்டதுடன், அவர்கள் அனைவருக்கும் தங்குமிடம், உணவு மற்றும் ஏனைய வசதிகளுடன் கூடிய 14 நாட்களுக்கான இலவச தனிமைப்படுத்தல் வசதிகள் வழங்கப்பட்டன என்று குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநல அரசியலால் நாட்டில் பிளவுகளும் பிரிவினைவாதங்களும் கட்டவிழ்ந்துள்ளன

## அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அகமட் ஸகி

(மாளிகைக்காடு நிருபர்)

சமகாலத்தில் நாட்டின் முக்கிய தேவை இன நல்லுறவாகும். இனங்களுக்கு மத்தியிலான சந்தேகங்களும், பிரிவினைகளும் களையப்பட வேண்டும். பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் முஸ்லிம்களாகிய நாம் நமது வகிபாகம் என்ன என்பதை உணரத் தலைப்பட வேண்டும். அதுபோல் இதர சமூகங்களின் வகிபாகம் என்னவென்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். பல்லின மக்கள் வாழும் நம் நாட்டில் இன நல்லிணக்கமும், ஐக்கியமும் பிரதானமானது. அனைத்து சமூகங்களுக்கு மத்தியிலும் பரஸ்பர உறவு பேணப்படுவதுடன், சமாதானத்தையும் சகவாழ்வையும் நாம் உள்ளார்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபை ஹல்லாஜ் வள நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலாநிதி அல்ஹாபிழ் எம்.ஐ.எம்.சித்தீக் எழுதிய "பல்லின சமூகங்களுக்கிடையிலான உறவைப் பேணல்-ஓர் இஸ்லாமிய நோக்கு'' எனும் நூல் வெளியீட்டு விழாவில் கௌரவ அதிதியாக கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் கூறியதாவது,

நாட்டில் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை நிலைநாட்டும் வேலைத் திட்டம் பாடசாலை மட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவேண்டும். இதற்கு பாடசாலை அதிபர்கள் முழு மூச்சாக செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும். இன்று முஸ்லிம்கள் இந்த நாட்டில் அரசியல் ரீதியாக ஒதுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட சமூகமாக மாற்றப்பட்டமைக்கு, நமதான ஒருசில அரசியல் தலைமைகள் கடந்த காலங்களில் விட்ட வரலாற்றுத் தவறுகளும் காரணங்களாக அமைந்திருக்கின்றன. இவர்களின் சுயநல அரசியல் காரணமாக நாட்டில் பிளவுகளும், பிரிவினைவாதங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

முஸ்லிம்கள் மத்தியில் நிம்மதி இல்லை என்று நாம் பேசிக் கொண்டிருக்கின்றோம். நமது சிறிய விடயங்களும் பூதாகரமாக்கப்படுகின்றன. எமது சமூகத்தின் மத்தியிலும் இவ்வாறான ஒருசில நபர்கள் இருந்துகொண்டு விஷமத்தனங்களை கக்குகின்றனர். நமது எண்ணமெல்லாம், நாடு வளம் பெற வேண்டும். அனைத்து சமூகங்கள் மத்தியிலும் ஐக்கியம், சுபிட்சம் ஏற்பட வேண்டும் என்பதுதான். அதற்காகவே நாம் சதா சிந்தித்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இவற்றை குழப்பவும் சிலர் முயற்சிக்கின்றனர். நாட்டில் ஏற்பட்டுள்ள ஒரு சில பிணக்குகள், இன முரண்பாடுகளுக்கு அப்பால் தேசப்பற்றுடன் நமது ஒற்றுமையை நிரூபிக்க வேண்டிய தேவையிருக்கிறது. நாம் முதலில் நம்மை வெல்ல வேண்டும்.

இன்று நமது மத்ரஸாக்கள் எனும்போது அவை அடிப்படைவாதம் போதிக்கப்படும் இடம் எனும் பிழையான கற்பிதங்களும், புரிதல்களும்



பேரின மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமைகள் தோன்றுவதற்கு எம்மிடையே புற்றீசல்கள் போல முளை விட்டிருக்கும் இயக்கம், கொள்கை, பிரிவினை வாதங்களும் முக்கிய வழி வகுத்திருப்பதனை நாம் ஏற்றுக்கொண்டு அவற்றில் சீரமைப்பை மேற்கொள்ள வேண்டும். மதப்பெரியார்கள், உலமாக்கள், புத்திஜீவிகள் இம்முயற்சிகளில் கூடிய கரிசனை செலுத்திட வேண்டும்.

இந்த நாட்டில் மக்கள் மத்தியில் சமாதானமும், சகவாழ்வும், மீளவும் கட்டியெழுப்பப்பட வேண்டியதோர் முக்கியமான காலப் பகுதியில் கலாநிதி அல்ஹாபிழ் எம்.ஐ.எம்.சித்தீக் இந்த நூலை வெளியிடுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. இதுபோன்ற ஆக்கபூர்வமான சமூக சிந்தனைகளுக்கு, பங்களிப்புகளுக்கு என்றும் எனது காத்திரமான ஒத்துழைப்புகள் தொடரும் என்று மேலும் தெரிவித்தார்.




# உல்லாசப் பயணிகளுக்கு சேவை வழங்கும் வாகன சாரதிகளுக்கான செயலமர்வு





(திகாமடுல்ல)

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், அறுகம்பை பிரதேசத்தில் சுற்றுலாத்துறையிலுள்ள வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உல்லாசப் பயணிகளுக்கு பிரயாணச்சேவையை வழங்கும் வாகன சாரதிகளுக்கான ஒருநாள் செயலமர்வு பொத்துவில், அறுகம்பை பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையும் தொழிற்பயிற்சி அதிகார



சபையும் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மேற்படி செயலமர்வானது, சுற்றுலா சம்மேளனத்தின் தலைவர் ஏ.எம்.ஜவ்பர் தலைமையில் இடம்பெற்றது.

ஏற்கனவே தொழிற்பயிற்சி அதிகார சபையினால் பயிற்சி வழங்கப்பட்ட மேற்படி சாரதிகளுக்கு அடையாள அட்டைகளை மிக விரைவாக பெற்றுக் கொள்ளும் வகையில், இந்த செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலாளர் சந்துரூபன் அனுருத்த பிரதம அதிதியாகவும், அறுகம்பை சுற்றுலா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.பி.திசாநாயக கௌரவ அதிதியாகவும், அறுகம்பை ஓட்டோ உரிமையாளர் சங்கத் தலைவர் ஏ.முஸம்மில் விசேட அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் சாரதிகளுக்கு அதிதிகளினால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# ஐக்கிய மக்கள் சக்தியின் திருமலை அமைப்பாளராக கபில நியமனம்



(கந்தளாய்)

ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவினால், கபில களுப்பான நேற்று முன்தினம் திங்கட்கிழமை (5) நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து அமைப்பாளருக்கான நியமனத்தினை கபில பெற்றுக்கொண்டார்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும் பண்டார மற்றும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாவடிச்சேனை அல்-இக்பால் வித்தியாலய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கல்







(ஓட்டமாவடி)

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட மாவடிச்சேனை அல்-இக்பால் வித்தியாலய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது.

பிரதியதிபர் திருமதி எம்.என்.எம்.இஸ்மாயீல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் ஷல்மானுல் ஹரீஸ் அதிதியாக கலந்துகொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிவைத்தார்.

கடந்த வருடம் 2020 காலப்பகுதியில் கோட்டமட்ட சிறுவர் விளையாட்டு விழா ஓட்டமாவடியில் இடம்பெற்றபோது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட கொவிட்-19 அச்சுறுத்தல் காரணமாக பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது. எனினும் விடுமுறை வழங்கப்படுவதற்கு முன் சிறுவர் விளையாட்டுக்களில் கோட்ட மட்டத்தில் மூன்றாம் நிலையில் திறமைகளை வெளிப்படுத்திய மாவடிச்சேனை அல்-இக்பால் வித்தியாலயத்தை கௌரவிப்பதற்காக, கோட்டக்கல்வி அலுவலகத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ்களே மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. தரம்-4,தரம்-5 மாணவர்களுக்கே இவ்வாறு திறமை வெளிப்பாட்டு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை; கோடாவுடன் உபகரணங்களும் மீட்பு



(மட்டக்களப்பு)

கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை நேற்று செவ்வாய்க்கிழமை (06) முற்றுகையிட்டு, 21 இலட்சத்து 600 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா மற்றும் 12 பீப்பாக்களையும், கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்களையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள முனைக்காடு ஆற்றுப் பகுதியில், சம்பவ தினமான நேற்றுக் காலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி என்.பி.குணவர்த்தன தலைமையில் ஜெயந்த, சந்திரசிறி, அமரசிறி, ரமேஷ், சந்திரகுமார், தனுஷ்கர், நந்தகே ஆகியோர் கொண்ட பொலிஸ் குழுவினர் குறித்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு எவருமில்லாத நிலையில், கசிப்பு உற்பத்திக்காக தயாரிக்கப்பட்ட 12 பீப்பாக்களில் 21 இலட்சத்து 600 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாக்களையும், கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்களையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.





திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக, நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா நேற்று முன்தினம் (05) உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இதன்போது திருகோணமலை மாவட்ட நீதிமன்ற பதிவாளர் எம்.எஸ்.எம்.நியாஸ் அவருக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்றார். இந்நிகழ்வில் நீதிமன்ற உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு வரவேற்றனர். (கிண்ணியா)

# ஹெரோயினுடன் 6 இளைஞர்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகர் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் 6 இளைஞர்களை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (05) இரவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றிற்கு அமைய மட்டக்களப்புத் தலைமையக பொலிஸ் நிலைய போதைவஸ்து குற்றத்தடுப்புப் பிரிவினர் இணைந்து சம்பவ தினமான இரவு நாற்கேணி, இருதயபுரம், ஊறணி ஆகிய பிரதேசங்களில் ஹெரோயின் போதைப்பொருளுடன் 6 இளைஞர்களைக் கைதுசெய்ததுடன், அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் 2 கட்டு, 3 கட்டுகளைக் கொண்ட போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் 25 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# செம்மண்ணோடை அஸ்-ஸகிய்யாவில் மாணவர் வெளியேற்று விழா



(ஓட்டமாவடி)

செம்மண்ணோடை குபா ஜும்ஆப் பள்ளிவாசல் நிரிவாகத்தின் கீழியங்கி வரும் அஸ்-ஸல்கிய்யா குர்ஆன் கலாசாலையின் 15ஆவது மாணவர் வெளியேற்று விழா நிகழ்வு மத்ரசா வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

அதிபர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.சரீப் அலி (ஸலாமி ) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக JDIK வின் பொதுத்தலைவர் அஷ்ஷெய்க் ஏ.எல்.பீர்முகம்மது (காஸிமி) M.A., கௌரவ அதிதியாக தியாவட்டவான், தாருஸ்ஸலாம் அரபுக்கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எம்.பீ.எம்.இஸ்மாயில் (மதனி) ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இவ்வெளியேற்று விழாவில் அல்-குர்ஆனைக் கற்ற 16 மாணவர்கள் வெளியாகினர். மிகவும் எளிமையான முறையில் கொரோனா விதிமுறைகளைப் பின்பற்றி இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

# உசன்ஹாஜி பவுண்டேஷன் அமைப்பு வாழைச்சேனையில் அங்குரார்ப்பணம்





(ஓட்டமாவடி)

கோறளை மத்தி-வாழைச்சேனை பிரதேச செயலக எல்லைப் பிரிவிற்குள் அடங்குகின்ற வாழைச்சேனை-4 மற்றும் வாழைச்சேனை-5இல் வசிக்கின்ற ஒரு பரம்பரையினரின் குடும்ப அங்கத்தவர்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட சமூக மேம்பாட்டு நிறுவனமான உசன்ஹாஜி பவுண்டேஷன் அண்மையில் வாழைச்சேனையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

'பரம்பரையினரை இறைவனின் பால் அழைக்கின்ற நற்குடும்பங்களாக ஒன்றிணைத்தல்' என்ற எண்ணக்கருவில் உருவாக்கப்பட்ட இந்த உசன்ஹாஜி பவுண்டேஷனில் வாழைச்சேனையில் வசிக்கின்ற ஒரே இரத்த உறவிலிருந்து உருவாகிய 30குடும்பங்களின் 70இற்கும் மேற்பட்ட குடும்ப அங்கத்தவர்கள் இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்துகொண்டனர்.

வாழைச்சேனையில் உசன்ஹாஜி என்பவர் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுக வரலாற்றில் முதன்முதலாக ஆழ்கடல் இயந்திரப்படகு மூலமாக கடலுக்கு தொழிலுக்காக சென்ற கடற்றொழிலாளி என்பதோடு இவரது புதல்வர்களும், மருமகன்களும் வாழைச்சேனையில் ஆழ்கடல் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வாழைச்சேனையின் பொருளாதார மேம்பாட்டில் பங்கெடுத்த குடும்பங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது வாழைச்சேனையிலுள்ள அரச உத்தியோகத்தர்களில் ஒரு பரம்பரையினரால் உருவாக்கப்பட்ட ஆகக்கூடிய அரச உத்தியோகத்தர்களைக்கொண்ட குடும்பங்களாகவும், உசன்ஹாஜி பவுண்டேஷனில் அங்கத்துவம் பெற்றுள்ள பேரப்பிள்ளைகள் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களே அதிகமுள்ளதால் எதிர்கால பிரதேச சமூக அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் குடும்பங்களை பாதுகாப்பதனூடாக சமூகத்தை பாதுகாக்க முடியும் என்ற நல்லெண்ணத்தில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தில் வறிய நிலையிலுள்ளவர்களுக்கு நலனோம்பு விடயங்களை செய்வதனூடாகவும், நலன்புரி விடயங்களில் கவனம் செலுத்துவதனூடாகவும், அங்கத்தவர்களை ஒன்றிணைத்து எதிர்காலத்தில் வறுமையை ஒழிக்கும் பாரிய நிறுவனமாக இதனை மாற்ற நடவடிக்கை எடுப்பதாக நிறுவனத்தின் ஸ்தாபக தலைவர் அதிபர் எல்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

கிழக்கில் தற்போது இவ்வாறான குடும்ப அங்கத்தவர்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட அமைப்புக்களால் மருத்துவ உதவிகள் மற்றும் புனித பயணங்களுக்கான கட்டுப்பணங்களை சுழற்சி முறையில் வழங்கி வைத்தல், உயர்கல்விக்கு உதவுதல் போன்ற மேம்பாட்டு விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பவுண்டேஷனின் ஆலோசகரும், உசன்ஹாஜியின் மூத்த புதல்வருமான சம்சுதீன் இங்கு கலந்துகொண்டு கருத்துகளை தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கலடி சுகாதார அதிகாரி பிரிவில் டெங்கு நோயாளர்கள் கண்டுபிடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் வேகமாக அதிகரித்துவருகின்றது. கடந்த மார்ச் 26ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 02ஆம் திகதிவரையும் 46 பேர் டெங்கு நோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்த வாரம் டெங்கு தாக்கத்தினால் பாதிப்புக்குள்ளானவர்களில் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 நோயாளர்களும், வாகரை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 09 நோயாளர்களும், களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 04 நோயாளர்களும், மண்முனை வடக்கு மட்டக்களப்பு, ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா 03 நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.



இதேவேளை, வாழைச்சேனை, ஏறாவூர்நகர், வவுணதீவு, பட்டிப்பளை, வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா 02 நோயாளர்களும், காத்தான்குடி, கிரான், மண்முனைப்பற்று ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா 01 நோயாளருமாக மொத்தம் 46 பேர் டெங்கு நோய் பாதிப்புக்குள்ளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

எனினும், கோரளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் எந்தவொரு டெங்கு நோயாளர்களும் இனங்காணப்படவில்லை. இவ்வருடம் டெங்கு நோயினால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 03 எனவும் டெங்கு நோயாளர் களின் மொத்த எண்ணிக்கை 2391 எனவும் சுகாதாரசேவை பணிப்பாளர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இதேவேளை, பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் செயற்பட்டு வீடுகளில் தேங்கிக் கிடக்கின்ற குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு இடம் கொடுக்காதவகையில் சூழலை துப்பரவாக வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# டெங்கு நுளம்பு பெருக்கம் குறித்து கல்முனையில் விழிப்புணர்வு நிகழ்வு







(திகாமடுல்ல)

நுளம்புகள் பெருகுவதை கட்டுப்படுத்தும் வகையில் மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டத்தின்கீழ் கல்முனை அல்-ஸுஹறா வித்தியாலயத்தில் கல்முனை அந்-நுஸர் திறந்த சாரணர் குழுவின் ஏற்பாட்டில் டெங்கு விழிப்புணர்வு நிகழ்வொன்று அண்மையில் இடம்பெற்றது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மியின் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகர் ஜுனைட், பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், மேற்பார்வை சுகாதார பரிசோதகர் பாரூக், சுகாதார பரிசோதகர் அப்பாஸ் எம் நியாஸ், சாரணிய உதவி மாவட்ட ஆணையாளர் (பயிற்சி) எஸ்.தஸ்தகீர், உதவி மாவட்ட ஆணையாளர் ஹஸ்மின் புஹாரி உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

இங்கு பாடசாலை மாணவர்களின் முயற்சியுடன் நுளம்புகளின் பெருக்கத்தை முற்றாக கட்டுப்படுத்தும் நோக்குடன் தேவையற்ற கொள்கலன்கள், நுளம்பு பெருகக்கூடிய பொருட்கள் போன்றவற்றை அதிகமாக சேகரித்துக்கொண்டுவந்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டது.

# புனித ரமழானுக்காக அம்பாறையில் அனைத்து பள்ளிவாசல்கள் அலங்காரம்

(நற்பிட்டிமுனை )

**அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்களில் புனித ரமழான் மாதத்தை வரவேற்குமுகமாக சகல பள்ளிவாசல்களும் அலங்காரம் செய்யப்பட்டு வருகின்றன.**

**கடந்த வருடம் கொவிட்19 கொரோனா வைரஸ்தொற்று காரணமாக பள்ளிவாசல்களில் நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு இரவுநேர தறாவீஹ் தொழுகை, கியாமுல்லைல் தொழுகைகள் இடம்பெறவில்லை.**

**இதனால் பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள் அம்பாறை மாவட்ட பள்ளிகளில் ஒன்றுகூடி இவ்வருடம் பள்ளிவாசல் அலங்காரம் தொடக்கம் ஏனைய மதக்கிரியைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு முன்வந்துள்ளனர்.**

**சுகாதார நடைமுறை பேணுதலுடன் பாதுகாப்பு படையினர் உதவியையும் பெறுவதெனவும்முடிவெடுக்கப்பட்டுள்ளது.**

**நோன்பு.வந்துவிட்டால் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள தன்னார்வ நிறுவனங்கள் , வங்கிகள் சபைகள் பாடசாலைகளில் விசேட இப்தார் நிகழ்வுகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.**

# டெங்கு நோயைத் தடுப்பதற்கு விழிப்பூட்டும் சிரமதானப் பணி

(மட்டக்களப்பு )

டெங்கு நுளப்பின் பெருக்கம் பரவலாக அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்தும் முகமாக மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென்எருவில்பற்று பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகள் எங்கும் டெங்கு நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபையின் ஏற்பட்டில் நேற்று செவ்வாய்கிழமை மாபெரும் வீதியோர தூய்மையாக்கல் செயற்றிட்டத்தின் கீழ் டெங்கு நோயைத் தடுப்பதற்காக பொதுமக்களை விழிப்பூட்டும் சிரமதானப் பணியொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் குருக்கள்மடம் ஐய்யனார் ஆலயத்திலிருந்து செட்டிபாளையம் வரையிலான வீதியின் இருமருங்கிலும் காணப்பட்ட டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக



அமைந்திருந்த கழிவுகள், பொருட்கள் அனைத்தும் சிரமதானத்தின் மூலம் அப்புறப்படுத்தப்பட்டன.

இதன்போது மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபையின் தவிசாளர் ஞா.யோகநாதன், அதன் செயலாளர் க.லக்ஸ்மிகாந்தன் மற்றும் பிரதேச சபை, மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலக, உத்தியோகத்தர்கள் என பலரும் இதன்போது கலந்துகொண்டு விழிப்புணர்விலும், சிரமதானத்திலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.




# காவத்தமுனை அல்—அமீன் வித்தியாலய மாணவர் சின்னம் சூட்டும் நிகழ்வு

(ஓட்டமாவடி)

காவத்தமுனை அல்-அமீன் வித்தியாலயத்தில் மாணவ மற்றும் வகுப்புத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் அலியார் தலைமையில் இடம்பெற்றது.





நிகழ்வில் பிரதம அதிதிகளாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் திஸ்ஸ மற்றும் ஓட்டமாவடி கால்நடை வைத்திய அதிகாரி துஸ்யந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

விசேட அதிதிகளாக காகித நகர் மில்லத் வித்தியாலய அதிபர் இஸ்மாயில் மற்றும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் அஸீம் ஆகியோரும் ஏனைய அதிதிகளாக பாடசாலையின் பிரதி அதிபர், உப அதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குறித்த நிகழ்வில் மொத்தமாக 50இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சின்னம் அணிவித்து கௌரவிக்கப்பட்டது. இதன்போது பிரதி அதிபர் நியாஸ் மற்றும் சிரேஷ்ட ஆசிரியர் நளீம் ஸலாமி ஆகியோரினால் தலைமைத்துவம் தொடர்பாக விசேட உரையாற்றப்பட்டது.

# சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் தோப்பூரில் விற்பனைச் சந்தை





(கிண்ணியா)

மூதூர் பிரதேச செயலளார் பிரிவிலுள்ள பாலத் தோப்பூர் சமூர்த்தி வங்கியின் ஏற்பாட்டுடன் தோப்பூர் உப பிரதேச வளாகத்தில் சந்தையொன்று நேற்றுமுன்தினம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இச்சந்தை நிகழ்வில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் பிரதம அதிதியாகவும், கௌரவ அதிதியாக தோப்பூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க தவிசாளர் ஏ.எப். எம்.நிசாத்தும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் சிறந்த சந்தைப்படுத்தும் பொருட்களைக்கொண்ட பயனாளிகள் பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



*மூதூர் அல்-அம்னா சமூக அபிவிருத்தி மையத்தில் பயிற்சிநெறிகளை பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பயிற்சி மையத்தின் பணிப்பாளர் பாஹிர் மௌலவி தலைமையில் அண்மையில் இடம்பெற்றபோது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் யுவதியொருவருக்கு சான்றிதழ் வழங்குவதை காணலாம்.*

*(படம்:கந்தளாய்)*

# மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு





(கல்முனை)

கல்முனைக்குடி அஸ்-சுஹறா வித்தியாலயத்தில் மாணவர் தலைவர்கள் மற்றும் வகுப்புத் தலைவர்களுக்கான சின்னம் அணிவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜிதியா தலைமையில் பாடசாலை முற்றத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பொலிஸ் நிலைய சமூக மேம்பாட்டுப் பிரிவு பொறுப்பதிகாரியும், பிரதம பொலிஸ் பரிசோதகருமான ஏ.எல்.ஏ.வாஹீட் கலந்துகொண்டு மாணவர்களுக்கு சின்னங்களை அணிவித்தார். மேலும் பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளர் அமீர் ஏ பாரூக் உட்பட ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# கலாசார அதிகாரசபையின் ஏற்பாட்டில் ஊடக பிரமுகர்களுக்கான நினைவரங்கம்

(மாளிகைக்காடு)

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார பிரிவு மற்றும் கலாசார அதிகாரசபையின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது பிரதேசத்திலிருந்து அண்மையில் காலமான கலை, இலக்கிய, ஊடக பிரமுகர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கான நினைவரங்கம் நேற்றுக் காலை சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி கேட்போர் கூடத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஷ்ரப்பின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நினைவரங்கத்தில் கலாபூஷணம் மருதூர்ஏ மஜீத் தொடர்பிலான நினைவுரையை ஓய்வுபெற்ற அதிபர் கலாபூஷணம் ஏ.ஏ.பஸிரும், வித்தகர் நூருல் ஹக் தொடர்பிலான நினைவுரையை இலக்கிய ஆர்வலர் நவாஸ் சௌபியும் நிகழ்த்தினார். மேலும், கலைமகள் ஹிதாயா றிஸ்வி தொடர்பிலான நினைவுரையை ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி கலாபூஷணம் ஏ.பீர்முஹம்மட்





நிகழ்த்தினார். மற்றும் நினைவுக் கவிதைகளை கவிஞர் கலைமகன் நூருல் ஹுதா உமர், கவிஞர் கே.எம்.ஏ. அஸீஸ், கவிதாயினி சுஹைல் அஸீஸ், கவிதாயினி ஷப்னா அமீன், கவிஞர் அலிக்கான் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் கலந்துகொண்டதுடன், உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தார்களான யூ.கே.எம். றிம்ஸான், ஆர். ஜெஸீரா, எம்.எஸ்.றஜாயா, கலாசார அதிகாரசபையின் பொருளாளர் கலைஞர் அஸ்வான் மௌலானா உட்பட கலாசார அதிகாரசபையின் உறுப்பினர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## உவர்மலை ஸ்ரீ விநாயகருக்கு சங்காபிஷேகம்!


திருகோணமலை, உவர்மலை அருள்மிகு ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கும், சிவலிங்கம், பார்வதி, வைரவர் மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை காலை 6.30 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி 9.30 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து விசேட பூசை இடம்பெறும்.

ஆலயத்திற்கு வரும் அடியார்கள் தற்போதைய கொரோனா வைரஸுக்கான நடைமுறைகளை பின்பற்றி நடக்குமாறு ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.





*இலங்கை மின்சார சபையின் சாய்ந்தமருது பாவனையாளர் சேவை நிலையத்தின் மின் அத்தியட்சகராக இருந்துவந்த பொறியியலாளர் ஏ.எச்.எம்.பயாஸின் இடமாற்றத்தையடுத்து வெற்றிடமான சாய்ந்தமருது பாவனையாளர் சேவை நிலையத்தின் புதிய மின் அத்தியட்சகராக பொறியியலாளர் கோ.ஜெயராஜ் நியமிக்கப்பட்டு கடமையை பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாய்ந்தமருது பாவனையாளர் சேவை நிலையத்தில் இடம்பெற்றது.*

*(மாளிகைக்காடு)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளை அறிய பேராயரைவிட நாட்டின் முஸ்லிம் சமூகமே பலமடங்கு ஆவலாக உள்ளது!

## முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பின் தலைவர் மௌலவி மிப்ளால் தெரிவிப்பு

(மாளிகைக்காடு)

இலங்கை முஸ்லிம்கள் ஊழல் மோசடி, பயங்கரவாதம், போதைப்பொருள் போன்றவற்றுக்கு எதிரானவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால், இப்போது துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம் பெயர்களை யுடைய சிறிய குழுவினர் செய்த நாசகார வேலையினால் இலங்கையில் வாழும் 20 இலட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் தலைக்குனிவை சந்தித்துள்ளனர். அதுமட்டுமன்றி, இதன் பிரதிபலிப்பாக கம்பஹா, குருநாகல், புத்தளம் போன்ற மாவட்டங்களில் நடைபெற்ற வன்செயல்களினால் முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் தீக்கிரையாக்கப்பட்டு முஸ்லிம்களின் உடைமைகள், சொத்துகள் அழிக்கப்பட்ட வரலாறு என முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பின் தலைவர் மௌலவி ஐ.எம்.எம்.மிப்ளால் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

கிறிஸ்தவ மக்களை குறிவைத்து உயிர்த்த ஞாயிறு தின ஆராதனையில் தாக்குதல் நடைபெற்று இரண்டு ஆண்டுகள் கடந்துள்ளன. இதை அடையாளப்படுத்தி துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகிறது, கறுப்பு ஞாயிறு அனுஷ்டிக்கப்படுகிறது மாத்திரமன்றி, ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர், அரசியல்வாதிகள், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் அனுதாபச் செய்திகளை வெளியிடுகிறார்கள். அதற்கு மேலதிகமாக முஸ்லிம் சமூகமும் கிறிஸ்தவ மக்களின் மனதை வெல்ல பல்வேறு செயற்பாடுகளையும் செய்து வருகிறார்கள்.



இந்த உயிர்த்த ஞாயிறு தின ஆராதனை தாக்குதல் இலங்கையில் வாழும் கிறிஸ்தவர்களினது மட்டுமல்ல, இலங்கையர்கள் எல்லோரது மனதையும் வெகுவாக பாதித்தது. 260 பேரளவில் உயிரிழந்தும், 500இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் பலத்த வேதனையை இந்தச் சம்பவம் உண்டாக்கியது. ஆனாலும் இந்தச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் கிறிஸ்தவ மக்களை விட முஸ்லிம்களே அதிகம். ஏனெனில், இந்த நாட்டில் பல ஆயிரக்கணக்கான வருடங்கள் இந்த நாட்டின் இறையாண்மை, கௌரவம், வளர்ச்சி என்பவற்றை உயர்த்த பெரியளவில் செல்வாக்கு செலுத்தியவர்கள் முஸ்லிம்கள்.

இந்தத் தாக்குதலை காரணமாகக் கொண்டு இந்த நாட்டில் உருவாகும் அரசாங்கங்கள் முஸ்லிம்களின் மத்ரஸாக்கள், பெண்களின் உடை மீதான தடை, பாடப்புத்தகங்களில் திருத்தம், தனியார் சட்டத்தில் மாற்றம் போன்ற அடிப்படை உரிமைகளில் கைவைத்து நடவடிக்கைகளை செய்துவருவதை காண்கிறோம். இந்த நாட்டில் வாழும் பெரும்பான்மைச் சமூகம் முஸ்லிம்களை சந்தேகக்கண்கொண்டு பார்க்கும் நிலை உருவாகியுள்ளது. இந்த குண்டுவெடிப்பில் கிறிஸ்தவ சகோதரர்கள் உடல்ரீதியாக அனுபவித்த துன்பங்களைவிட இஸ்லாமிய சமூகம் உளரீதியாக அனுபவித்த துன்பங்கள் அதிகம். இந்த நாசகார வேலைகளை பின்னணியில் இருந்து செய்தவர்கள் யார் என்பதை கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அறிவதை விட பலமடங்கு அறிந்துகொள்ள முஸ்லிம் சமூகமே ஆவலாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

# தஜ்வீத் மத்ரஷா மாணவர்களின் 16 ஆவது பட்டமளிப்பு விழா



(அட்டாளைச்சேனை)

யூ.கே.எம்.இஸ்மாயில் பவுண்டேஷன் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் தஜ்வீத் மத்ரஷா மாணவர்களின் 16ஆவது பட்டமளிப்பு விழா அட்டாளைச்சேனை அல்-முனீறா பெண்கள் உயர்பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

யூ.கே.எம்.இஸ்மாயில் பவுண்டேஷன் தலைவரும் ஓய்வுபெற்ற அதிபருமான கே.எம்.சுபையிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி ஏ.எல்.எம்.அஷ்ரப் பிரதம அதிதியாகவும், அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபிக் கல்லூரியின் பொதுச் செயலாளரும் இத்திட்டத்தின் மேற்பார்வையாளருமான மௌலவி யூ.எம்.நியாஸி கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டனர் .

மூன்று வருடங்கள் பகுதி நேரங்களாக தஜ்வீத் முறைப்படி புனித அல்-குர்ஆனை ஓதி மனனம் செய்து பூரணப்படுத்திய மாணவர்களுக்கு இதன்போது பட்டச்சான்றிதழ் மற்றும் நினைவுச்சின்னம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மாணவர்களினால் ஆக்கப்பட்ட இஸ்லாமிய கலை, கலாசார நிகழ்வுகள் அதிதிகள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் அரங்கேற்றம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அல்-முனீறா பெண்கள் உயர்பாடசாலையின் பிரதி அதிபர் ஓ.எல்.றிஸ்வான், யூ.கே.எம்.இஸ்மாயில் பவுண்டேஷனின் செயலாளர் மௌலவியூ.எல்.எம்.சலாம்,பவுண்டேஷனின் உபசெயலாளர் ஆசிரியர் ஏ.எம்.சுலைமாலெப்பை பவுண்டேஷனின் பதவி வழி உத்தியோ கத்தர்கள், பிரமுகர்கள் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# மின்சாரம் தாக்கி இளைஞன் படுகாயம்!

## ஓட்டமாவடியில் சம்பவம்

(மீராவோடை)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி வர்த்தக நிலையம் ஒன்றில் பணிபுரிந்த 20 வயது இளைஞன் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மின்சாரம் தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த வர்த்தக நிலையத்தில் மேல் மாடியில் வேலை செய்துகொண்டிருந்தபோது இளைஞனின் கையில் இருந்த இரும்புக் குழாய் பிரதான மின்கம்பியில் பட்டதால் இந்த இளைஞனை மின்சாரம் தாக்கியுள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

# இராயப்பு ஆண்டகை இறுதிநல்லடக்க நாளில் மட்டக்களப்பு நகரில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு







(வாழைச்சேனை)

தமிழ்த் தேசியத்தின்பால் ஓங்கி ஒலித்த குரலான ஓய்வுநிலை ஆயர் அமரர் வண இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இறுதி நல்லடக்க நாளான நேற்று முன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பு நகரிலுள்ள தந்தை செல்வா சிலை வளாகத்தில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சி சிரேஷ்ட தலைவருமான பொ.செல்வராசாவின் தலைமையில் இடம்பெற்ற அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் மறைந்த முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு ஜோசப் ஆண்டகையின் படத்திற்கு மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவனால் மலர்மாலை அணிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்களினால் மெழுகுவர்த்தி சுடர்கள் ஏற்றப்பட்டு மௌனப் பிரார்த்தனையும், மலரஞ்சலியும் செலுத்தப்பட்டு, அன்னாரின் நினைவு தொடர்பாக நினைவுரையும், இரங்கல் உரையும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், ஞா.ஸ்ரீநேசன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இ.பிரசன்னா, மா.நடராஜா, மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்கள், மதப் பெரியார்கள், மாநகர சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள், ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

ஆன்மீக தலைவராக இருந்து தமிழ்த் தேசியத்தின்பால் அக்கறையுடன் செயலாற்றி வடக்கு, கிழக்கு மக்கள் பல நெருக்கடிகளையும், இனப்படுகொலைகளையும், தடைகளையும் சந்தித்த வேளைகளில் எல்லாம் தேசியரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் துணிந்து குரல் கொடுத்தவர் ஆண்டகை இராயப்பு ஜோசப் அடிகளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் கலாநிதி அருட்தந்தை நவரெட்னம் அடிகளாரினால் சிறப்பு நினைவுரை நிகழ்த்தப்பட்டது.

மட்டக்களப்பில் இடம்பெறும் இந்த அஞ்சலி வணக்க நிகழ்வானது கொரோனா நோய் பாதுகாப்பை கருத்திற்கொண்டு முகக்கவசம், சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடைபெற்றது.

# மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு அபராதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் மதுபோதையில் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டர் சைக்கிள் செலுத்திய இருவருக்கு 70 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் கருப்பையா ஜீவராணி நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டு இவர்களின் சாரதி அனுமதிப்பத்திரங்களையும் 6 மாதத்திற்கு இரத்துச்செய்து தீர்ப்பளித்துள்ளார்.

வெல்லாவெளி வீதி போக்குவரத்து பொலிஸார் கடந்த 31ஆம் திகதி வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது முச்சக்கரவண்டி மற்றும் மோட்டர் சைக்கிளை மதுபோதையில் செலுத்திவந்த இருவரையும் கைதுசெய்த பொலிஸார் நேற்றுமுன்தினம் 5ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டு பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

இந்நிலையில், களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் கருப்பையா ஜீவராணி முன்னிலையில் இருவரும் ஆஜர்படுத்தப்பட்டபோது ஒருவருக்கு தலா 35 ஆயிரம் ரூபா வீதம் இருவருக்கும் 70 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக செலுத்துமாறும் உத்தரவிட்டு இருவருடைய சாரதி அனுமதிப்பத்திரங்களையும் 6 மாதத்திற்கு இரத்துச்செய்து தீர்ப்பளித்துள்ளார்.

# வாழைச்சேனை நாவலடி இராணுவ சோதனைச்சாவடி அகற்றப்பட்டது

(மீராவோடை)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ சோதனைச்சாவடி நேற்று முன்தினம் நீக்கப்பட்டுள்ளது.



2019 ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின தொடர் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் சோதனைச்சாவடிகள், காவலரண்கள் அமைக்கப்பட்டன.

இந்நிலையில், குறித்த பகுதியில் இயங்கிவந்த சோதனைச்சாவடி அகற்றப்பட்டுள்ளதுடன், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புறுமூலை இராணுவ சோதனைச்சாவடி தொடர்ந்தும் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் சமூக வட்டங்கள் உருவாக்கம் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில்

(வாழைச்சேனை)

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர்களின் பங்கேற்றலை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக கிராம மட்டங்களில் சிறுவர் சமூக வட்டங்கள் உருவாக்கப்பட்டு பிரதேச ரீதியில் பிரதேச சிறுவர் சபையும் உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது.



இது மாவட்ட தேசிய சிறுவர் சபை என ஸ்தாபிக்கப்பட்டு சிறுவர்களின் பங்குபற்றல் உரிமைக்கு களம் அமைத்து செயற்பட்டு வருகின்றது .

அந்தவகையில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் புதிய பிரதேச சிறுவர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யும் நிகழ்வு செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது வாகரை பிரதேசத்தில் உள்ள 32 கிராமங்களை உள்ளடக்கியதாக பிரதேச சிறுவர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்

பிரதேச செயலாளர் சுப்பிரமணியம் ஹரன் தலைமையில் சிறுவர் உரிமைகள் மேம்பட்டு அதிகாரி அ.அழகுராஜ் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் வேல்ட் விஷன் சிறுவர் பாதுகாப்பு திட்டத்திற்கு பொறுப்பான ஜெயகுமார், செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர்கள் எனப் பலர் பங்குபற்றினர்

# மோதல் தீர்வுக் கற்கைகள்: நூல் வெளியீட்டு நிகழ்வு




(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீட அரசியல் விஞ்ஞான பேராசியர் த.கிருஸ்ணமோகனினால் எழுதப்பட்ட "மோதல் தீர்வுக் கற்கைகள்" ஓர் அறிமுகம் எனும் நூல் கலை, கலாசார பீடத்தின் சமூக விஞ்ஞானத்துறை தலைவர் எஸ்.சத்தியசேகரின் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதலாவதாக நூல் அறிமுகம் இடம்பெற்றதனைத் தொடர்ந்து, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி கலாநிதி கெனடிக்கு பேராசிரியர் குணரெத்தினம் மற்றும் துறைத்தலைவர் எஸ்.சத்தியசேகர் ஆகியோருக்கு நூலின் முதற் பிரதிகள் வழங்கப்பட்டன.

தற்காலத்துக்கு தேவையான பல விடயங்களை உள்ளடக்கிய ஒரு நூலாக குறித்த நூல் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# ஓட்டமாவடி தாறுல்உலூம் வித்தியாலய மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்கள்









(ஓட்டமாவடி)

ஓட்டமாவடி கல்விக் கோட்ட பிரிவிற்குள் அடங்குகின்ற ஓட்டமாவடி தாறுல்உலூம் ஆரம்பக் கல்விப் பாடசாலை மாணவர்களுக்கு நினைவுச்சின்னங்களையும், சான்றிதழ்களையும் வழங்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது.

அதிபர் மொஹமட் பைசல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதி அதிபர் முஹாஜிரீனும் கலந்துகொண்டு மாணவர்களுக்குரிய நினைவுச்சின்னங்களை வழங்கினர்.

நாட்டிலுள்ள முஸ்லிம் பாடசாலைகள் புனித நோன்பு விடுமுறைக்காக மூடப்படவுள்ளதால் இந்த வருடம் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை மாணவர்களின் நிலையினை அறிந்துகொள்வதற்காக பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட பரீட்சையில் திறமைகளை வெளிப்படுத்திய தரம்-5 மாணவர்களுக்கே இந்த நினைவுச்சின்னங்கள் வழங்கப்பட்டன. அத்துடன், விடுமுறை காலத்தில் கற்றுக்கொள்வதற்காக மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள்கள் அடங்கிய பொதிகளும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அடுத்த முதலமைச்சர் யார்?

## நிறைவடைந்தது சட்டமன்றத் தேர்தல்: 12 மணிநேரத்துள் 71.79 வீத வாக்கு பதிவு

தமிழக சட்டமன்றத் தேர்தல் நேற்று விறுவிறுப்பாக நடைபெற்று முடிவடைந்துள்ளது.

நேற்றுக் காலை 7 மணிமுதல் மாலை 7 மணிவரை இடம்பெற்றநிலையில் தமிழகம் முழுவதும் 71.79வீத வாக்குகளே பாதிவாகியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக அரசியலின் மாபெரும் ஆளுமைகளான ஜெ.ஜெயலலிதா மற்றும் மு.கருணாநிதி ஆகியோரின் மறைவுக்குப் பின்னர் இடம்பெறும் முதலாவது தேர்தல் இதுவாகும்.

மறைந்த அவர்களுக்கு நிகராக எவரும் வரப்போவதில்லை என்றாலும் தமிழகத்தை வழிநடத்தக்கூடிய புதிய தலைமையை எதிர்நோக்கி நிற்கிறது தமிழகம். யார் அந்தத் தலைமை என்ற கேள்விக்கு பதிலளிக்கும் முகமாக நேற்று தமிழகம் முழுவதிலுமுள்ள 234 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று முடிவடைந்துள்ளது. முடிவுகள் எதிர்வரும் மே 02ஆம் திகதியே அறிவிக்கப்படவுள்ளன.



கடந்த ஒரு மாத காலமாக தேர்தல் பிரசார நடவடிக்கைகளால் அனல் பரந்த தேர்தல் களம் நேற்று மாலை 7 மணியுடன் தணிந்தது.

காலை 7 மணிமுதல் மாலை 7 மணிவரை தொடர்ந்தும் 12 மணி நேரம் வாக்குப்பதிவு நடைபெற்றது. அதிகாலை முதலே மக்கள் ஆர்வத்துடன் நீண்ட வரிசைகளில் காத்திருந்து தமது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினர்.

தமிழகம் சுமார் 6,28,69,955 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்தனர் இவர்களில் 3,09,23,651 பேர் ஆண்கள், 3,19,39,112 பேர் பெண்கள், 7,192 பேர் மூன்றாம் பாலினத்தவராவர்.

தேர்தலை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 1.58 இலட்சம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

234 தொகுதிகளிலும் 3,998 வேட்பாளர்கள் களமிறங்கியிருந்தனர்.

தமிழகம் முழுவதும் 88,937 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

அவற்றில் 537 வாக்குச்சாவடிகள் மிகவும் பதற்றமானவை. 10,813 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என தேர்தல் ஆணையகம் தெரிவித்திருந்து. இதனால் பதற்றமான வாக்குச்சாவடிகளில் பலத்த பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டன.

கொரோனா தொற்று பரவாமல் தடுக்க வாக்குச்சாவடிகளில் கூடுதல் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வாக்காளர்கள் முகக்கவசம் அணிந்துதான் வரவேண்டும் என தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், வாக்காளர்களுக்கு வெப்ப பரிசோதனை செய்யப்பட்டு சானிடைசர்கள் ஒருமுறை பயன்படுத்தும் கையுறை வழங்கப்பட்டிருந்தது.

விசேடமான கொரோனா நோயாளிகள் மாலை 6 மணிமுதல் 7 மணிவரை பிபிஇ உடை அணிந்து வாக்களிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

# அரசியல் கட்சித் தலைவர்களின் வாக்குப்பதிவும் - கருத்துரைப்பும்

தமிழக சட்டமன்றத் தேர்தல் நேற்று விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. நேற்றுக் காலை முதலே அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களின் ஜனநாயக கடமையை நிறைவேற்றினர். வாக்களிப்பு நிலையங்களுக்கு தங்களின் குடும்பத்தினருடன் வந்த தலைவர்கள், வாக்களித்த பின்னர் தங்களின் கருத்துகளை பகிர்ந்து கொண்டபோது...













**தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்:**

தி.மு.க தலைவர் ஸ்டாலின் மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சரும் தனது தந்தையுமான மு.கருணாநிதியின் நினைவிடத்தில் (மெரினாவிலுள்ள) மரியாதை செலுத்திய பின்னர் வாக்களிப்பு நிலையத்துக்கு தனது மனைவி துர்கா மற்றும் மகன் உதயநிதி ஆகியோருடன் தேனாம்பேட்டை எஸ்.ஐ.டி. கல்லூரியில் தனது வாக்கினை செலுத்தினார். அப்போது ''மே-2ஆம் திகதி மக்கள் தீர்ப்பு சிறப்பாக இருக்கும். தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள் திருப்தி என்றும் சொல்லமுடியாது, அதிருப்தி என்றும் சொல்ல முடியாது" என கருத்து தெரிவித்தார்.

**முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி:**

தமிழக முதலமைச்சரும் சேலம் மாவட்ட எடப்பாடி சட்டமன்ற வேட்பாளருமான எடப்பாடி பழனிசாமி தன் குடும்பத்தினருடன் சிலுவம்பாளையம் தொடக்கநிலைப் பாடசாலையில் வரிசையில் நின்று வாக்களித்தார். அப்போது, "தமிழக வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் வாக்களித்து ஜனநாயக கடமையினை நிறைவேற்றவேண்டும்" என பத்திரிகையாளர்களிடம் கருத்து தெரிவித்திருந்தார்.

**துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம்:**

துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். தனது குடும்பத்தினருடன் தேனி மாவட்டம் பெரியகுளம் தென்கரை தெற்குரத வீதி செவன்த் டே நர்சரிப் பாடசாலையில் வாக்களித்தார். அப்போது, "அ.தி.மு.க. மூன்றாவது முறையாக ஆட்சியமைக்கும்" என கருத்து தெரிவித்தார்.

**அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டிடிவி தினகரன்:**

சென்னை அடையாறு தாமோதரபுரம் வாக்குச்சாவடியில் தனது குடும்பத்துடன் வாக்களித்தார் டிடிவி தினகரன். அப்போது, "தமிழகத்தில் பெரியளவில் மாற்றம் வரும், மக்கள் அதை உருவாக்குவார்கள் என நம்புகிறேன்" - என்றார்.

**வி.சி.க. தலைவர் திருமாவளவன்:**

அரியலூர் அங்கனூரில் பகுதியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தனது வாக்கினைப் பதிவுசெய்தார். அப்போது, "தேர்தல் ஆணையம் ஆளும் கட்சிக்குச் சேவை செய்யும் நிறுவனம்" என கடுமையாக கருத்து தெரிவித்தார்.

**நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்:**

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், வளசரவாக்கம் அஷ்டலட்சுமி நகர வாக்குச்சாவடியில் தனது வாக்கினைச் செலுத்தினார். அப்போது, "பணநாயகம் இருக்கும்வரை ஜனநாயகம் என்பது கேலிக்கூத்துதான்" என்றார்.

**ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ:**

தென்காசி- சங்கரன்கோபகுதியில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வாக்களித்தார். அப்போது, "தி.மு.க. கூட்டணி 200இற்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறும்" என நம்பிக்கை தெரிவித்தார்.

**தே.மு.திக. பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த்:**

தே.மு.தி.க. பொருளாளரும் விருத்தாசலம் தொகுதி வேட்பாளருமான பிரேமலதா விஜயகாந்த், சென்னை விருகம்பாக்கம் தொகுதியில் தனது வாக்கைச் செலுத்தினார். இதன்போது, தே.மு.தி.க. போட்டியிடும் தொகுதிகள் மட்டுமின்றி தங்களது கூட்டணி அனைத்து இடங்களிலும் வெற்றி பெறும் என்றார்.

**முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம்:**

முன்னாள் மத்திய நிதி அமைச்சரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான ப.சிதம்பரம், சிவகங்கை- காரைக்குடியில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்கினை செலுத்தினார். அப்போது, "எங்களுடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தமிழ்நாட்டில் மிகப்பெரிய வெற்றியை ஈட்டும் என்பதில் எந்தவிதமான ஐயமும் கிடையாது" என தெரிவித்தார்.

# ஜனநாயகக் கடமையை நிறைவேற்றிய திரையுலக பிரபலங்கள்



**பலத்த பாதுகாப்புடன் வாக்களித்தார் ரஜினி**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நேற்று ஒரே கட்டமாக நடைபெறுகிறது. சரியாக காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது.

கட்சித் தொடக்கம்முதல் அரசியலில் தீவிரம் காட்டிய ரஜினி, பின்பு தன் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு அரசியலில் களம் காணவில்லை. அதேசமயத்தில் யாருக்கு ஆதரவு என்பதையும் தெரிவிக்கவில்லை.

சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் வாக்களிக்க காலையில் 7 மணிக்கு ரஜினி வந்தபோது பத்திரிகையாளர்கள் அவரை சூழந்துகொண்டனர். இதனைத் தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்புடன் உள்ளே சென்றார் ரஜினி.

வாக்குப்பதிவுச் சீட்டு சரிபார்த்து முடித்தவுடன், கையொப்பமிட்டார் ரஜினி. பின்பு வாக்களிக்கும் இயந்திரம் அருகே சென்றார். அப்போது அதை வீடியோ, புகைப்படம் எடுக்க ஒன்றுகூடினார்கள். அனைவரையும் பின்னால் போகுமாறும் சைகை காட்டினார் ரஜினி. அனைத்து பக்கங்களிலும் அனைவருமே பின்னால் செல்லும்வரை காத்திருந்தார் ரஜினி.

அதற்குப் பின்பு வாக்களித்துவிட்டு, வாக்களித்த மை வைக்கப்பட்ட விரலை உயர்த்திக் காண்பித்தார். பின்பு காவல்துறையினர் பாதுகாப்பாக அவரை காரில் ஏற்றி அனுப்பிவைத்தனர்.

**நடந்தே சென்று வாக்களித்த விக்ரம்**

தனது வீட்டிலிருந்து வாக்குச்சாவடிக்கு நடந்துவந்து வாக்களித்துள்ளார் நடிகர் விக்ரம்.

# சைக்கிளில் சென்று வாக்களித்த விஜய்



நடிகர் விஜய் தனது ஜனநாயக கடமையை ஆற்ற சைக்கிளில் சென்று வாக்களித்தது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

தமிழக சட்டமன்றத்துக்கான வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது. காலை 7 மணிமுதல் பொதுமக்கள், திரைப்பிரபலங்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் என அனைவரும் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றியிருந்தனர்.

இந்நிலையில், சென்னையில் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி வாக்குச்சாவடியில் நடிகர் ரஜினி வாக்களித்தார். தி.நகர் வாக்குச்சாவடியில் தந்தை சிவகுமார், சூர்யா மற்றும் கார்த்தி ஆகியோர் வரிசையில் நின்று வாக்களித்தனர்.

சென்னை திருவான்மியூரிலுள்ள வாக்குச்சாவடியில் நடிகர் அஜித் தனது மனைவி ஷாலினியுடன் முதல் ஆளாக வந்து வரிசையில் நின்று வாக்களித்தார். சென்னை தேனாம்பேட்டையிலுள்ள வாக்குச்சாவடியில் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் தனது இரு மகள்களான ஸ்ருதிஹாசன், அக்ஷரா ஹாசனுடன் வந்து வாக்களித்தார்.

இந்நிலையில், நடிகர் விஜய் தனது ஜனநாயக கடமையை ஆற்ற சைக்கிளில் சென்று நிறைவேற்றியமை அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

நீலாங்கரையிலுள்ள தனது வீட்டிலிருந்து நடிகர் விஜய் வாக்குச்சாவடிக்கு சைக்கிளில் சென்றார்.

அவரைப் பார்த்ததும் ரசிகர்கள் பொலிஸ் அமைத்திருந்த தடுப்புகளையும் மீறி அங்கு குழுமினர். பாதுகாப்புக்கு இருந்த பொலிஸார் ரசிகர்களை அப்புறப்படுத்தி, நடிகர் விஜய்யை உள்ளே அழைத்துச் சென்றனர். அதன்பிறகு தனது வாக்கை நடிகர் விஜய் பதிவுசெய்தார்.

நடிகர் விஜய் வாக்கு செலுத்திவிட்டு திரும்பியபோது ரசிகர்கள் அதிகளவில் முண்டியடித்ததால், பொலிஸார் தடியடி நடத்தி கூட்டத்தைக் கலைத்தனர்.

வாக்களித்த பிறகு, மீண்டும் தனது வீட்டுக்கு சைக்கிளில் செல்ல நடிகர் விஜய் சென்றார். ஆனால், ரசிகர்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால் அந்த முயற்சியை கைவிட்டு, விஜய் மக்கள் இயக்க நிர்வாகி ஒருவரது இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பியுள்ளனார்.

நடிகர் விஜய் சைக்கிளில் வாக்களிக்க வந்தது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருவதுடன், அதுகுறித்து பல்வேறு கருத்துகளும் பகிரப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், சைக்கிளில் வந்து வாக்களித்தது குறித்து விஜய் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. விஜய்யின் செய்தித் தொடர்பாளர் ரியாஸ் இதுபற்றிக் கூறியதாவது:

வாக்குச்சாவடி அமைந்துள்ள பகுதியில் கார் செல்ல முடியாது என்பதாலும் வாக்குச்சாவடி வீட்டுக்கு அருகே உள்ளது என்பதாலும் நடிகர் விஜய் சைக்கிளில் வந்து வாக்களித்தார் என்று அவர் தெரிவித்துள்ளார்.



# வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் உறவினர் வீட்டில் உறங்கிய தேர்தல் அலுவலர்

மேற்கு வங்கத்தில், உறவினரான திரிணமூல் காங்கிரஸ் தலைவர் ஒருவரின் வீட்டில் வாக்குப்பதிவு இயந்திரத்துடன் இரவில் உறங்கிய தேர்தல் அலுவலகரை தேர்தல் ஆணையம் பணிநீக்கம் செய்துள்ளது.

அந்த வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் அதனுடன் இணைந்த விவிபாட் இயந்திரம் வாக்குப்பதிவுக்கு பயன்படுத்தப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலுபேரியா உத்தர் என்ற சட்டப்பேரவைத் தொகுதி தேர்தல் அலுவலரான தபன் சர்க்கார் என்ற அந்த நபரிடமிருந்து பறிமுதல்செய்யப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரம் தேர்தல் பார்வையாளரின் கண்காணிப்பில் தனியறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளவில் 533 மில். பேஸ்புக் பயனர்களின் தகவல்கள் திருட்டு

உலகளவில் சுமார் 533 மில்லியன் பேஸ்புக் பயனர்களின் தனிப்பட்ட விவரங்கள் ஹேக்கர்களின் இணையதளத்தில் வெளியிட்டுள்ளதாக பரபரப்புத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக சைபர் செக்யூரிட்டி நிறுவனமான ஹட்சன் ராகின் நிறுவுனர் அலோன் கால் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், பேஸ்புக் பயனர்களின் பெயர்கள், தொலைபேசி எண்கள் உள்ளிட்ட தகவல் வெளியாகியுள்ளதாக பதிவிட்டுள்ளார்.

அதன்படி அமெரிக்காவில் 32 மில்லியனும், பிரித்தானியாவிலிருந்து 11 மில்லியன் மற்றும் ஆஸ்திரேலியாவின் 7 மில்லியன் பயனர்கள், இந்தியாவிலிருந்து 6 மில்லியன் பயனர்கள் பற்றிய தகவல்கள் கசிந்துள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பேஸ்புக் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர்,

2019ஆம் ஆண்டே இந்தத் தகவல் குறித்து முறைபாட ளிக்கப்பட்டது என்றும், இதனை 2019 ஆண்டே கண்டறிந்து சரிசெய்தாகவும் கூறியுள்ளார்.

# வாழை மரம் - மாவிலைத் தோரணம் கட்டி பன்னீர் தெளித்து வாக்காளர்களை வரவேற்ற காரைக்குடி வாக்குச்சாவடி







சிவகங்கை மாவட்டம் காரைக்குடியிலுள்ள ஒரு வாக்குச்சாவடியில் வாழை மரம், தென்னை, மாவிலைத் தோரணம் கட்டியும், சிவப்புக் கம்பளம் விரித்தும், பன்னீர் தெளித்தும், இனிப்பு வழங்கியும் வாக்காளர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

மேலும், வாக்குச்சாவடி அறை முழுவதும் பலூன்களால் அலங்கரிக்கப்பட்டு மின்விசிறி போன்ற வசதிகளும் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன.

இதனால் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் நின்று மகிழ்ச்சியாகவும், மனநிறைவுடனும் வாக்களித்துச் சென்றனர். மேலும், வாக்காளர்களின் உடல் வெப்பநிலை பரிசோதிக்கப்பட்டு, கிருமிநாசினி மூலம் கை கழுவி, முகச்கவசம் அணிந்த பிறகே அனுமதிக்கப்பட்டனர்.

# நடிகர் கார்த்திக் மீண்டும் மருத்துவமனையில் அனுமதி



நடிகர் கார்த்திக் உடல்நலக்குறைவு காரணமாக மீண்டும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நாடாளும் மக்கள் கட்சியை நடத்திவரும் கார்த்திக், சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்திருந்தார். அவர் பிரசாரம் தொடங்கவிருந்த நேரத்தில் மூச்சுத்திணறல் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்றார். பின்னர், குணமாகி ஒருசில இடங்களில் பிரசாரமும் செய்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் அவருக்கு திடீர் உயர் இரத்த அழுத்தம் மற்றும் மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து உடனடியாக அவரை அடையாறிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சையளித்து வருகிறார்கள். கொரோனா பரிசோதனையில் கொரோனா தொற்று இல்லை என்று தெரியவந்துள்ளது. 3 வாரங்கள் தொடர்ந்து ஓய்வில் இருக்கவேண்டும் என்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

# செல்பி எடுக்க முயற்சித்த ரசிகர்: கைப்பேசியை பறித்த நடிகர் அஜித்



தமது ஜனநாயக கடமையை நிறைவேற்றுவதற்காக தனது மனைவி ஷாலினியுடன் வருகைதந்த நடிகர் அஜித் மக்களோடு மக்களாக வரிசையில் காத்திருந்து வாக்களித்தார்.

அஜித் வாக்களிக்க வந்தபோது, அவருக்கு அருகில் பொலிஸார் வர சற்றுத் தாமதமானது.

அப்போது அங்கிருந்த ரசிகர்கள் அவருடன் செல்ஃபி எடுக்க முன்வந்தனர். அஜித் அவர்களைக் கோபமாக முறைக்கவே ரசிகர்கள் சிலர் திரும்பிச் சென்றார்கள்.

அப்போது இன்னொருபுறம் ரசிகர் ஒருவர் செல்ஃபி எடுக்க கைப்பேசியுடன் அவர் அருகில் வந்தபோது நடிகர் அஜித் அவருடைய கைப்பேசியை பறித்துவிட்டார்.

இந்நிலையில், தற்போது இந்த வீடியோ சமூக வலைத்தளத்தில் வைரலாகியது. அஜித்தின் இந்தச் செயலால் ரசிகர் அதிர்ச்சியடைந்தார்.

மேலும் வாக்களிக்க நின்றுகொண்டிருக்கும்போது, தனது பாக்கெட்டில் வைத்திருந்த கைப்பேசியை கொடுத்துவிட்டார். அப்போது, இந்த இடங்களில் செல்ஃபி எடுக்கவேண்டாம் என அறிவுறுத்தினார்.

# உலகின் மிக உயரமான ரயில்வே பாலம் வளைவு அமைக்கும் பணிகள் நிறைவு



உலகின் மிக உயரமான ரயில்வே பாலம் என்ற பெருமையைப் பெற்றுள்ள ஜம்மு காஷ்மீரின் செனாப் பாலத்தின் வளைவு அமைக்கும் பணிகள் நிறைவடைந்தன.

ஜம்மு - காஷ்மீரிலுள்ள பள்ளத்தாக்குகளை நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கும் வகையில் செனாப் நதியின்மீது 1.3 கி.மீ. தொலைவில் ரயில்வே பாலம் கட்டும் பணிகள் கடந்த ஆண்டு தொடங்கியது. சுமார் 1,486 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் இந்தப் பாலத்தின் வளைவு பகுதியை அமைக்கும் பணி நேற்று முன்தினம் முடிவடைந்தது. காணொளி வாயிலாக ரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல் இந்தப் பணிகளை ஆய்வுசெய்தார்.

''கட்டடக் கலையில் அதிசயமாக, உள்நாட்டு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நம் கனவுத்திட்டத்தின் அருகில் நெருங்கியுள்ளோம். வளைவு பணி முடிந்ததைத் தொடர்ந்து, அடுத்தகட்ட பணிகளுக்கு நாம் செல்லவேண்டும். அடுத்த வருடத்துக்குள் பாலத்தின் பணிகள் முழுமையாக முடிவடைந்துவிடும்'' - என்று ரயில்வேயின் மூத்த அதிகாரி கங்கல் கூறியுள்ளார். செனாப் ரயில்வே பாலமானது ஆற்றின் மேலே இரண்டு மலைகளுக்கு நடுவே 359 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த உயரம் பிரான்ஸின் பாரிஸிலுள்ள ஈபில் டவரைவிட 35 மீற்றர் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகம் - கேரளா - புதுச்சேரி - அசாம் - மேற்குவங்கம் 5 மாநிலங்களில் 475 தொகுதிகளில் வாக்குப்பதிவு நிறைவு

தமிழகம், கேரளா, புதுச்சேரி, அசாம், மேற்குவங்கம் ஆகிய 5 மாநிலங்களில் 475 தொகுதிகளில் நடைபெற்ற வாக்குப்பதிவு நேற்று நிறைவுபெற்றுள்ளது. தமிழ்நாடு மட்டுமல்லாமல் மேற்கு வங்கம், அசாம், கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கும் நேற்று தேர்தல் நடைபெற்றது. மேற்கு வங்கத்தைத் தவிர்த்து மற்ற நான்கு மாநிலங்களுக்கும் நேற்றோடு தேர்தல் முடிவடைந்தது. அசாம் மாநிலத்திலும் மேற்கு வங்கத்திலும் 3ஆம் கட்ட தேர்தல் நடைபெறுகிறது. நேற்று மட்டும் மொத்தமாக 475 தொகுதிகளில் வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கியது. 5 மாநிலங்களிலும் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. 5 மணி நிலைவரப்படி, தமிழ்நாட்டில் 63.60 சதவீதமும், கேரளாவில் 69.93 சதவீதமும், மேற்கு வங்கத்தில் 77.68 சதவீதமும், அசாமில் 78.94 சதவீதமும், புதுச்சேரியில் 77.90 சதவீதமும் வாக்குகள் பதிவாகியிருக்கின்றன.

# நாளை என்பது ஒரே ஒரு நாள் அல்ல; ஐந்தாண்டு கால குத்தகை

**பார்த்திபனின் தேர்தல் ட்வீட்**

தமிழக சட்டமன்றத் தேர்தல் நேற்று நடைபெற்ற நிலையில் நடிகரும் இயக்குநருமான ஆர்.பார்த்திபன் தனது ட்விட்டர் பக்கத்தில்,

''நாளை என்பது ஒரே ஒரு நாள் அல்ல... ஐந்தாண்டு கால குத்தகை! பொத்தானில் குத்துகையில் கவனம் கொள்வோம்'' என்றார். நேற்று முன்தினம் வெளியிட்ட ட்வீட்டில்:

''ஏப்ரல்- 1ஐ 6இற்கு ஒத்திவைக்காமல் ஆறு'தல் பிச்சைக்கு கை நீட்டாமல் நல்லாட்சிக்கு விரல் நீட்டுவோம், King- maker''ராக என்றார்.

# கப்பலுக்குள் பொருளாதாரம்

4ஆம் பக்கத் தொடர்ச்சி...

'கொள்கலன்களின் தந்தை' (father of containerization) என புகழப்பட்ட மெல்கம் மெக்லீன் 2001ஆம் ஆண்டில் 88ஆவது வயதில் இறந்தபோது, அவரை 'நூற்றாண்டின் நாயகன்' என்று International Maritime Hall of Fame கௌரவித்தது. அவர் அன்று ஆரம்பித்துவைத்த புரட்சியினால்தான் சர்வதேச வியாபாரம் தலைதூக்கியது. அதனால்தான், இன்று நாம் நுகரும் அத்தனை பொருட்களும் நம் கைகளுக்கு எட்டும் தூரத்திற்கு வந்துள்ளன.

கன்டெய்னர்களின் வருகைக்குப் பின்னர் சரக்குக் கப்பல் மாத்திரமல்ல, நாடுகளின் துறைமுகங்களும் ஏன் கடல் வணிகத்தில் ஈடுபடும் நிறுவனங்களும் கூட மிகப் பிரம்மாண்டமாக வளர்ந்தன. ஆரம்பத்தில் வெறும் 58 கன்டெய்னர்களையே கொண்டுசென்ற சரக்குக் கப்பல்கள் தற்போது கிட்டத்தட்ட 24,000 கன்டெய்னர்கள் வரை ஏற்றக்கூடிய அளவு மிகப் பிரம்மாண்டமாக வளர்ந்துள்ளது. உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொண்ட ஒரு பொது அளவில், வடிவில், தயாரிக்கப்பட்ட கன்டெய்னர்களை தாங்கிச்செல்லும் சரக்குக் கப்பல்கள் உலகை அடுத்தகட்டத்திற்கு எடுத்துச்சென்றது. மில்லியன் கணக்கான பொருட்கள் மிகக் குறைந்த விலையில், அதிக பாதுகாப்போடு உலகின் ஒரு மூலையிலிருந்து மறு மூலைக்கு கொண்டுசெல்லப்பட்டன.

**புதிய நிறுவனங்களின் வருகையும்**
**கடல்வழி வணிகத்தின் அடுத்தகட்ட நகர்வும்!**

1960களின் ஆரம்பத்தில் ஐரோப்பியக் கப்பல் நிறுவனங்களான ஜேர்மனியின் ஹபாக் லாயிட் (Hapag-Lloyd), டென்மார்க்கின் மெர்ஸ்க் லைன் (Maersk Line) போன்ற சில கம்பெனிகள் தமது கொள்கலன் சுமக்கும் சரக்குக் கப்பல்களை அறிமுகப்படுத்தின.

டென்மார்க்கின் மெர்ஸ்க் நிறுவனம் உலகின் மிகப்பெரிய சரக்குக் கப்பல்களைக்கொண்ட ஜாம்பவான் என்ற பெருமையை தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டு வருகிறது. மெல்கம் மெக்லீன் (Malcom McLean) உருவாக்கிய Sea-Land Shipping நிறுவனத்தையும் மெர்ஸ்க் (Maersk Line) நிறுவனம் பின்னாளில் வாங்கிவிட்டது. மேலும், எம்.எஸ்.சி. (Mediterranean Shipping Company), கோஸ்கோ (COSCO – China Ocean Shipping Company) மற்றும் சமீபத்தில் சுயெஸ் கால்வாயில் சிக்கிக்கொண்ட எவர்கிவன் கப்பலைத் தயாரித்த எவர்கிரீன் போன்ற நிறுவனங்கள் சரக்குக் கப்பல்துறையில் கோலோச்சும் சில மிகப்பெரிய நிறுவனங்கள்.

அடுத்த தடவை நீங்கள் வீதியில் செல்லும்போது உங்கள் கண்ணெதிரே செல்லும் கன்டெய்னர் ட்ரக்குகளில் உலகின் இன்னொரு மூலையில் வசிக்கும் ஒரு மனிதன் பயன்படுத்தப் போகும் ஏதோ ஒரு பொருளோ அல்லது அதைத் தயாரிக்கத் தேவைப்படும் மூலப்பொருளோ சென்றுகொண்டிருக்கும். அவற்றை காவிச்செல்ல துறைமுகங்களில் சரக்குக் கப்பல்கள் தயாராகிக்கொண்டிருக்கும்.

**றின்னோஸா**
நன்றி - விகடன்

# தனித்துவமான கவித்துவம்

## கவிமாமணி நீலாபாலன் நினைவில்...



**• செல்லையா பேரின்பராசா**
*– துறைநீலாவணை*

***பசியொடு உலவிடும் மனிதனின் துயரினை***
***பாடிடும் பாடகன் நான்***
***இது ஒரு தனி விதி என ஒரு புதுவிதி***
***எழுதிடும் பாவலன் நான்!***

என்று தனது படைப்பிலக்கை இலக்கிய செல்நெறியை அழுத்தமாக உச்சரிக்கின்ற ஆரோக்கியமான படைப்பாளர் கவிமாமணி நீலாபாலன் தமிழ்க் கவிதை இலக்கியப் பரப்பில் கடந்த நான்கு தசாப்தங்களாகப் பேசப்பட்டு வருகின்ற கவிஞர் கல்முனைப் பூபால்தான் கவிமாமணி நீலாபாலன்.

**புதிது புதிதான விடயத் தேடல்கள்...** அருமையாகவும், ஆழமாகவும் சொல்கின்ற சொல் ஆட்சி, படித்தவுடன் புரிந்து கொள்ளக்கூடிய விளக்கமான படிமங்கள்... உணர்ந்த பின் பிரமிக்கவைக்கும் குறியீடுகள் எல்லோரும் விரும்புகின்ற விரும்பிப் படிக்கின்ற கவிதைகளை அகழ்ந்து தரும் படைப்பாளர் நீலாபாலன்.

அவருடைய ஒவ்வொரு கவிதையிலும் உயிரிருக்கும். ஒவ்வொரு வரிகளிலும் பொருள் இருக்கும், செய்யுள் நடையில் எழுதினாலும் அல்லது புதிதாகப் பிரசவித்தாலும் இவர் எழுதுவது கவிதை. அது கட்புலனுக்குரியதாக - செவிப்புலனுக்குரியதாக மாத்திரமல்லாது ஆழமான உணர்வுகளையும் தொட்டுப்பார்க்கும் ஆற்றலுடையவை.

இயற்கையான வலிந்து நிரப்பப்படாத படிமச் சிறப்பும், உவமை உருவகங்களும், ஓசை அழகுமே இவருடைய கவித்துவ வளம்.

பொருத்தமான படிமங்களோடு, மயக்கம் தராத குறியீட்டில் கவிதை மொழியினைப் புரிந்துகொண்டு உணர்வுபூர்வமான கவிதைகளைப் படைக்கும் ஆற்றல் நிறைந்த நீலாபாலன் கவிதை மொழிவதிலும், ஆற்றலும், ஆளுமையும் நிறைந்தவர். பல கவியரங்குகள் இவரது கவிதைப் பொழிவால் களைகட்டியிருக்கின்றன. பாடுபொருளினை மக்களிடமிருந்தே தேர்ந்துகொண்டு அவர்களுக்கு அந்நியமாகாத மொழியில், ஓசை நயத்தோடு அங்கதச் சுவை இழையோடப் பாடி கைதட்டல்களைப் பெறும் வெற்றிக் கவிஞர் இவர்.

இலக்கியத்துறையில் பன்முகத் திறமையாளரான இவர் - கவிதை, சிறுகதை, குறுங்கதை, மெல்லிசைப் பாடல்கள், திறனாய்வாளருமான இவர் பதினைந்து நாடகங்களுக்கு மேல் எழுதி மேடையேற்றி பரிசுகள் பெற்றிருக்கின்றார்.

கவிமணி நீலாபாலன் மக்கள் கவிஞர். இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் 1990 முதல் 1997 வரையான காலப்பகுதியில் இவர் தொகுத்து வழங்கிய கவிதைக் கலசம் நிகழ்ச்சி வரலாற்று சிறப்பு வாய்ந்தது. இதனூடாக பல கவிஞர்களை உருவாக்கி உற்சாகப்படுத்திய தாய்க் கவிஞர் இவர். அது மட்டுமன்றி, இலங்கை வானொலியில் முத்துப்பந்தல் என்ற நிகழ்ச்சியின் ஊடாக பல இலக்கியவியலாளர்களை பேட்டிகண்டு அறிமுகம் செய்துள்ளார்.

இலங்கை வானொலி, ரூபவாஹினியில் பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ள இவர், இதுவரை 80 கவியரங்குகளில் பங்குபற்றியுள்ளார். இலங்கை வானொலியில் பதினைந்து கவியரங்குகளுக்கு தலைமைதாங்கி நடத்தியுள்ளார்.

மலையக பெருந்தோட்டத்துறையில் காரியாலய முதல்வராக உத்தியோகம் பெற்று மலையகத்தையே புகுந்தகமாகவும் ஆக்கிக்கொண்டு, 1975ஆம் ஆண்டிலிருந்து நீலாபாலனாக தொடர்ந்து எழுதிவரும் கல்முனை பூபால் 1980களில் உலக கவிதைப் போட்டியொன்றில் முதல் பரிசைப் பெற்றுக்கொண்டார்.

மலையகத்தில் பண்டாரவளை நகரில் கவிதைக்குப் பெருவிழா எடுத்து பல படைப்பாளர்களை பாராட்டி கௌரவித்தார். பாவரசர். கவிமணி, இலக்கிய வித்தகர், தமிழ்மணி, கவிதைப் பரிதி கலைத்திலகம். கலாபூசணம், கவிமாமணி என்று இருபத்து இரண்டு பட்டங்கள் - விருதுகள் பெற்றுள்ளார்.

ஊவா தமிழ்ச் சங்கத் தலைவராக கல்முனை புதிய பறவைகள் கவிதா மண்டல முதல்வராக இருந்துவரும் இவரது நூல்கள் 2010இல் இலந்தைப் பழத்துப் பூக்கள், 2013இல் கடலோரத் தென்னை மரம் என நூலுருவாக்கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது இன்னும் பல படைப்புகள் வெளிவர வேண்டும்.

தனித்துவமான கவித்துவம்
கல்முனை பூபால் நீலாபாலன்
தனித்துவமான கவித்துவம்
கவிதையாய் அகழ்ந்தவர்
தந்தவையெல்லாம்
காலத்தால் அழியாத பொக்கிஷம்
புரியாத மொழியில் இவர் எழுதாதவர்
புழுதிகளை அள்ளி வந்து குவியாதவர்
மனிதகுலம் உயர்வுபெற வழி சொல்பவர்
மறுபடியோர் விதி எழுதும் கவி வல்லவர்

இலகு தமிழ் மொழியில் அவர் கவிதை வந்து கதைக்கும்
அழகு, சுவை, இனிமை பொருள்
அனைத்தும் நிறைந்திருக்கும்
அரங்கேறி வந்தாரேல் வினாக்கள் வெளியாகும்
அச்சில் கவி தந்தாரேல்... அறிவியலே பேசும்
வரகவியாம் அவருடைய மொழி இனிப்புத் தூவும்
வரலாற்றை வென்று அவர் கவிதை நிஜம் வாழும்

பட்டங்கள் பரிசுகள் விருதுகள் பல பெற்றார்
எப்போதும் வீரியமாய் வெற்றிச் சிரிப்புற்றார்
முற்றாக முழுதாக இவர் கவிதைச் சித்தர்
வெற்றி வெற்றி யாய்க் கொய்யும்
வினைத்திறனின் மொத்தம் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியாமி பகிரங்க சர்வதேச டென்னிஸ் தொடர்

## ஆடவர், மகளிர் ஒற்றையர் பிரிவின் சம்பியன்களாக ஹியூபெர்ட் ஹோர்காக்ஸ், ஆஷ்லி பார்ட்டி





அமெரிக்காவில் நடைபெற்று முடிந்த மியாமி பகிரங்க சர்வதேச டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் சம்பியனாக போலந்து நாட்டைச் சேர்ந்த ஹியூபெர்ட் ஹோர்காக்ஸ் தெரிவான அதேவேளை மகளிர் ஒற்றையர் பிரிவின் சம்பியனாக அவுஸ்திரேலிய நாட்டை சேர்ந்த ஆஷ்லி பார்ட்டி மீண்டும் தெரிவானார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தப் போட்டியில் உலக தரவரிசையில் 36 ஆவது இடத்திலிருந்த போலந்து வீரர் ஹியூபெர்ட் ஹோர்காக்ஸ், 19 வயதுடைய இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஜானிக் சின்னரை எதிர்த்தா டினார். விறுவிறுப்பாக அமைந்திருந்த குறித்த போட்டியில் ஜானிக் சின்னரை வீழ்த்தி ஹியூபெர்ட் ஹோர்காக்ஸ் முதல் முறையாக சம்பியன் பட்டத்தை முத்தமிட்டார். மேலும், அவர் இந்த ஆண்டில் கைப்பற்றிய இரண்டாவது பட்டமும் இதுவாகும்.

இதேவேளை, மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் நடப்பு சம்பியனும், உலகின் முதல்நிலை வீராங்கனையுமான அவுஸ்திரேலியாவின் ஆஷ்லி பார்ட்டியும், ஒன்பதாவது நிலை வீராங்கனையுமான கனடாவின் பியன்கா அன்ட்ரீஸ்குவும் மோதினர்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தின் இறுதியில் ஆஷ்லி பார்ட்டி சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டார். மேலும் 35 ஆண்டுகால மியாமி பகிரங்க டென்னிஸ் தொடர் வரலாற்றில் அடுத்தடுத்து சம்பியன் பட்டத்தை வென்ற ஆறாவது வீராங்கனை என்ற பெருமையை ஆஷ்லி பார்ட்டி தனதாக்கிக் கொண்டார்.

## போட்டியின் போது எதிரணி வீரரால் நிறவெறித் தாக்குதல்



## வெளிநடப்பு செய்த வலென்சியா அணியினர்

உதைப்பந்தாட்ட உலகின் பிரபலமான தொடர்களில் ஒன்றான லா-லிகா தொடர் தற்போது ஸ்பெய்னில் நடைபெற்று வரும் நிலையில் குறித்த தொடரில் காடிஸ் மற்றும் வலென்சியா ஆகிய அணிகள் மோதிய போட்டியில் நிறவெறித் தாக்குதல் நடைபெற்றதாக வீரர்கள் வெளிநடப்பு செய்ய போட்டி நீண்ட நேரம் தடைப்பட்டது.




போட்டியின் 30 ஆவது நிமிடத்தில் வலென்சியா அணி வீரரான டியாகாபி காடிஸுக்கு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது. ஆனாலும், தொடர்ந்தும் வாக்குவாதத்தில் அவர் ஈடுபட்டதால் ஏதோ தவறு நடந்துள்ளது என்பது தெரிய வந்தது. அப்போது மஞ்சள் அட்டை பெற்றுக் கொண்ட டியாகாபி காடிஸ் எதிரணி வீரரினால் நிறவெறித் தாக்குதலுக்கு உட்பட்டிருக்கிறார் என்று தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து வலென்சியா அணி வீரர்கள் அனைவரும் மைதானத்தில் இருந்து வெளியேற போட்டி நீண்ட நேரம் தடைப்பட்டது. பின்னர் நிறவெறித் தாக்குதலுக்குள்ளான டியாகாபி காடிஸ் கேட்டுக்கொண்டதற்கிணங்க அணி வீரர்கள் தொடர்ந்து ஆட்டத்தில் பங்கேற்க முடிவுசெய்தனர்.

அண்மைக்காலங்களாக உதைப் பந்தாட்டத்தில் நிறவெறித் தாக்குதல்கள் நடைபெற்ற காரணத்தினால் இதனைத் தடுப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், போட்டியின்போது வீரர் ஒருவரை நிறவெறித் தாக்குதலுக்குட்படுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டு எல்லோரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.




## இலங்கையின் கால்பந்து திருவிழா

### சுப்பர் லீக் 2021 போட்டிகள் 19ஆம் திகதி முதல் ஆரம்பம்

இலங்கையின் 10 முன்னணி கால்பந்து கழகங்கள் பங்குகொள்ளும், இலங்கை கால்பந்து சம்மேளனம் முதன்முறையாக ஏற்பாடு செய்துள்ள, தொழில்முறை கால்பந்துத் தொடரான சுப்பர் லீக் 2021 தொடரானது எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக இலங்கை கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

குறித்த தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன் போட்டிகள் அனைத்தும் ஒரேயொரு மைதானமான கொழும்பு சுகததாச மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடரின் முதல் மூன்று வாரங்களுக்கான போட்டிகள் அனைத்தும் நிறைவு பெற்றதன் பின்னர் மே முதல் ஜூலை வரையிலான இரண்டு மாத காலப்பகுதியில் தேசிய அணியின் பயிற்சிகள் மற்றும் பிபா உலகக் கிண்ண தொடரின் தகுதிகாண் போட்டிகள் என்பவற்றுக்காக நடைபெறவுள்ள சுப்பர் லீக் தொடருக்கு இடைவேளை வழங்கப்படுகிறது.

போட்டிகள் மூடிய மைதானத்தில் நடைபெறுமா அல்லது ரசிகர்களுடன் நடைபெறுமா என்பது தொடர்பில் எந்தவிதமான தகவல்களும் இதுவரையில் வெளியிடப்படவில்லை. எனினும் தொடரின் போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






## மூன்று விளையாட்டுக் கழகங்களுக்கு மேலங்கிகள் வழங்கிவைப்பு





(எப். முபாரக்)

கிண்ணியா கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய திருகோணமலை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பொதுச்செயலாளருமான எம்.எஸ்.சபியுல்லாஹ் (ரமீஸ்) மூன்று விளையாட்டுக் கழகங்களுக்கு தனது சொந்த நிதியிலிருந்து மேலங்கிகள் வழங்கிவைத்தார்.



முள்ளிப்பொத்தானை ஈச் விளையாட்டுக் கழகம், ஹமீதியா விளையாட்டுக் கழகம் மற்றும் முஹமதியா விளையாட்டுக் கழகம் ஆகிய மூன்று கழகங்களுக்கே இவ்வாறு மேலங்கிகள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## டோக்கியோ ஒலிம்பிக்கிலிருந்து வெளியேறியது வடகொரியா !






2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் கொரோனா வைரஸின் பெரும் சவாலுக்கு மத்தியில் எதிர்வருகின்ற ஜூலை மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கு தமது நாட்டு வீரர்களை அனுப்பப் போவதில்லை என வடகொரிய அரசு முடிவுசெய்துள்ளது.

முன்னதாக 1988ஆம் ஆண்டு தென்கொரியாவின் சியோலில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பனிப்போர் காரணமாக வடகொரியா முழுமையாக விலகியிருந்தது. இவ்வாறான நிலையிலேயே இந்த ஆண்டு டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் இருந்தும் வடகொரியா விலகியுள்ளது.

இந்தாண்டு நடைபெறவுள்ள டோக்கியோ ஒலிம்பிக் போட்டியானது வடகொரியா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளுக்கிடையில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் வளர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என தென்கொரியாவின் ஒருங்கிணைப்புத்துறை அமைச்சு ஏற்கனவே கூறியிருந்தது. ஆனால், அது நடக்கவில்லை என வருந்துவதாக தென்கொரியா தான் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

## அக்கரைப்பற்று பதுர் பும் போய்ஸ் இளைஞர் கழகம் மாவட்ட மட்ட போட்டிக்குத் தகுதி

(நூருல் ஹுதா உமர்)

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்படும் 33ஆவது தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டியினை முன்னிட்டு அக்கரைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி அண்மையில் அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் எம்.எம்.ஸமீலுல் இலாஹி தலைமையில் அக்கரைப்பற்று அதாவுல்லாஹ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.



இறுதிப் போட்டியில் கிங் வோரியஸ் இளைஞர் கழகமும், பதுர் பும் போய்ஸ் இளைஞர் கழகமும் மோதின. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பதுர் பும் இளைஞர் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்களை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிங் வோரியஸ் இளைஞர் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்களை இழந்து 35 ஓட்டங்களை மாத்திரம் பெற பதுர் பும் போய்ஸ் இளைஞர் கழகம் மாவட்ட மட்டப்போட்டிக்குத் தகுதிபெற்றது.

## மருதமுனையின் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பங்குகொள்ளும் கிரிக்கெட் சுற்றுத்தொடர் சனியன்று ஆரம்பம்

(றாசிக் நபாயிஸ்)

மருதமுனை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் வீ.ஏ. சலாம் மற்றும் மருதமுனை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் எம்.எப்.கிபத்துல் கரீம் ஆகியோர் இணைந்து முதன்முறையாக மருதமுனை மண்ணில் முன்னாள் வீரர்கள் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுத்தொடரை ஏற்பாடு செய்துள்ளனர்.

இச்சுற்றுத்தொடரின் போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை முதல் மாலை வரை நடைபெறவுள்ளதுடன், போட்டிகள் அனைத்தும் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டுத் தொகுதி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

அணிக்கு 11 பேர் 10 ஓவர்கள் கொண்டமைந்த குறித்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரில் மருதமுனையைச் சேர்ந்த கிங் கோப்ரா, ஈஸ்டன் எக்ஸ்பிரஸ், சுப்பர் ஹீரோ மற்றும் ரோகிங் லயன்ஸ் ஆகிய நான்கு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7